# இருக்கிறம்

மாதம் இருமுறை

ISSN 1800-3699
9771800369000

காத்திருப்பு 4 - இருக்கை 04 ஒரு பொல்லாப்புமில்லை 01-10-2009

50/-



npower ASHES SERIES 2009 ஒரு அலசல்

கிடைக்குமா சம்பள உயர்வு?



இலவச இணைப்பு உள்ளே.

சாமானியனின் சமூக அக்கறை




விளைத்திறன் மிக்க சேவை
நிர்வாகம் மற்றும் பிரஜைகளின்
ஆலோசனை பெறல்
என்பவற்றினூடாக பொருளாதார
வளர்ச்சியினை
மேம்படுத்துவதற்காக பிரதேச
சபை, நகர சபை, மாநகர சபை
என்பவற்றுடன் இணைந்து
செயற்படும் ஒரு உயரிய
அமைப்பே
"இலங்கை ஆசிய நிலையம்"
உள்ளூராட்சி சபைகளின்
வெளிப்படையான தன்மையை
மேம்படுத்தி, சிறந்த பொருளாதார
வளர்ச்சியை பொதுமக்கள்
அடைவதற்கு அர்ப்பணிப்புடன்
பணியாற்றுவதே ஆசிய
நிலையத்தின் முக்கிய
நோக்கமாகும்.

The Asia Foundation




# நாகரிகம்

இந்த வார்த்தைக்கான அர்த்தத்தை மீண்டும் ஒருமுறை விளங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. வேண்டுமானால் இதை இப்போது விளக்கிவைக்க வேண்டிய தேவை எழுகிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம். நாகரிகத்தைக் குறிக்கும் ஊளைடைணையவழை என்ற ஆங்கில வார்த்தை ஊளைளை என்ற லத்தீன் சொல்லில் இருந்து பிறந்தது. பிரஜை அல்லது குடிமகன் என்பதை இவ்வார்த்தை லத்தீனில் குறிக்கிறது. பிரஜைகள் குறித்தும், பிரஜைகள் குறித்துமே நாகரிகம் மேலை நாட்டில் அடையாளப்படுகிறது என்பதை இங்கு புரிந்து கொள்ளலாம். அதைப் புரிந்தபடி எங்கள் நாகரிகத்திற்கு? வரலாம்.

எமது நாகரிகத்தின் தொடக்கத்தை, நாடோடிகளாய் காடுகளில் வேட்டையாடிய இனக்குழும சமூகங்கள் மாற்றமுற்ற காலம் என்று சொல்லலாம். பயிர் செய்யவும், சேமிக்கவும், பகிர்ந்துண்ணவும் பழகிய காலம் அது. வெளிச்சத்தில் வேலை செய்யப் பழகிக் கொண்ட காலம் என்றே அத் தொடக்க காலத்தைச் சொல்ல வேண்டும். (உலகில் விவசாயம் இன்றியே வளர்ந்த நாகரிகங்களை வசதிக்காக இங்கு மறந்து விடலாம்). சுருங்கச் சொன்னால், வெளிச்சத்திற்கு வாழ்வை வரவழைத்த காலம் அது. சமயம் , கல்வி, பொருளாதாரம், பகிர்வு,ஆட்சிமுறை என்று படிப்படியாக தொழில்சார் உலகை நோக்கி அசைந்த காலம் அது. எழுத்துக்களற்ற அக்கால வளர்ச்சியின் உச்சமாய் பின்னாளில் வரிவடிவ எழுத்துக்கள் தோற்றம் பெற்றன. ஓவியங்களையும், பறை ஒலிகளையும் தாண்டி, உருவாக்கப்படுபவனின் கண்களின் எல்லைகளுக்கு அப்பால் செல்ல வல்லனவாய் அவை உருப் பெற்றன. காது வழி பரவும் கர்ண பரம்பரைக் கதைகளை தாண்டிய பதிவுகளாக அவை உருப் பெற்றன. ''மன்னவனும் நீயோ? வள நாடும் உன்னதோ?'' என்று கேட்க வைத்தன. ''யாமார்க்கும் குடியல்லோம்'' என்று நிமிர வைத்தன. அரசையும் ஆட்சியையும் சரிவர வடிவமைக்க உதவின.

''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்''
-448-

என்று குறையை உணர்த்த ''யாருமற்ற அரசு கெடுப்பார் இன்றியே கெடும்'' என்று சொல்ல வல்ல எழுத்தை தோற்றுவித்தது நம் நாகரிகம். விளங்கிக் கொண்டால் சரி.

நாகரிகத்தோடு,
உங்கள் ஆசிரியர்.

01/10/2009

இருக்கிறம்





ஊடக அடக்குமுறைக்கு என்றுமே
அனுமதியளிக்கப்படமாட்டாது.
-ஜனாதிபதி-

# பதிப்பகத்தார்

தென்னாசியப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைச் சேர்ந்த எங்களுக்கு குடும்பம் முழுவதும் அரசியலில் இணையும் வழக்கம் ஒன்றும் புதிதல்ல. சாதி அடிப் படையிலான நிலப்பிரபுத்துவக் கட்டமைப்புக்கு இது அமைவானது. எப்படி என்கிறீர்களா?

ஒரு விவசாயியின் மகன் விவசாயியாகத்தான் இருப்பான். ஒரு மீனவனின் மகன் தானும் மீன் பிடிப்பான்.. இப்படியே ஒவ்வொன்றுக்கும் சொல்லுவது போல, ஒரு அரசியல்வாதியின் மகன் அரசியல்வாதியாகத்தான் இருப்பான் என்று சொல்லுவோம். ஒரு ராசா தனது ஆட்சியை யாருக்குக் கையளிக்க வேண்டும்? அதே போல, ஒரு நிலச்சொந் தக்காரன் தனது ஆயிரமாயிரம் ஏக்கர்களைத் தனது வாரிசுகளுக்குத் தானே விட்டுப் போகவேண்டும்? அந்த நிலத்தில் வேலை செய் பவர்களெல்லாம் தங்கள் உழைப் பின் ஒரு பங்கினை இவன் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பயன்படுத்துகிறார்கள் இல்லையா?

## குடும்ப அரசியல்



"எனது வேலை நாற்று நடுவதும் களை பிடுங்குவதும். உனக்கு முதுகு தேய்த்து விடுவது அல்ல.." என்று சொல்லிவிட்டுப் போக முடியுமா?

இதே பின்புலத்தை ஒரு அரசியல்வாதிக்குப் பொருத்திப் பாருங்கள். அவருடைய பதவிதான் அவர் சொத்து. அது யாருக்குப் போக வேண்டும்? அவருடைய குடும்பத் தவருக்குத்தானே. அந்தப் பதவியின் பயனால் அவருக்குக் கீழே வேலை செய்பவர்கள் அவருடைய சொந்தத் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டியவர்களாவார்கள் இல்லையா? ஜனாதிபதி பிரேமதாஸாவிற்குக் கீழே இருந்த அமைச்சர் ரணசிங்க "நான் அவருடைய காலின் செருப்பாகப் போக வேண்டுமென்றாலும் போவேன்.." என்றார். இன்று ஜனாதிபதி ராஜபக்ஷவிற்குக் கீழ் (அமைச்சரல்லாத ஆனால் அமைச்சராகக்கூடிய) மேர்வின் சில்வா, தனது பொஸ்ஸின் எத்தனை சொந்தத் தேவைகளுக்கான அழுக்கு வேலைகளைச் செய்து "பெயர்" வாங்கியிருக்கிறார்.

இதைப் பார்த்தும், கேட்டும் நாங்கள் சாதாரணமாக ஏளனமாகச் சிரிப்போம். ஆனால் இதெல்லாம் ஒரு மேலோட்டமான உணர்வுதான். எங்கள் உள ஆழத்தில், நாம் இந்த வழக்கங்களையெல்லாம் ஏற்றுக் கொள்கின்றோம். இல்லாவிடில் இவை ஒரு கணம்கூட தொடர முடியாதே. அதைத்தான் சாதி அடிப்படையிலான நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பும் பண்பாடும் என்று நாம் குறிப்பிட்டோம்.

யாரும் ஒரு அரசியல்வாதி இறந்து போகட்டும். உடனே அவ ருடைய மனைவியையோ அல்லது மகன்மாரையோ அவருடைய இடத்துக்குப் போடுங்கள் என்று கேட்பது யார்? நாம்தானே. ஆங்கிலேயர் எம்மை விட்டகன்று சென்ற காலந்தொட்டு இது விடாமல் தொடருவது ஏனென்று நாம் எம்மையே ஒரு தடவையாவது கேட்டிருக்கின்றோமா? அந்த வாரிசுகள் குறிப்பிடத்தக்க முறையில் அரசியலில் தாமும் சாதித்திருந்தால், அது வேறு விஷயம். ஹிலரி கிளின்டன் மாதிரி. ஆனால் எங்கள் பிராந்தியத்தில் ஒரு இடத்திலும் அப்படி நடக்கவில்லையே. ஒரு சின்னப் பதவியையாவது இப்படிப் பண்ணாமல் விடுகின்றோமா என்றால் இல்லை. அன்று மட்டக் களப்பில் பாராளு மன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தர நாயகம் இறந்தபொழுது, அதுவரை அரசியலை எட்டிப் பார்க்காது அப்பாவியாக இருந்த அவருடைய மனைவியை பாராளுமன்ற உறுப்பினர் ஆக்கப் பார்த்தார்கள் நமது சனங்கள். அந்தச் சிறிய எம்பி பதவிக்கும் குடும்பம்தான் வாரிசு, இன்று அகால மரணமடைந்த ஆந்திர



முதலமைச்சர் வை. எஸ். ஆருக்கும் குடும்பம்தான் வாரிசு.

இந்த நேரங்களில் எம்மில் யாருமே மேற்கத்தைய ஜனநாயக நடைமுறைகளில் ஏன் ஒரு போதுமே மகனும் மனைவியும் அரசியலுக்கு வந்ததில்லை என்று ஆராய்ந்ததில்லை. ஏன் எந்தப் பிரபலமான டோனி பிளேயரும், கிளின்டனும், புஷ்ஷும் தங்கள் பதவிக்காலம் முடிந்தவுடன் பதவியிலிருந்து மட்டுமல்ல கட்சிப் பொறுப்புக்களிலிருந்தும் விலகிக் கொள்கிறார்கள் என்று கேட்க வில்லை. அவர்கள் சாகும்வரை தலைவராக இருக்கும், அதன்பின் தமது சந்ததிகளைத் தலைவராக மாற்றும் திட்டங்களெதையும் போடவில்லை. அந்த மக்களுக்கெல்லாம் அப்படியான அரசியல் நடை முறைகளைக் கொண்டு வரமுடியுமென்றால் எங்களுக்கேன் செய்ய முடியவில்லை என்பதுதான் கேள்வி.


அந்தக் கேள்வியில்தான் இன்று எமது நாட்டில் நடக்கும் குடும்ப அரசியல் விடயத்தின் பதிலே இருக்கிறது. இன்று நாட்டின் அதியுயர்ந்த 58 பதவிகளில் ஜனாதிபதி ராஜபக்ஷவின் உறவினர்கள் தாம் இருக்கிறார்கள் என்கிறார்கள். இதன் மூலம் தென்னாசியப் பிராந்தியத்துக்கே இலங்கை ஒரு புதிய ரெக்கோர்டை ஏற்படுத்தியிருக்கிறது. நேரு குடும்பத்தவர்கள்கூட இப்படி இவ்வளவு தூரம் போகவில்லை. ஏனெனில் கூட்டுக் குடும்பம் உட்பட, நாம் நிலப்பிரபுத்துவத்தின் சகல எல்லைகளையும் தொட்டுவிட்டோம். தனியே மனைவி, பிள்ளைகள் மட்டுமல்ல, அத்தை, சித்தப்பாக்கள், ஒன்று விட்ட சகோதரர்கள் எல்லாருமே ஒரு குடும்பமாகக் கணிக்கப்பட்ட சமூகக் கட்டமைப்பல்லவா? அதை அப்படியே தனது அரசியலில் கொண்டிறக்கிய ஜனாதிபதியை உண்மையில் குற்றம் கூற முடியாது தான். ஏனென்றால் நாங்கள் இன்னும் மாறவில்லையே. சொல்லப்போனால், இன்னும் பல நூற்றாண்டுகள் பின்னே போகின்றோமோ என்பது போலல்லவா இருக்கின்றது?

இன்றைய அரசியலில் கோடிக் கணக்கான நிதிகள் சம்பந்தப்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு அரசும், அதன் நிறுவனங்களும் எந்தளவுக்கு வினைத்திறன்களுடன் இயங்குகின்றதோ அந்தளவுக்கு சகல மக்களுக்கும் சுபீட்சம் ஏற்படும் என்பதையும் நாம் அறிவோம். இதில், ஒரு குடும்பத்துக்குள்ளேயே சகல நிதிகளும் முடக்கப்படுவதும், அதை அவர்கள் இன்னும் முறையாகச் செய்வதற்கு ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதும், திறமையும், தகுதியும் இல்லாதவர்கள் பொறுப்பான பதவிகளில் இருப்பதும் நாட்டுக்கும் எங்களுக்கும் எவ்வளவு கேடு விளைவிக்கும் என்பதையும் நாமறிவோம். இருந்தும், ஒரு பண்ணை நிர்வாகம் போல் எங்கள் நாடு நடத்தப்படுவதற்கு நாமும் உடந்தையாக இருப்பது ஏனோ?

இந்த நிலையை மாற்ற நாங்கள் நிறையச் செய்ய வேண்டியதில்லை. எங்கள் மனதால் உண்மைக்கு உண்மையாக இதை நிராகரிக்கத் தொடங்க வேண்டும். திறமைக்கும், தகுதிக்கும், நேர்மைக்கும் உரிய மதிப்புக் கொடுக்கும் விழுமியங்களைப் பேண வேண்டும். அரசியல் கட்சிகள் தமக்குள்ளே ஜனநாயக நடைமுறைகளைக் கொண்டுவர வேண்டும் என்று அரசியல் தலைவர்களை நாங்கள் சந்திக்க நேரும் போதெல்லாம் வலியுறுத்த வேண்டும். யாப்பும் உபவிதிகளுமே கட்சி நிர்வாகத்தை வழிநடத்த வேண்டும் என்கின்ற எங்கள் உள்ளக் கிடக்கைகளைப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும். எங்கள் 15ம் நூற்றாண்டுப் பண்ணையை ஒரு தொழில் நுட்ப முன்னேற்றமடைந்த 21ம் நூற்றாண்டுத் தொழிற்றுறையாக மாற்ற வேண்டும். இவையெல்லாம் நாங்கள் யாசித்தால் மட்டுமே கிடைக்கும் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.



# கிடைக்குமா சம்பள உயர்வு?



## அர்த்தமற்ற வாக்குறுதிகளால் ஏமாறும் மலையகத் தொழிலாளர்கள்

யாதிரா

இந்த நாட்டில் சிறுபான்மையினராகிய நாங்கள் எங்களுடைய எந்த உரிமையையும், சுதந்திரத்தையும் போராட்டம் மூலமும், உண்ணாவிரதம் மூலமுமே பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றோம். தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வைத் தீர்மானிக்கும் கூட்டு ஒப்பந்தத்தின் ஆயுட்காலம் முடிவடைந்து ஐந்து மாதங்களாகிவிட்ட போதிலும், இன்றுவரை அத்தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் மலையக அரசியல் தலைமைத்துவங்களிடம் இணக்கப்பாடுகளோ, விட்டுக் கொடுப்புக்களோ ஏற்படாத நிலையில் சம்பள உயர்வு விவகாரம் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை கானல்நீராகவே இருந்து வருவது போல் தெரிகின்றது. அரசியல் ரீதியாக பிரிந்துநிற்கும் மலையகத் தலைவர்களும், தொழிற்சங்கங்களும், தாம் சார்ந்தவர்களுக்கு விசுவாசம் காட்ட முயற்சிக்கின்றனரே தவிர தொழிலாளர்கள் விடயத்தில் அக்கறையற்ற போக்கையே கடைப்பிடித்து வருகின்றனர்.

மலையக மக்களின் மேல் தாம் பற்றுக்கொண்டவர்களாக காட்டிக்கொள்ள முற்படும் மலையகத் தலைவர்களும், தொழிற்சங்கங்களும் ஏட்டிக்குப் போட்டியாக அறிவிக்கும் சம்பள உயர்வுக் கோரிக்கைகளும் அது தொடர்பிலான நடவடிக்கைகளுமே இன்றுவரை சம்பள உயர்வை நியாயமான முறையில் பெற்றுக்கொள்ள முடியாமைக்கு பிரதான காரணமாகவுள்ளன. இந்த சம்பள உயர்வுப்பிரச்சனை தொடர்பான தேடல்களுக்காக நாம் களத்தில் இறங்கினோம்.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளமாக 500 ரூபா உயர்வுகோரி கடந்த மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட 13 சுற்றுப்பேச்சுவார்த்தைகளில் முடிவில் 500 ரூபா இலக்கு எட்டப்படாமலே 405 ரூபாய் என்ற இணக்கத்திற்கு முதலாளிமார் சம்மேளனத்துடன் தொழிற்சங்கங்கள் புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. இவ் ஒப்பந்தமானது 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் மலையகத்தில் நூற்றுக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இருந்த போதிலும், தோட்டத் தொழிலாளர் களின் சம்பள உயர்வு தொடர்பில்' கடந்த காலங்களில் முதலாளிமாரு டன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு வரும் பிரதான தொழிற்சங்கங்களான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலா ளர் சங்கம், பெருந்தோட்டத் தொழிற் சங்கக் கூட்டமைப்பு என்பன மட்டுமே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வரு கின்றன.


முதலாளிமார் சம்மேளனத்துடன் கடந்த ஒகஸ்ட் மாதம் மேற்கொள் ளப்பட்ட பேச்சுவார்த்தையில் 360 ரூபாய் சம்பள உயர்வு வழங்குவதாக முதலாளிமார் சம்மேளனம் அறிவித்த தையடுத்து, அதிருப்தியடைந்த தொழி ற்சங்கங்கள் பேச்சுவார்த்தையில் இரு ந்து வெளியேறி ஒத்துழையாமை போராட்டத்தில் ஈடுபட்டன. அதற்கு தோட்டத் தொழிலாளர்களும் தமது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கினர்.

இந்நிலையிலேயே தொழிற் சங்கங் கள் முதலாளிமார் சம்மேளனத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையில் 360 ரூபாய் என்ற நிலைமாறி 405 ரூபாய் நாளாந்த சம்பளம் என அறி விக்கப்பட்டது. எனினும் இந்த முடி வில் தொழிற்சங்கத்தினருக்கும் மலை யகத்தில் செயற்படும் ஏனைய தொழிற் சங்கங்களுக்கும், முழுமையான தொரு இணக்கம் காணப்படவில்லை.

இது இவ்வாறிருக்க மிக மோச மாக அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு முன்பாக மேல் தட்டு வர்க்கத்தினாலேயே தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் தினக் கூலி களான அப்பாவித் தோட்டத் தொழி லாளர்களின் நிலை எவ்வாறு இருக்கு மென்பதை சொல்லித் தெரிய வேண்டி யதில்லை. தினமும் வேலைக்குச் சென் றால்தான் அவர்களின் வயிற்றுக்கு ஒருநேர உணவாவது கிடைக்கும். ஆனால், இந்த விட யத்தில் மலையக அரசியல் தலைவர்களும் தொழிற்சங் கங்களும் பொறுப்பற்ற விதத்திலே செயற்பட்டு வருகின்றன. தனியார் துறையினரின் சம்பள உயர்வுகள், அவர்களின் தொழில் நடவடிக்கைகள் தொடர்பில் கட்டுப்படுத்தும், அழுத்தம் கொடுக்கும் அதிகாரம்







அரசுக்குள்ளபோதும் தமது எதிர்கால அரசியல் நலன்களுக்காக தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் பிரச்சினையை அரசும் அரசியல் கண் ணோட்டத்திலேயே அணுகுகின்றது.


தோட்டத் தொழிலாளர்களின் சம் பள உயர்வு தொடர்பில் போராட்டமி ன்றி இதுவரையில் ஒரு சம்பள உயர்வு கிடைத்ததில்லை. கடந்த காலங்களில் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடு பட்டு சம்பள உயர்வை பெற்ற மக்கள் இம்முறை தோட்ட நிர்வாகத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் காந்திய கோட்பாட்டின் படி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒத்துழையாமை போராட்டத் திற்கும் மத்தியில் 405 ரூபாய் சம்பள உயர்வால் அதிருப்தியடைந்த நுவ ரெலிய பிரதேச தோட்டத் தொழி லாளர்கள் கடுமையான முறையில் நடந்து கொண்டதுடன் குறிப்பாக பொகவந்தலாவை நகரில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் காரியால யத்தை அடித்து சேதமாக்கினர். தொழி லாளர்களை கட்டுக்குள் கொண்டு வரும் நோக்கில் பொலிஸார் கண்ணீர் ப்புகை அடித்து ஓட ஓட விரட்டியமை பரிதாபத்துக் குரிய ஒரு விடயமாகும்.

இந்த போராட்டத்திற்கு பின்னால் பல அரசியல் தொழிற்சங்கங்கள் இருப்பதாக பிரதான தொழிற் சங்கங்கள் தெரிவித்தபோதிலும். இலங்கை பொருளாதாரத்தில் அதி கமான அந்நிய செலவாணிகளை பெற்றுத் தரும் தோட்டத் தொழிலா ளர்களுக்கு 500 ரூபாய் பெற்று கொடுக்க முடியாதா? என்ற ஆதங்கம் முறையானதே.

இதேவேளை தோட்டத் தொழி லாளர்களின் சம்பள உயர்வு தொடர் பாக அரசாங்கம் தலையிட வேண்டும் என்று சில தொழிற்சங்கங்கள் வேண்டு கோள் விடுத்தனர். அரசாங்கம் சம்பள உயர்வு தொடர்பில் வெளிப்படையாக செயற்படாத போதிலும் 405 ரூபாய் இணக்கத்திற்கு காரணம் அரசாங் கத்தின் மறைமுகமான தலையீடே என தொழிற் சங்கத்தினர் கூறுகின்றனர்.

இது தொடர்பாக பெருந்தோட்டத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பொது செயலாளர் ஓ.ஏ.ராமையாவை சந்தித்து விபரங்களைக் கேட்டறிந் தோம். •




"எமது 500 ரூபா என்ற இலக்கு 405 ரூபாவில் இணக்கப்பாட்டிற்கு வர அரசாங்கத்தின் அழுத்தமே காரணம். பேரம் பேசும் போது நூற்றுக்கு 100 வீதம் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. சில தொழிற்சங்கங்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர் எங்களது ஒப்பந்தம் அவர்களை கட்டுப்படுத்தாது எனவே அவர்கள் அவர்களுடைய போராட்டத்தை மேற் கொள்ளலாம்." என தெரிவித்தார்.

மலையகத்திலுள்ள அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்கள், சமூக அமைப்புகள், புத்திஜீவிகள் பிரிந்து நின்று குரல் கொடுக்காமல் பொதுவான உடன்பாட்டிற்கு வந்து உரிமைக் குரல் எழுப்ப வேண்டும். தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு மட்டுமல்ல, அரசியல் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதில் கூட அங்குள்ள அரசியல் தலைமைத்துவங்களின் சந்தர்ப்பவாத அரசியலும் ஒற்றுமையீனமுமே பெரும் தடைக்கற்களாக உள்ளன. இவற்றைக் களைந்தெறிந்து விட்டு அனைத்துத் தரப்பினரும் ஓரணியில் திரண்டு நின்றால் தோட்டத் தொழிலாளர்களுக்கு சுபீட்சமான நிலையொன்றை ஏற்படுத்த முடியும். இக்கட்சிகள், சங்கங்கள் பொது இணக்கப்பாட்டிற்கு வருவதன் மூலம் மலையக மக்களை ஒன்றுதிரட்டி வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்தால் தாம் நினைத்தவற்றை சாதித்துக் கொள்ள முடியும். ஆனால், தற்போது உள்ள மலையக அரசியல் தலைமைகள் அரசுக்கு சேவகம் செய்பவர்களாக உறுதியான அரசியல் பாதையில் பயணிக்க முடியாத பலவீனம் கொண்டவர்களாகவே உள்ளனர்.

கடந்த மாதம் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் முத்து சிவலிங்கத்தை பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் சந்தித்த போது...

"நாங்கள் நூதனமான முறையிலேயே இந்த போராட்டத்தை நடத்தினோம். இப்போராட்டத்தில், மக்களும் பாதிப்படையவில்லை. நாட்டின் பொருளாதாரமும் பாதிப்படையவில்லை. நாங்கள் கொழுந்தை தூளாக்கி அனுப்பாமல் வைத்துக் கொண்டிருந்தோம். அதற்கு காரணம் ஒரு அழுத்தத்தை கொடுப்பதற்காகவே.





தொழிலாளர்கள் பம்பர காய்கள் அல்ல. சிறு சிறு கட்சிகள் மக்களை தூண்டி விடுகின்றனர். இப்படி இருந்தும் 95 வீதமான மக்கள் சந்தோஷமாக வேலை செய்கிறார்கள். இவ்வாறு தூண்டி விடுபவர்களினால் மக்களுக்கும் எவ்வித பயனும் இல்லை. தூண்டி விடுபவர்களுக்கும் எவ்வித பயனும் இல்லை" எனத் தெரிவித்தார்.

இவ்வாறான கட்சிகள் தொடர்பில் மலையக மக்கள் தீர்க்கமான சில முடிவுகளை எடுத்தால் மட்டுமே தமது சம்பள உயர்வு மட்டுமன்றி அடிப்படைத் தேவைகள், அரசியல் உரிமைகளைக் கூட வென்றெடுக்க முடியும். தமது நலன்களைக் கவனிக்காத தலைவர்கள் தொடர்பில் மலையக மக்களும் சில மாற்று நடவடிக்கைகளை எடுப்பது அவசியம். தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் மலையகக் கட்சிகளுக்கு மட்டுமன்றி அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் பொறுப்புண்டு. வாக்களிக்கும் இயந்திரங்களாக மட்டும் இம்மக்களை பயன்படுத்தாது அவர்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்திக்கும் போக்கை இனிமேலாவது கடைப்பிடிக்க வேண்டும். எனவே, இனிமேலும் காலம் தாழ்த்தி தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கையோடு விளையாடாமல் அவர்களுக்கு நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை அனைவரும் உணர வேண்டும்.

தம்மைக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்த தொழிற்சங்கங்கள் தமக்கு தந்த பரிசு இதுவா? அல்லது தொழிற்சங்கங்கள் முதலாளிமாரிடம் விலை போய் விட்டார்களா? என்ற கேள்வி பெருந்தோட்ட தொழிலாளர் சமூகத்திடம் எழுந்திருக்கின்றது. தொடர்ந்தும் ஏமாற்றப்பட்ட சமூகமாக இன்னுமொரு விடிவுக்காக 2011ம் ஆண்டை எதிர்பார்த்து காத்திருக்கின்ற இந்த அப்பாவி பெருந்தோட்ட தொழிலாளர்களின் எதிர்கால விடிவு எப்போது? இது இவர்களின் விதியா? அல்லது காலத்தின் சதியா?



# ஜப்பானிய அழகிகளும் நூதன விவசாயமும்

இந்தப் புகைப்படத்தில் தோன்றும் பெண்ணைப் பார்த்தால் முதலில் என்ன தோன்றுகிறது உங்களுக்கு? ஒரு சாதாரண ஜப்பானிய இளம்பெண் என்று தோன்றும்! அதுதான் இல்லை. இந்தப் பெண்ணுடைய பெயர் ஷிஹோ ஃபுஜிதா.சொந்த ஊர் டோக்கியோவின் ஷிபுயா எனப்படும் நகரம்.அடிப்படையில் இந்த பெண் ஒரு வளர்ந்து வரும் இளம் தொழிலதிபர்! இவள் தொழில் பெண்களின் அழகு சாதனப் பொருட்கள் சம்மந்தப்பட்டது.இவள் இணையத் தளத்தில் மிகவும் பிரபலம். இவளுக்கு சமுதாயம் சூட்டிய பெயர் 'ஷிபுயா கால்( Shibuya gal )'

இதுவரை ஃபேஷனுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து வந்த ஷிஹோ சமீபத்தில் விவசாயத்தில் ஒரு பெரிய இணையப் புரட்சியையே ஏற்படுத்தியிருக்கிறாள் என்பது விசேடமான செய்தி! பொதுவாக ஜப்பானிய இளம் பெண்கள் பாடசாலை முடித்தவுடன் பெரு நகரங்களில் வேலை தேடித்தான் பெரும்பாலும் செல்வது வழக்கம். அப்படிப்பட்டவர்களைத் தற்போது விவசாயத் தொழிலில் ஈடுபட ஊக்குவித்து அதில் வெற்றியும் கண்டிருக்கிறாள் வெறும் 24 வயதே ஆன ஷிஹோ ( நம்மவர்கள் கவனிக்க!)

எமது நாள் வார இதழ்களின் அட்டைகளில் அவ்வப்போது காட்சி தரும் நடிகைகள் போல எப்போதும் குட்டைப்பாவாடை, கால்சட்டையுடன் வீதிகளில் வலம்வரும் ஜப்பானிய இளம்பெண்களை நெல் நாற்றுடன் அழகாக நாற்று நடும் கிராமத்து குயில்கள் போல மாற்றிய சாதனை, பெருமை ஷிஹோவை மட்டுமே சாரும்!- அதுமட்டுமல்ல, பாரதி கண்ட புதுமைப்பெண் ஷிஹோ என்பதற்கு ஒரு நல்ல உதாரணம் அவள் விவசாயம் முழுமையாக (உழுதல், செப்பனிடுதல்,நீர்பாசனம் போன்ற அனைத்தையும்) தானே செய்கிறாள் என்பதுதான்!

சரி இது எந்த அளவுக்கு ஜப்பானிய பெண்களிடமும், விவசாயிகளிடமும் மாற்றத்தை கொண்டுவந்துள்ளது என்றால் மிக மிகப் பெரிய அளவில் தான் என்று சொல்ல வேண்டும்! ஏனென்றால் ஷிஹோவின் திறமையைப் பார்த்து அதிக பட்சமாக 24 ஏக்கர் நிலங்களைக்கூட குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள் ஜப்பானிய விவசாயிகள்!

இதன் விளைவாக, ஷிஹோ தற்போது "ஷிபுயா கால்ரைஸ்" எனும் புதிய வகை அரிசியை ஜப்பானில் அறிமுகப்படுத்தி அது தற்போது மிகுந்த வரவேற்போடு சக்கைப் போடு போடுகிறது.

முத்மஹரி வலைப்பூவிலிருந்து

நெல் வயலை நாடி
ஓடிவந்த பெண்கள்



# 3 முட்டாள்கள்

துப்பறியும் நிபுணர் வேலைக்கான இன்டர்வியூவிற்கு மூன்று முட்டாள்கள் வந்திருந்தனர். முதல் முட்டாள் உள்ளே அழைக்கப்பட்டார். அவரிடம் ஒரு புகைப்படம் காட்டப்பட்டது. ஒரு நபரின் பக்கவாட்டில் இருந்து எடுத்த படம் அது. "இவன் ஒரு கிரிமினல். இவனை ஞாபகம் வைத்துக் கொள்ள எதை அடையாளமா எடுப்பீர்கள்? " என்று கேட்டார் இன்டர்வியூ செய்த அதிகாரி. முதல் முட்டாள் சற்றும் தாமதிக்காமல் சொன்னான் - "அவனுக்கு ஒரு கண்தான் இருக்கு. எளியா பிடிக்கலாம் சேர்..."

அதிகாரிக்குக் கோபம் வந்துவிட்டது. "இது என்ன முட்டாள்தனம்? பக்கவாட்டில் எடுக்கப்பட்ட படத்தில் ஒரு கண்தானே தெரியும்? அவனுக்கு இன்னொரு கண் இருக்காது என்று எப்படி முடிவு பண்ணலாம்?" என்று எகிறிவிட்டு அடுத்த முட்டாளை அழைத்தார்.

அவனிடமும் அதே புகைப்படம்... அதே கேள்வி!


"ஹா... இவனுக்கு ஒரு காதுதானே இருக்கு. இந்த அடையாளம் போதுமே!" என்றான் அந்த இரண்டாவது முட்டாள். அதிகாரி தன் தலையில் தானே குட்டிக்கொண்டு அவனைத் துரத்திவிட்டார்.

மூன்றாவது முட்டாள் வந்தான். கேள்வியையும் புகைப்படத்தையும் சில விநாடிகள் மனதில் ஓடவிட்டவர் "அவன் கொன்ரெக்ட் லென்ஸ் போட்டிருக்கிறான் சேர்!" என்றான்.

அதிகாரிக்கு அது புதிராக இருந்தது. இது உண்மையாக இருக்குமோ என்று அந்த கிரிமினலின் பழைய ரெக்கோடுகளைப் புரட்டிப்பார்த்தார். என்ன ஆச்சரியம்! அவன் கொன்ரெக்ட் லென்ஸ் அணியும் பழக்கம் உள்ளவன்தான்!


"என்னால் நம்பவே முடியவில்லை.. அற்புதம். அது எப்படி அவ்வளவு கரெக்டா அவன் கொன்ரெக்ட் லென்ஸ் தான் போட்டிருக்கிறான் என்று சொன்னீங்க?" என்று கேட்டார் அதிகாரி.

மூன்றாவது முட்டாள் சொன்னான் - "இதில் என்ன இருக்கு? அவனால சாதாரண கண்ணாடி அணிய முடியாது. அவனுக்கு ஒரு காது... ஒரு கண்தானே இருக்கு!" என்றான் அவன். ஐயோ! ஐயோ!





எஸ்மீ





**Uniform** என்றால் என்ன அர்த்தம், ஒரே மாதிரியான உடை அணிவதா? Uniform, Uniformity, Uniformly, Unify இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். இந்தச் சொற்களின் தொடக்கத்தில் வரும் அந்த UNIயின் அர்த்தம் ஒன்றுதல் என்பதையும் நாம் எல்லோரும் அறிந்திருப்போம். ஒன்று தல் என்றால் என்னவென்று உங்க ளுக்கு தெரியுமா?

ஒன்றுதல், ஒன்றுபடுதல், ஒன்றாக படிக்க, ஒன்றாக விளையாட, ஒன்றாக சிரிக்க, ஒன்றாக பேச, நான் பெரிசு, நான் அழகு நீ அழகில்லை, நான் வசதியானவன் நீ இல்லை போன்ற வேறுபாடில்லாது, சமஉரிமைகளுடன், ஒன்றாக வாழ வேண்டும். என்பதை சொல்லித் தருவது தான் பாடசாலையில் UNIFORM இன் உண்மையான அர்த்தம்.


வெளிநாடுகளில் பல்வேறிடங்களிலும், பாடசாலையில் UNIFORM இல்லை. ஆனால், ஆசிய நாடுகளைப் பார்த்து, அவர்களும் தங்கள் நாட்டில் இதற்கான திட்டங்களை நடத்தத் தொடங்கியுள்ளார்கள். ஏனெனில். அவர்களுடைய நாடுகளில், பாடசாலைப் பிள்ளைகள் சிறுவயதினிலே வேறுபாடு பார்க்கிறார்களாம். பாடசாலைக்கு என்ன ஆடைகளுடன் வருவது என்று தெரியாது, கவர்ச்சிகரமான ஆடைகளிலும் வருகிறார்களாம்.

இதனால், பாடசாலைகளில் சிறுவர்களுக்குள் ஏற்படும் பின் விளைவுகள் பல்வேறாகவுள்ளது. நல்லொழுக்கம் , நற்சிந்தனை, என்பவற்றை சொல்லித் தரும் இடம் பாடசாலைகள். இதை நம் நாடுகள் நன்றாக அறிந்து வைத்திருப்பதாக வெளிநாடுகளில் நினைக்கின்றார்கள். ஆனால் இங்கே அறியாத வயதில் பாடசாலைக்கு செல்லும் பிள்ளைக்கு அந்தஸ்து, வசதி பார்க்கப்டுகின்றது. uniformளுக்கென பெருந்தொகைப்பணம் அறவிடப் படுகின்றது. இந்நிலையில் uniform பற்றி பிள்ளை எப்படி அறிந்து கொள்ளும்.

# டோஹா விவாதங்கள்




டிம் செபஸ்தியான் பிபிஸியில் நடத்தும் "Hard Talk" நிகழ்ச்சி என்றாலே சூடு பறக்கும் பேட்டிகள் என்று ஒரு காலத்தில் அவர் நிகழ்ச்சி பெயர் பெற்றது. கடந்த ஐந்து வருடங்களாக பிபிஸி டிம் செபாஸ்தியனை வைத்து இன்னுமொரு சரித்திரப் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சியை நடத்தி வருகின்றது. அதுதான் "டோஹா விவாதங்கள்". கட்டாரின் தலைநகர் டோஹாவில் அரங்கேறுவதனால் அதற்கு இப்படிப் பெயர் வைத்திருக்கின்றார்கள். இது பிரசித்தி பெற்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர்களின் விவாத நிகழ்ச்சியைப் போலவே வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பக்கமும் இருவராக வாதிடுபவர்களுக்கு ஒரு கூற்று வழங்கப்படும். அதற்கு அவர்கள் முறையே ஆதரவாகவும் எதிராகவும் வாதாடுவார்கள்.




இஸ்லாமிய உலகின் கலாச்சாரப்புரட்சி!





இப்பேச்சாளர்களை (குறுக்கு) கேள்விகள் கேட்டும் திணறடிப்பார் டிம் செபஸ்தியான். பார்வையாளர்களும் விவாதத்தில் கலந்து கொள்ள அனுமதி உண்டு. கடைசியில் பார்வையாளர்கள் விரும்பிய பக்கத்துக்கு வாக்குகளைப் போடுவதுடன் நிகழ்ச்சி முடிவடையும்.

'ப்பூ' ஒரு சாதாரண விவாதத்தில் என்ன சரித்திரம் இருக்கிறது என்கிறீர்களா? பின்னே இருக்காதா. "இஸ்லாமிய அரசியல் மேற்கு நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றதா?" "அரேபிய மக்களின் ஒற்றுமை செத்தொழிந்த செயலா?" "முஸ்லிம் பெண்கள் தாம் விரும்பும் எவரையும் மணக்க அனுமதிக்கப்படலாமா?" தீவிரவாதத்தை ஒழிப்பதில் முஸ்லிம்கள் தவறிவிட்டார்களா?" "முஸ்லிம் பெண்களின் முகத்திரையானது முஸ்லிம் மக்கள் தாம் வாழும் நாட்டின் ஏனைய மக்களுடன் ஒன்றிணைந்து வாழத் தடையாகுமா?" "அரேபிய முஸ்லிம்கள் மக்களைவிடத் தாங்கள் ஈட்டும் இலாபங்களைப் பெரிதாக மதிக்கின்றார்களா?" என்று இப்படி அரேபிய உலகத்தில் சாதாரணமாக நாங்கள் பேசப் பயப்படுகின்ற விடயங்களையெல்லாம் அங்கேயே இருந்துகொண்டு விவாதிப்பதுதான் இதன் பிரசித்தமாக இருக்கின்றது.

வருடத்துக்கு எட்டுத் தடவைகள் நடக்கும் இந்த விவாதங்களுக்கு பிராந்தியமெங்கிருந்தும் மாணவர்களும் அறிஞர்களும் வந்து குவிகின்றனர். சுதந்திரக் கருத்துப் பரிமாறல்களுக்கான ஒரேயொரு வாய்ப்பாக இது எமக்கு இருக்கின்றது என ரியாத்தின் யமாமா பல்கலைக்கழகத்தின் ஆங்கில விரிவுரையாளரொருவர் தனது பேட்டியில் குதூகலித்திருந்தார். "கட்டார் என்பதனால்தான் இது நடக்கின்றது. இன்னுமொரு அரேபிய நாடு என்றால் விவாதம் செய்தவர்களெல்லாரும் இது வரை ஜெயிலுக்குப் போயிருப்பார்கள்.." என்கிறான் அந்தப் பல்கலைக் கழகத்தின் மாணவனொருவன். 2

லட்சம் மக்கள் மட்டுமே உள்ள சிறிய நாடு இஸ்லாமிய உலகத்துக்கே எடுத்துக்காட்டாக மலர்ந்தது. அதன் ஆட்சியாளர் ஷேக் ஹமாட் பின் கலிபாவினாலும் அவர் மனைவி ஷேகா மோஸாவினாலுமாகும். ஷேகா மோஸா கல்வி விஞ்ஞான மன்றத்தின் தலைவராவார். இந்த மன்றம் என்னவிதமான திட்டங்களைச் செயற்படுத்தலாம் என்று டிம்மிடம் ஆலோசனை கேட்கப் போய் பிறந்ததுதான் டோஹா விவாதங்கள். டோஹா விவாதங்கள் டோஹாவில் மட்டுமல்லாமல் 200 நாடுகளில் 300 மில்லியன் மக்களினால் பார்க்கப்பட்டு வருகின்றது. அதன் இணையத்தளமான www.dohadebates.com மில் மாதத்துக்கு பத்து இலட்சம் பேர் இணைகிறார்கள்.

இந்த நிகழ்ச்சியின் இன்னுமொரு சிறப்பம்சம் என்னவென்றால், அது எதிரிகளாகக் கருதப்படும் இஸ்ரேலியர்களைக்கூட பேச்சாளர்களாக அழைத்திருப்பதுதான். ஒரு தடவை ஹைஃபா பல்கலைக் கழகத்தின் இலான் பப்பேயும் இஸ்ரேலிய பாராளுமன்ற அங்கத்தவரான யொசி பெய்லினும் எதிர் அணிகளில் இருந்து கொண்டு "பாலஸ்தீனியர்கள் தமது தாயகத்துக்குத் திரும்பும் உரிமையை இழந்து விட்டனர்" என்னும் கருத்து குறித்து விவாதித்தனர். இதே போல இஸ்ரேலிய ஜனாதிபதி, அதன் முன்னாள் வெளிநாட்டமைச்சர், கல்வி அமைச்சர் மற்றும் ஹமாஸ் தலைவர்கள் என்று விஐபிக்கள் பலரும் இஸ்ரேலிலிருந்து வந்து கலந்து கொண்டிருக்கின்றனர். "பாலஸ்தீனியர்களுக்கு பாலஸ்தீனியர்களே எதிரிகள்" என்ற தலைப்புடைய விவாதத்தில் பார்வையாளர்கள் உணர்ச்சி பொங்கப் பங்குகொண்டது மட்டுமல்ல அவர்களில் 73வீதத்தினர் ஆமாம் என்றும் வாக்குப் போட்டார்கள்.


இது இஸ்லாமிய உலகத்தில் ஏற்படுத்தியிருக்கின்ற தாக்கமோ ஆழமானது. அங்கு இப்பொழுது பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்று பல இடங்களில் விவாத அரங்குகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ரியாத்தின் யமாமா பல்கலைக் கழகத்தில் "ஆண்களும் பெண்களும் இணைந்து கல்வி கற்பதனால் கல்வித்தரம் முன்னேறும்" என்று கூட விவாதித்திருந்தார்களென்றால் பாருங்களேன். ஒரு கருத்துக்கு எதிர்வாதம் வைப்பதை விட்டு குரலை உயர்த்தி சண்டை பிடித்து எதிர்க்கேள்விகள் போடும் கலாச்சாரத்தில் இது பாலைவனப் பசுந்தரையாக உருவெடுத்திருக்கின்றது. ஒரு கருத்தினைப் பற்றி எழுந்தமானமாக வாதாடாது முறையாக ஆய்வு செய்து நிதானத்துடன் அடுத்தவர் கருத்தையும் அமைதியாகச் செவிமடுத்து ஆணித்தரமாக எதிர்க்கருத்து வைக்கும் நடைமுறைகளைக் கற்றுக் கொடுக்கின்றது. "என்னுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டாம். ஆனால் அதற்கு மதிப்புக் கொடுக்கும் இந்தப் பண்பாட்டினை நான் மதிக்கின்றேன்.." என்றும்

"பெண்கள் கார் ஓட்ட ஏன் அனுமதிக்கப்படக்கூடாது என்பதையே கேள்வி கேட்க எங்களது பெற்றோர்கள் விடுவதில்லை. இப்படியான சர்ச்சைக்குரிய விஷயங்களை நாம் பகிரங்கமாக விவாதிக்கக்கூடாது என்றுதான் சொல்லி வளர்க்கப்பட்டு வந்தோம். ஆனால் இப்பொழுது ஒரு புதுக்காற்று எங்கள் பக்கம் வீசியதுபோல இருக்கின்றது.." என சவூதியைச் சேர்ந்த இளைஞர்கள் தெரிவிக்கின்றனர்.

டோஹா விவாதங்களின் விளைவு இன்னும் பத்து பதினைந்து வருடங்களில் இஸ்லாமிய உலகில் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பிக்கும். அவ்வாறாயின் இது ஒரு கலாச்சாரப் புரட்சிதானே!

சாந்தி





# கலைந்த பக்கங்கள்...

மயில்வாகனம் சர்வானந்தா



## லீலா வினோத மிஸ்

# கே.எஸ் அங்கமுத்து



**1934** இல் வெளிவந்த 'பாமா விஜயம்' பாட்டுப்புத்தகத்தில் கே.எஸ். அங்கமுத்துவுக்கு 'லீலா வினோத மிஸ்' என்ற அடைமொழி காணப்படுகின்றது. அதிகமான படங்களில் நடித்து சாதனை படைத்த நடிகை யாரென இன்று கேட்டால் 'ஆச்சி மனோரமா' என்று சினிமா ரசிகர்கள் கூறி விடுவார்கள். ஆனால் நாற்பது வருடங்களுக்கு முன்னர் அப்படியொரு பெருமை பெற்றிருந்த நடிகை கே.எஸ். அங்கமுத்து.

மௌனப்படங்களில் நடிக்கத் தொடங்கி ஐநூறுக்கும் அதிகமான படங்களில் நடித்த முதல் நடிகை. அதுவும் நகைச்சுவை நடிகை அங்கமுத்து. இவர் நடித்த முதல் மூன்று பேசும் படங்களிலும் இவரே கதாநாயகி. அவை மிஸ் சுந்தரி, கிரக லட்சுமி, குமாரி. நடிப்பதற்காக தான் வசித்த தங்கசாலைத் தெருவிலிருந்து தனது சொந்த மாட்டுவண்டியில் பூந்தமல்லி நெடுஞ்சாலை சவுண்ட்சிற்றி ஸ்ரூடியோவுக்கு வந்த அங்கமுத்து அறுபதுகளிலும் படங்களில் நடிக்க மாட்டுவண்டியிலேயே வந்தார் என சினிமாச் செய்திகள் கூறுகின்றன. இவர் ஐந்து வயதாக இருக்கும் போதே நடிப்பில் ஆர்வம் உள்ளவராக இருந்தார். இவரது ஆர்வத்தைக் கண்ட பி.எஸ். வேலுநாயர் தனது நாடகக் குழுவில் சேர்த்துக் கொண்டார். அதேவேளை சண்முகம் செட்டியாரிடம் நடனப் பயிற்சியையும் பெற்றார் அங்கமுத்து. நாடகக் குழுக்களில் பயிற்சி பெற்ற இவர் மௌனப்படங்களில் நடிக்க ஆரம்பித்தார். அந்நாட்களில் நாடக நடிக, நடிகையர் மௌனப் படங்களில் நடிக்க மறுத்துவந்தனர். வசனம்பேசவோ, பாடவோ முடியாததால் மௌனப் படங்களில் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் அங்கமுத்து அந்த வேளை இருபது மௌனப்படங்களில் நடித்து முடித்திருந்தார். பேசும் படங்கள் வரத்தொடங்கியதும் இவருக்கு வாய்ப்புக்களும் வரத்தொடங்கின. கல்கத்தாவில் நியூ தியேட்டர்ஸ் ஸ்ரூடியோவில் தயாரான நந்தனார் படத்தில் நடித்தார். அதேவளை கல்கத்தாவில் தங்கியிருந்து பயனியர் பிலிம்ஸ் கம்பனி தயாரித்த பாமா விஜயம் படத்திலும் நடித்தார் இது 1933 இல் நடந்தது. பாமா விஜயம் படத்தில் "லீலா வினோதமிஸ் அங்கமுத்து" எற்று நடித்த வேடம் இடைச்சி. இணையாக நடித்தவர் நகைச்சுவை ரத்தினம் எம்.எஸ் முருகேசன் ஆரம்பத்தில் சிறிய வேடங்களிலும் பின்னர் மூன்று படங்களில் கதாநாயகியாகவும் நடித்த பின்னர் நகைச்சுவைப் பாத்திரங்களில் புகழ்பெற்றார். அவ்வாறு அவர் நடித்த சில படங்களை வரிசைப் படுத்தலாம்.

மீரா•பாய், துளசிதாஸ், டம்பாச்சாரி, நல்லதங்காள், மாயா பஜார், .லங்காதகனம், ரத்னா வலி, காலேஜ்குமாரி, மீனாட்சி கல்யாணம், சேது பந்தனம், பிரேம பந்தம் என பலவற்றைக் குறிப்பிடலாம். பின் நாட்களில் சண்டிராணி, தூக்குத் தூக்கி, எங்கள் வீட்டு மகாலட்சுமி, பானை பிடித்தவள் பாக்கியசாலி, கூண்டுக்கிளி, எதிர்பாராதது, டவுன்பஸ், அந்தமான் கைதி, மாமன் மகள் போன்றவற்றிலும் நடித்திருந்தார். பராசக்தி படத்தில்



சிவாஜிகணேசன் கதாநாயகனாக அறிமுகமானார். அப் படத்தின் ஒரு காட்சியில் பழக்காரியாக வரும் அங்க முத்து தனது கூடையை தலையிலிருந்து இறக்கி வைத்துவிட்டு குழாயில் தண்ணீர் குடிப்பார். சிவாஜிகணேசன் ஒரு வாழைப்பழத்தை திருடி உண்பார். இதனைக் கண்ட அங்கமுத்து அவரைப் பிடித்து மொத்து மொத்தென்று மொத் துவார். கனத்த உருவத்துடன் அங்க முத்து அடிக்கும் காட்சி சிரிப்பை யூட்டும் சிவாஜியைப் பார்க்க பரிதா பமாக இருக்கும். "அடங்காப்பிடாரி அங்க முத்து" என்று பட்டம் பெறும் அளவுக்கு வில்லத்தனமாக நடித்தாலும் நகைச்சுவையில்தான் பிரபலமானார். காலேஜ்குமாரி படத்தில் முதன் முதலாக சைக்கிளோட்டிய பெருமை இவருக்கு உண்டு. சண்டிராணி படத்தில் புலியுடன் பயமின்றி நடித்தார். ஒரே நாளில் மூன்று படங்களுக்கு 'கோல் சீட்' கொடுத்த நடிகையும் இவரே. மணிமேகலா, திரைப்படத்தில காய சண்டிகை எனும் பெண்துறவியாக நடித்த அங்கமுத்து திருமணம் செய்து கொள்ளாமலே வாழ்ந்தார். பலருக்கும் பண உதவி செய்த அங்கமுத்து சொந்த வாழ்க்கையில் பணம் சேர்த்து வைக்க நினைக்கவில்லை.சம்பாதித்த செல்வத் தையெல்லாம் சரியாக நிர்வகிக்கா ததால் மாநில அரசு வழங்கிய உதவிப் பணத்திலேயே வாழ்ந்தார். இவரது நிலையை அறிந்த அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர் உதவித் தொகையை இரட்டிப்பாக்கினார். அதைவிட இயல், இசை நாடக விழா ஒன்றில் நேரடியாக பெரும் தொகையை கொடுத்து உதவி னார். அவை அவரது வைத்தியச்செல வுக்கும், உணவுக்கும் பயன் படுத்திக் கொள்ளமுடிந்தது. அதற்குள் காலன் கதவைத் தட்டி விட்டான்.





# காலை வைத்துக் கண்டுபிடி

புதிதாக பல்கலைக்கழகத்தில் சேர்ந்த மாணவன் ஒருவன் விலங்கியல் பாட பரீட்சைக்காக இரவு முழுவதும் கண் விழித்துப் படித் தான். மறுநாள் பரீட்சை எழுதுவதற்காக பரீட்சை மண்டபத்துக்குள் நுழைந்தான். பேராசிரியரின் மேசையின் மேல் உடல் முழுவதும் போர்வையால் மூடிக் கட்டப்பட்டிருந்த பத்துப் பறவைகள் வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பறவைகளின் கால்கள் மட்டுமே வெளியே தெரிந்தன. பரீட்சை நன்றாக எழுத வேண்டும் என்ற எண்ணத்தில் முன் வரிசையில் அமர்ந்தான் அவன். பேராசிரியர் பரீட்சை மண்டபத்திற்கு வந்தார்.

மாணவர்களைப் பார்த்து, "நீங்கள் ஒவ்வொருவரும் மேசையின் அருகே வந்து பறவைகளின் கால்களைப் பார்க்க வேண்டும். அதைக் கொண்டே அவற்றின் பெயர், விலங்கியல் பெயர், பழக்க வழக்கங்கள், சிறப்பியல்புகள் எல்லாவற்றையும் எழுத வேண்டும். இதுதான் பரீட்சை" என்றார்.

ஒவ்வொரு பறவையின் கால்களையும் உன்னிப்பாகப் பார்த்தான் அவன். அவனால் எந்தப் பறவையின் பெயரையும் கண்டுபிடிக்க முடிய வில்லை. இரவு கண் விழித்துப் படித்தது எல்லாம் வீணாயிற்றே என்று கோபம் கொண்டான். பேராசிரியரைப் பார்த்து "இப்படியா பரீட்சை வைப்பது? உங்களைப் போன்ற முட்டாளை நான் பார்த்ததே இல்லை" என்று கத்திவிட்டு வெளியே செல்லத் தொடங்கினான்.

அதிர்ச்சி அடைந்த அவர், அவனை மேலும் கீழும் பார்த்தார்.

வகுப்பில் நிறைய மாணவர்கள் இருந்ததால் அவன் பெயர் தெரிய வில்லை. "உன் பெயர் என்ன?" என்று கேட்டார். "அப்படி வாருங்கள் வழிக்கு" என்ற அவன் தன் ஜீன்சை கால் முட்டி வரை சுருட்டினான். தன் கால்களை அவரிடம் காட்டி, "இவற்றைப் பார்த்து என் பெயரைச் சொல் லுங்கள் பார்ப்போம்" என்றான். இது எப்படியிருக்கிறது?

# கூகிளின் புதிய அவதாரம்

## Google fast flip

எத்தனை நாளுக்கு தான் கூகிலும் நாளிதழ்களின் விரோதி என்னும் முறைப்பாட்டையும் விமர்சனத்தையும் கண்டும் காணாமல் இருக்க முடியும். அதுதான் நாளிதழ்களின் நண்பனாக தன்னை காட்டிக் கொள்ளும் புதிய சேவையை அறிமுகம் செய்துள்ளது.

'பாஸ்ட்பிலிப்' என்னும் பெயரிலான இந்த சேவை நாளிதழ் செய்திகளை விரைவாகவும் சுலபமாகவும் படிக்க உதவுவதாக கூகிள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது பத்திரிக்கைகளை புரட்டிப் பார்ப்பது போலவே இந்த சேவையின் மூலம் செய்திப்பக்கங்களை புரட்டி பார்த்து படிக்க முடியும் என கூகிள் கூறுகிறது.

இந்த செய்தி சேவைக்காக கூகிள் நியூயார்க் டைம்ஸ், வொஷிங்டன் டைம்ஸ் உட்பட பிரபல செய்திதாள் நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

கூகிள் ஏற்கனவே கூகிள் நியூஸ் என்னும்பெயரில் செய்தி சேவையை வழங்கி வருகிறது. இந்த சேவை பிரபலமாக இருந்தாலும் நாளிதழ் நிறுவனங்களால் கடுமையாக விமர்சிக்கப் பட்டு வருகிறது. தங்கள் செய்திகளை எடுத்து வெளியிட்டு கூகிள் விளம்பரம் மூலம் பணமீட்டுவதாக நாளிதழ்கள் சார்பில் குற்றஞ்சாட்டப் படுகிறது.

பொதுவாகவே நாளிதழ்களுக்கு இது சோதனையான காலம் தான். இன்டர்நெட்டின் போட்டி காரணமாக நாளிதழ்களின் வருவாய் பாதிக்கப் பட்டுள்ளது. இந்நிலையில் கூகிளின் செய்தி சேவையை ஒரு சுரண்டலாகவே நாளிதழ்கள் பார்க்கின்றன. தங்கள் உழைப்பை உறிஞ்சித்தின்னும் ஒட்டுண்ணி என்று வால் ஸ்டிரீட் பத்திரிகையின் ஆசிரியர் சமீபத்தில் காட்டமாகவே கூறியிருந்தார்.

இந்த பின்னணியில் தான் கூகிள் பாஸ்ட்பிலிப் செய்தி சேவையை அறிமுகம் செய்துள்ளது. கூகிள் செய்தி சேவைக்கும் இதற்கும் அடிப்படையிலேயே வித்தியாசம் உள்ளது. பாஸ்ட்பிலிப் சேவையில் செய்தி பக்கங்கள் புகைப்படம் போல ஒவ்வொன்றாக கிளிக் செய்வது போல அமைந்திருக்கிறது. ஒவ்வொன்றாக கிளிக் செய்தால் படித்துக்கொண்டே போகலாம்.

இரண்டு காரணங்களுக்காக கூகிள் இவ்வாறு செய்துள்ளது. ஒன்று வழக்கமான செய்தி இணைப்பை காட்டிலும் இப்படி கிளிக் செய்யும் போது பத்திரிகையை புரட்டும் உணர்வை பெற முடியும். அதைவிட முக்கியமாக பக்கங்கள் டவுண்லோட் ஆவதும் விரைவாக இருக்கும்.

செய்தி தளங்களுக்கு செல்லும் போது குறிப்பிட்ட பக்கங்கள் டவுண்லோட் ஆவது தாமதமாவதே இணைய வாசிகள் அதிக நேரம் செய்தி தளங்களில் தங்காததற்கான காரணமாக கருதப்படுகிறது. மாறாக புரட்டிப் பார்க்கும் வசதியோடு விரைவாக படிப்பது சாத்தியமானால் இணையவாசிகள் அதிகநேரம் செலவிடுவார்கள் என்று கூகிள் எதிர்பார்க்கிறது. இதனால் அதிக விளம்பரங்களை வெளியிட முடியும்.

செய்தி சேவையில் கூகிள் விளம்பர வருவாயை தானே வைத்துக் கொண்டாலும் பாஸ்ட்பிலிப் சேவையில் வருவாயை நாளிதழ்களோடு பகிர்ந்து கொள்ள முன்வந்துள்ளது. அதாவது இணைந்து சம்பாதிப்போம் என கூகிள் நாளிதழ்களோடு கைகோர்த்துள்ளது.

பத்திரிகைகளை படிக்கும் அனுபவத்தையும் வசதியையும் இன்டர்நெட் தொழில்நுட்பத்தோடு இணைந்து தரும் வசதியாக கூகிள் இதனை வர்ணித்துள்ளது. இந்த சேவை வெற்றி பெற்றால் நாளிதழ்களுக்கு வருவாய் வருவதோடு கூகிள் மீதான விமர்சனமும், கோபமும் குறையும். மேலதிய தகவல்களை அறிந்து கொள்ள இங்கே சென்று பாருங்கள்.

**http://fastflip.googlelabs.com/**



"ஆறும் அது ஆழமில்ல..அது சேரும் கடலும் ஆழமில்ல.. ஆழம் எது ஐயா இந்த பொம்பள மனசு தானையா..."

ஒரு பெண்ணின் மனசின் ஆழம் அறிந்தவர் இல்லை என்று நிலவும் நம்பிக்கையைக் குறித்து எழுதிய சினிமாப் பாடல் இது. ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே மூளைத் தொழிற்பாடு இருக்கின்ற சமயத்தில் பெண்ணின் மனதின் ஆழத்தை மட்டும் மனிதர்கள் பேசிக்கொண்டது ஏனோ?

இக்கேள்விக்கு ஒரு வரியில் பதில் கூறுவதானால் பெண்ணின் பாலியல் தன்மை (sexuality) எனலாம். இது காலந்தோறும் ஆண்களுக்குப் பெரும் புதிராக இருந்திருக்கிறது. பாலியல் உறுப்புக்கள் ஆண்களுக்கு வெளியிலும் பெண்களுக்கு உள்ளேயும் அமைந்திருப்பதால் இந்தக் குழப்பம் தோன்றியிருக்கக்கூடும். பெண்களுக்கு அதீத பாலியல் கட்டுப்பாடுகளை சமூகம் விதித்திருந்ததனால் அவர்கள் தங்கள் உள்ளக்கிடக்கைகளை வெளியே சொல்ல மிகவும் தயங்கியிருப்பார்கள். அவர்கள் உண்மையில் என்ன உணர்வுகளை அடக்கி வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய இயலாமல் இருந்திருக்கும். அதனாலும்



# கணவன் மனைவி பற்றிய புதினங்கள்

பெண்களின் மனசு ஆழம் என்கின்ற ஐதீகம் வந்திருக்கலாம். ஆண்களே, உங்கள் பார்ட்னர்களை நீங்கள் எந்தளவுக்கு புரிந்து வைத்திருக்கிறீர்களோ அந்தளவுக்கு உங்கள் அன்பு வாழ்வு இனிக்கும். இதனால் பெண்களின் மனசிலுள்ள விஷயங்களைப் பற்றிய இந்தப் புதிரை நாங்கள் மெல்ல அவிழ்ப்போமா?

முதலில் பெண்களுடைய பாலியல் உறுப்புக்களைப் பற்றி அறிந்து கொள்வோம். இவை வயிற்றின் அடிப்பாகத்தில் முடி நிறைந்த மேட்டுப்பாகத்துடன் ஆரம்பிக்கின்றது. இதனை ஆங்கிலத்தில் "Mount of Venus" என்பார்கள். வீனஸ் காதல் கடவுள் என்பதனால் வீனஸ் மேடு என்று இதற்குப் பெயர் வந்தது. இந்த மேடு தொடைகளுக்கு இடையில் சரிந்து செல்லும் பகுதி வெளி இதழ்களாகும். இவற்றிற்குக் கீழே உட்பக்கத்தில் உள் இதழ்கள் காணப்படும். சாதாரணமாகப் பார்க்கும்போது லைட் பிங்க் நிறமாகக் காணப்படுபவை உணர்ச்சிகளினால் தூண்டப்படும் சமயங்களில் கடும் மரூன் நிறத்தில் பருத்து வீங்கிக் காணப்படும்.

உள் இதழ்கள் வீனஸ் மேட்டிற்கு ஏறி அதன் அடியில் ஒரு குடை போல் கூராகக் கவிந்திருக்கும். இதற்கு அடியில்தான் "Clitoris" என்று சொல்லப்படும் அங்கம் காணப்படும். இதனை நாம் சுருக்கமாக Clit என்று அழைப்போமே. Clit ஒரு ஆண் குறியை ஒத்த மென்சவ்வுகளால் ஆனது அதன் சமாந்திரமான உறுப்பு என்றுகூடச் சொல்லலாம். அதைப்போல நூற்றுக்கணக்கான கூருணர்வு மிக்க நரம்புகளைக் கொண்டது. பெண்கள் உச்சக்கட்ட உணர்வு பெறுவதற்கு இது மிக முக்கியமான உறுப்பாகும். இன்னும் சொல்லப்போனால், தனியே பாலியலின்ப உணர்வுகளுக்கென்றே உருவாக்கப்பட்ட ஒரேயொரு அங்கம் இது. அதற்கு வேறு இயக்கம் இல்லை. இப்படியாக இன்பத்துக்கு மட்டுமென்றே உருவாக்கப்பட்ட அங்கம் ஆண்களுக்குக்கூட இல்லை. பெண்களுக்கு பாலியலுணர்வுகள் குறைவு ஆண்களுக்குத்தான் அதிகம் என்று பொதுவாக சொல்லப்படுவதெல்லாம் உண்மையில்லை என்பதை இது நிறுவுகிறது. செக்ஸ் இன்பத்தைத் துகிப்பதற்கு ஆண்டவர் பெண்களுக்கு மட்டும் தானே விசேடமான உறுப்பினைக் கொடுத்திருக்கிறார்? இதிலிருந்து ஆண்கள் பொதுவாக கட்டறுந்த காளைகள் போல செக்ஸ் அனுபவங்களை நாடுவது அவர்கள் நடத்தைக்கு சமூகம் கொடுத்திருக்கும் அங்கீகாரத்தினால் தான் என்பதை அறிந்து கொள்ளலாம். சுருங்கக் கூறில் இது ஒரு சமூக மயமாக்கப்பட்ட ஆண்கள் நடத்தையாகும்.

'Clit'க்குக் கீழே சிறுநீர் கழிக்கும் துவாரம் இருக்கிறது. இது மூத்திரப் பையுடன் தொடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்களுடன் ஒப்பிட்டால் பெண்களுக்கு மிகவும் குட்டையான

குழாயே மூத்திரப்பையுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இதனால்தான் சிறுநீர் குழாய் குறித்த தொற்றுக்கள் பெண்களுக்கு சீக்கிரம் ஏற்படுகின்றன. இந்த குழாய்க்குக் கீழே சென்றால் கருப்பைத் துவாரமும் அதற்கு இட்டுச் செல்லும் Vagina எனப்படும் குழாயும் காணப்படும். சாதாரணமாக Vagina பின்னால் 3 அங்குல நீளமும் முன்னால் இரண்டரை அங்குல நீளமும் உள்ள குழாயாகும். இதன் சுவர்கள் பல மடிப்புக்கள் கொண்டு எந்த அளவுக்கும் பொருத்தமாகத் தன்னைப் பெருப்பிக்கும் தன்மை கொண்டது. ஒரு குழந்தையைக்கூட தன்னூடாகச் செலுத்தும் வல்லமை பொருந்தியதல்லவா? உணர்வுகள் தூண்டப்பட்ட சமயத்தில் இது நீண்டு பெருத்துக் காணப்படும். இதன் பெருப்பமும் இதன் வித்தியாசமான பாகங்களில் வித்தியாசமாக இருக்கும்.



மேற்கூறிய இந்த Vaginaவில் ஒரு இடம் இருக்கிறது. அதைத் தீண்டிவிட்டால் பின்பு பெண்கள் தங்கள் சுயநினைவைக்கூட இழந்து விடுவார்களாம் அந்த அளவுக்கு உணர்வூட்டும். இதனை "ஜி" புள்ளி என்பர். இதனைக் கண்டு பிடித்த கிராபென்பேரக் என்பவரின் பெயரைக் குறித்தே இது ஜி புள்ளி என்று அழைக்கப்படலாயிற்று. இது நரம்புக் குவியலும் சுரப்பிக்குவியலும் மயிர்த்துளை நாடிகளும் கொண்ட இடமாகும். இதை வாசலிலிருந்து மேற்புறமாக ஒரு இரண்டு அங்குலத்துக்குள் கண்டு பிடிக்கலாம். இலேசமான சொர சொர தோலுடன் தடித்துக் காணப்படும். உணர்வுகள் தூண்டப்படும்பொழுது ஜி புள்ளி வீங்கி சுவரிலிருந்து துருத்திக்கொண்டு இருக்கும். ஆண்களில் இருப்பதைப் போன்ற திரவ வெளியேற்றம் பெண்களுக்கும் இருக்கின்றதாம் நம்புவீர்களா? உச்சக்கட்ட உணர்வினை எட்டும்பொழுது பெண்களும் திரவமொன்றினை தமது ஜி புள்ளியிலிருந்து வெளியேற்றுகிறார்கள். இந்தத் திரவமும் ஆண்களின் திரவத்தையொத்த அமைப்பைக் கொண்டிருக்கிறது.




இவ்வளவு சொல்லப்பட்டிருக்கிறது ஆனால் முக்கியமாகப் பெண்களின் மார்பகங்களைப் பற்றிச் சொல்லவில்லையென்று பார்க்கிறீர்களா? மார்பகங்கள் பாலியலுணர்வின் சின்னமாக எங்கள் கலாசாரத்தில் உருவாக்கப்பட்டதற்கென்ன, அதற்கு அந்த அளவிற்கு முக்கியத்துவம் ஒன்றும் கிடையாது. இதுவும் சமூகத்தின் சிருஷ்டியிலொன்று என்பதை அறிந்து கொள்ளுங்கள். மார்பகங்களின் காம்புகள் சில பெண்களுக்கு உணர்வுகளைத் தூண்டுபவையாக இருக்கலாம். மென்மையான ஸ்பரிசத்தின் மூலம் இவர்களுக்கு இன்பம் அளிக்கலாம்.

ஆண்களினதும் பெண்களினதும் பாலியல் உறுப்புக்களைப் பார்க்கும்போது இவர்களுக்கிடையிலுள்ள ஒற்றுமைகள் எம்மை வியக்கவைக்கின்றன. உலகின் மரபணுக்களின் பரம்பல் அதிகூடிய அளவு ஏற்படவேண்டுமென்ற நோக்கத்தில் சற்றே பெண்ணுக்கு வேறுபாடாக இயற்கை படைத்த விலங்கு ஆண். இதில் கருப்பை ஒன்றுதான் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இருக்கும்



உண்மையான வேறுபாடு என்று கூறலாம். அதற்குள் சமூகம், ஒன்றை வீரம் என்றும் மற்றதை நாணம் என்றும் ஒன்றைத் தலைவன் என்றும் மற்றதை பேதை என்றும், ஒன்றை ஆன்மீகம் என்றும் மற்றதை லௌகீகம் என்றும் எப்படி வித்தியாசம் பாராட்டிப் பிரித்து வைத்திருக்கிறது! இது இயற்கையினால் நிர்ணயிக்கப்பட்டது என்று அனேகம் பேர் நம்பும் அளவுக்கு எவ்வளவு கெட்டித்தனமாக எங்கள் மூதாதையர் மத நம்பிக்கைகள் மூலமும் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் மூலமும், ஒழுக்க அச்சுறுத்தல்கள் மூலமும் வேலை செய்திருக்கின்றனர் பார்த்தீர்களா?

**Mrs. காதலி**




ஒரு பொல்லாப்புமில்லை

# இருக்கிறம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 04 - இருக்கை 04

#3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 11 3150836 +94 11 2506272
தொலைநகல்: +94 11 2588190
மின்னஞ்சல் irukiram@gmail.com

ஸ்தாபக ஆசிரியர் :
இளையதம்பி தயானந்தா

நிர்வாக ஆசிரியர் /ஆசிரியர் :
சாந்தி சச்சிதானந்தம்

இணை ஆசிரியர் :
அருளானந்தம் சஞ்ஜீத்

ஆசிரியர் குழு :
பஸ்லான் மொஹமட்

ஓவியர் :
சஞ்ஜீத்

முதன்மை வடிவமைப்பு :
முஜீன்நாத்

வடிவமைப்பு :
சோ.விபுலன்
செ. ஜெயதேவன்
திவாகரன்

புகைப்படம் :
பா.கரன்
சோ.விபுலன்

கணனி தட்டச்சு :
எஸ். சதீஸ்



கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.






# இலங்கை வலைப்பதிவர்களின் இனிய ஒன்று கூடல்

நூலகம்

A.R.V.லோஷன்

இலங்கையிலிருந்து Blog என்று சொல்லப்படும் வலைப்பதிவுகள் பதிந்து வரும் இலங்கை வலைப்பதிவர்களின் சரித்திரபூர்வமான சந்திப்பொன்று முதற் தடவையாக கொழும்பில் நடைபெற்றது.

கடந்த ஓகஸ்ட் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை கொழும்பு தமிழ் சங்கத்தின் வினோதன் ஞாபகார்த்த மண்டபத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இலங்கையில் இவ்வாறான சந்திப்பொன்று இடம்பெற்றது இதுவே முதல் தடவையாகும்.(இணைய வழியாகவும் பல bloggers இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்)




வந்தியத்தேவன் (மயூரன்), லோஷன், புல்லட் (பவன்), ஆதிரை (ஸ்ரீகரன்) ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் 80க்கும் அதிகமான வலைப்பதிவர்கள், வாசகர்கள், ஆர்வலர்கள் என்று பலபேர் கூடினர். மண்டபம் நிறைந்த பதிவர்கள் மற்றும் ஆர்வலர்கள் இந்நிகழ்வு ஏற்பாட்டாளர்களின் சிறந்த ஒழுங்கமைப்பைக் கோடு காட்டியிருந்தது.

மூத்தவர்கள் தொடக்கம், 11 வயது இளையவன் வரை வந்திருந்தார்கள். யாழ்ப்பாணம், மன்னார், கிழக்கு மாகாணம், பதுளை, கண்டி, புத்தளம் என்று நெடுந்தொலைவிலிருந்தும் ஆர்வத்துடன் பலர் வந்திருந்தனர்.

Blogger ஆரம்பித்த 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இங்கு கொண்டாடபட்டது என்பது ஒரு தற்செயலான ஒற்றுமையான விடயம். அதையும் கேக் வெட்டிக் கொண்டாடினார்கள். எழுந்தமானமாகத் தெரிவு செய்யப்பட்ட 10 பதிவர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி















வைக்க, மூத்த வர்களான திரு.அந்தனி ஜீவா, கவிஞர் திரு.மேமன் கவி, சிறப்பு விருந்தினரான திரு.எஸ்.எழில்வேந்தன் மற்றும் வலைப்பதிவாளர் டொக்டர் ஜீவராஜ் ஆகியவர்கள் கேக் வெட்டி னார்கள்.

மருதலூரான், எழில்வேந்தன், சேரன் கிரிஷ், லோஷன் ஆகியோர்களின் உரைகளைத் தொடர்ந்து விவாதங்களுக்குள் நுழைந்தார்கள், நேரடியாகப் பங்கு கொண்டவர்களும் இணை யத்தில் இருந்தவர்களும். தமிழில் தட்டச்சு செய்வது பற்றி காரசாரமாக விவாதித்தார்கள். இலங்கைப் பதிவாளர்கள் அதிக ளவில் இலங்கையில் பயன் பாட்டில் இல்லாத சொற்க ளைப் பயன்படுத்துவது பற்றி விமர்சிக்கப்பட்டது. புனை பெயர்களில் எழுதுபவர்கள் பற்றியும் கொஞ்சம் விவாதித் தார்கள். யாழ்தேவி என்ற பெயரில் உள்ள திரட்டி இலங் கைப் பதிவர்கள் அனைவரு க்கும் பொது வான பெயராக இருக்க முடி யாது என்ற வாதம் நியாய மானதாகப்படு கிறது.

சுபானு வலைப்பதிவுகளும் சட்டமும் பற்றி கொடுத்த விளக் கங்கள் சிலபேருக்குத் தெரிந்தும் பலபேருக்குப் புதியதாகவும் இருந்தது. மருதலூரான் திரட்டி பற்றி விளக்கினார். சேரன் கிரிஷ் தொழில்நுட்ப விளக்கங்கள் தந்தார். அனுகமுடியாதளவு பயமாக இருந்த சில பிரமாண்ட விஷயங்களும் தொழில்நுட்ப அறிவின் ஆரம்பக் கட்டத்தில் இருப்போர் கூட மிக எளிதாக புரியக் கூடியதாக தரப்பட்டது.

மதுவதனின் கைவண்ணத்தில் ஊரோடி பகியும் சேர்த்து நேரடி ஒளிபரப்பை மேற்கொண்டது சந்திப்பின் உச்சக்கட்டம். பல பிரபல மிகப்பிரபல சர்வதேசப் பதிவர்கள் ஒருவரையொருவர் நேரடியாக பார்த்ததோடு தங்கள் கருத்துக்களையும் உடனுக்குடன் பதிவு செய்தார்கள்.

பிரபல ஒலி ஒளிபரப்பாளரும் கவிஞருமான திரு எழில்வேந்தன் சிறப்புரையாற்றினார்.இந் நிகழ்வில் சிங்கை நாதனின் மருத்துவ சிகிச்சைக்கும் நிதி சேகரிப்பு பற்றியும் அறிவித்தல் கொடுக்கப்பட்டது. பல பயனுள்ள விஷயங்கள் பேசப்பட்டதாக, அடுத்த ஆரோக்கி யமான சந்திப்புக்களுக்கு முதலடி போடுவதாக பதிவர்களின் முதலா வது சரித்திர்பூர்வ சந்திப்பு நிறைவடைந்துள்ளது.. (விழாவை வந்தியத் தேவன் தன்னுடைய பின்னூட்டத்துடன் முடித்து வைத்தார்)

இந்தப் பதிவர் சந்திப்பைத் தொடர்ந்து இலங்கைப் பதிவாளர்கள் அத்தனை பேரையும் இணைக்குமுகமாகவும், பொதுவான சில தொழில்நுட்பப் பிரச்சினைகளை கலந்தாலோசித்து தீர்வுகள் பெறு வதற்காகவும் ஒரு அமையம் / குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் இணைய விரும்பும் பதிவர்கள், புதிதாய் வலைத்தளம் ஆரம்பிப்போர் கீழே தரப்பட்டுள்ள முகவரியூடாக தம்மை பதிவு செய்து இணைய லாம்.

**http://groups.google.com/group/srilankantamilbloggers**





ஜப்பானை சேர்ந்த டோஷிபா நிறுவனம் உலகின் முதல் 64 GB மெமரி கார்டினை வெளியிட்டுள்ளது. இதன் விலை 630 டொலர்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 35 MB Per Second வேகத்தில் தகவல்களை எழுதவும், 60 MB Per Second வேகத்தில் தகவல்களை படிக்கவும் முடியும் . இது எதிர்வரும் நவம்பர் மாதம் விற்பனைக்கு வரலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

## சாமானியனின் சமூக அக்கறை

தீவிரவாதத்துக்கு தீவிரவாதத்தினாலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்ற ஒருவரிக்கதையை எடுத்துக்கொண்டு 5 மணித்தியாலங்களுக்குள் ஒரு சாதாரண மனிதனின் சமூகத்தின் மீதுள்ள அக்கறையை சொல்லியிருக்கிறது உன்னைப்போல் ஒருவன். 'ஏ வெட்னஸ்டே' என்ற ஹிந்தி படத்தின் மீள் தயாரிப்பாக வந்திருக்கும் உன்னைப்போல் ஒருவன் அதிரடி, வேகம் என்ற திரைக் கதையின் வெற்றியுடன் இந்தியச் சினிமாவுக்கு உண்டான அலட்டல்கள் இன்றி வந்திருக்கும் இந்த வருடத்தின் நல்ல படங்களில் ஒன்று.

ஹிந்தியில் நஸ்ருதீன் ஷாவும், அனுபம் கேரும் முக்கிய பாத்திரங்களில் நடித்திருக்க ஏ வெட்னஸ்டேயினை திரைக்கதை எழுதி இயக்கியிருந்தார் நிராஜ்பாண்டே. அதே திரைக்கதையை பெரிய மாற்றங்கள் செய்யாமல் தமிழ்நாட்டு சூழலுக்கு எற்ப சிறு மாறுதல்களுடன் கொடுத்திருக்கிறார் கமல்ஹாசன். படத்தினை சக்ரி டோலாட்டி என்ற புதிய இயக்குனர் எந்தவித ஆர்ப்பரிப்புக்களுமின்றி இயக்கியிருக்கிறார். வசனகர்த்தா இரா.முருகன், இசையமைப்பாளர் ஸ்ருதிஹாசன் போன்றவர்கள் மூலம் தமிழ்சினிமாவுக்கு புதிய குழுவை அறிமுகப்படுத்தியிருக்கிறது உன்னைப்பேரல் ஒருவன்.





# உன்னைப்போல் ஒருவன்


சென்னையில் வாழும் பொது மகனான கமல் தன்னுடைய அறிவுக்கு எட்டிய யுத்திகளை பயன்படுத்தி வெடிகுண்டை தயாரிக்கிறார். அந்த வெடிகுண்டுகளை சென்னையின் முக்கிய சனநடமாட்ட பகுதிகளான தொடரூந்து கடைத்தொகுதி பொலிஸ் நிலையம் என்று பல இடங்களில் வைக்கிறார். பின்னர் சந்தைக்கு சென்று மனைவி சொல்லியனுப்பிய காய்கறிகளை பைகள் நிறைய வாங்கிக் கொண்டு சென்னையில் புதிதாக கட்டப்பட்டு வரும் தொடர் மாடியொன்றின் மேல்தளத்துக்கு செல்கிறார். அங்கு சென்று தன்னுடன் கொண்டு சென்ற பை ஒன்றிலிருந்து மடிக்கணனி தொலைக்காட்சி அலைபேசிகள் என்று நவீன தொடர்பாடல் கருவிகளை தயார் செய்கிறார்.

அதன் பின்னர் சென்னை மாநகர பொலிஸ் ஆணையாளராக இருக்கும் மோகன்லாலுக்கு அலை பேசியில் அழைக்கும் கமல் நகரத்தில் முக்கிய பகுதிகளில் குண்டை வைத்திருப்பதாக கூறுகிறார். அவற்றை செயலிழக்க செய்ய வேண்டுமாயின் அரை மணித்தியாலத்துக்குள் தன்னுடன் பேச்சு வார்த்தைகளை நடத்த அரசாங்கத்தின் முக்கிய பிரதிநிதியை நியமிக்குமாறு கேட்டுவிட்டு அழைப்பை துண்டிக்கிறார். சிறிய

நேரத்துக்குள் மீண்டும் தொடர்பில் வரும் கமல் தன்னுடன் பேச்சுக்களில் ஈடுபடப்போவது யார் என்று கேட்கிறார். அதன்பின்னர் மோகன்லாலுக்கும் கமலுக்கும் இடையில் நடக்கும் அலைபேசி பேச்சுக்களும் அப்போது கமல் வைக்கும் கோரிக்கைளும் அதன் விளைவுகளும் இவற்றின் முடிவுமே 102 நிமிடங்கள் நீளும் உன்னைப் போல் ஒருவனின் இறுதிக்காட்சிகள்.


(படத்தின் கதையோட்டத்தை சொல்லிவிட்டால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு வெகுவாக குறைந்து விடும் அதனால் இவ்வளவுடன் போதுமென்று நினைக்கிறேன்.)

திருவாளர் பொதுமகனாக வரும் கமல் படம் முழுவதிலும் மொட்டை மாடியில் இருந்து கொண்டே ஆச்சரியப்படுத்துகிறார். அதுவும் இறுதிக்காட்சிகளில் அவர் தொடர் மாடியிலிருந்து இறங்கி வந்து மோகன்லாலுடன் பேசுவது வெகு இயல்பு. அவரிடமிருந்து இவ்வாறான பாத்திரம் வெளிப்பட்டு நீண்ட நாட்களாகிவிட்டது. யதார்த்த மீறல்கள் இன்றி அசத்துகிறார். பொலிஸ் ஆணையாளராக வரும் மோகன்லால் படம் முழுவதிலும் தனது அழுத்தக் குரலினாலும் பொலிஸ் அதிகாரிகளின் நடவடிக்கைகளில் வரும் அரசியல் தலையீடுகள் குறித்தும் வருத்தப்பட்டும் நடித்திருக்கிறார். அதுவும் தமிழ் நாட்டின் தலைமைச் செயலாளராக வரும் லட்சுமியுடன் பேசும் போது மிகவும் அழகு.



படத்தில் பொலிஸ் அதிகாரிகளாக வந்து கலக்கியிருக்கும் இரண்டு நடிகர்கள் குறிப்பிட்டு சொல்லப்பட வேண்டியவர்கள். ஒருவர் அபியும் நானும் திரைப் படத்தில் சர்தார்ஜியாக வந்து திரிஷாவை கைப்பிடிக்கும் கணேஷ் வெங்கட்ராம். தன்னுடைய அதிரடி விசாரணை மூலமே குற்றவாளிகளை கதிகலங்க வைக்கிறார். அதிலும் இறுதிக் காட்சியில் அசத்துகிறார். மற்றவர் பரத் ரெட்டி. நல்ல நெடுநெடு தோற்றம் மனைவியுடன் பேசும் பொது செல்லம் கொஞ்சுவதும் தன்னுடைய தொழில் முறை பேச்சுக்களில் ஆர்ப்பரிப்பதும் அழகு. தமிழ் சினிமாவுக்கு இந்த இருவரும் நல்வரவுகள். தொலைக்காட்சி தொகுப்பாளினியாக வந்து அசால்டாக சிகரட்டை புகைத்துக்கொண்டு படம் முழுவதிலும் திரும்பிப்பார்க்க வைக்கும் மற்றுமொருவர் அனுஜா. லட்சுமி, சிறிமன், சிவாஜி சந்தானம், சந்தான பாரதி என்று படத்தின் சிறிய காட்சிகளில் வருபவர்களும் தங்களது பாத்திரங்களை நிறைத்துச் செல்கிறார்கள்.

ஒளிப்பதிவு மனோஜ்சோனி. தொடர் மாடி காட்சியையும் பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்தையும் வெகு இயல்பாக காட்சிப்படுத்தியிருக்கிறார். படத்தின் காட்சிகள் ஒரே தளத்துக்குள் மீண்டும் மீண்டும் சுத்தி வந்துள்ள போதிலும் இரசிகர்களுக்கு அலுப்பை உண்டாக்காமல் காட்சிப்படுத்தியிருக்கிறார். படத்தொகுப்பு ரமேஸ்வர் பகவத் வேகமான திரைக் கதைக்கு ஈடு கொடுத்து காட்சிகளை கத்தரித்திருக்கிறார். இது இவரின் வெற்றியாக திரைக்கதையின் வெற்றியா? என்பது வினா. கலை இயக்குனர் தோட்டா தரணி பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்தை அழகாக செதுக்கியிருக்கிறார். ஆனால் அந்த பொலிஸ் நிலைய கழிப்பறையை இவ்வளவு அழகாக காட்டவேண்டிய அவசிய மென்ன என்பதில் கேள்வி கேட்க வைக்கிறார். அறிமுக இசையமைப்பாளர் ஸ்ருதி ஹாசன் தனக்கு வழங்கப் பட்ட வேலையை



அளவோடு செய்து முடித்திருக்கிறார். பின்னணி இசையில் சில இடங்களில் இலத்திரனியல் வாத்தியக்கருவிகள் இரைச்சலைத் தருகின்றன. ஆனாலும் அவரின் முயற்சிக்கு நன்றி சொல்லலாம்.

வசனம் புதிய எழுத்தாளர் இரா.முருகன். ஆங்கில நெடி தொடர்ந்தாலும் சாமானிய இரசிகனையும் தன்னுடைய வசனங்களுக்குள் உள்வாங்கிச் செல்கிறார். அதுவும் முதலமைச்சர் பேசும் வசனங்கள் இயல்பான நகைச்சுவையுடன் மிகவும் இலகு. இயக்குனர் சக்ரி டோலாட்டி தனது முதல் படத்திலேயே இரண்டு நட்சத்திர நடிகர்களுடன் வேலைசெய்யும் வாய்ப்பு. அதனை மிகவும் சாதுரியமாக கையாண்டுள்ளார். எதிர்காலத்திலும் நல்ல திரைக்கதைகளுடன் பயணப்பட்டால் நல்ல இயக்குனர்கள் பட்டியலில் முன் செல்ல முடியும்.

நாளாந்த வாழ்க்கையில் பொது மக்களை தீவிரவாதம் என்ற விடயம் எவ்வாறு பாதிக்கின்றது என்பதையும் அந்த வார்த்தைக்கு உண்டான வீரியம் ஊடகங்களிடமும் மக்களிடமும் அதிகாரிகளிடமும் எவ்வாறு வேறுபட்ட கோணத்தினை கொண்டுள்ளது என்பதையும் உன்னைப் போல் ஒருவன் சொல்லிச் சென்றுள்ளது. சில யதார்த்த மீறல்கள் திரைக்கதையில் இருந்தாலும் உன்னைப்போல் ஒருவன் நமக்குள் ஒருவனாக நிலைத்து நிற்பான்.

**மலர்மகன் தங்கமயில்**



## வணக்கம்

வெற்றிகரமான ஒரு தமிழ் சஞ்சிகையாக கொழும்பிலிருந்து மாதம் இருமுறை வெளிவந்து கொண்டிருக்கும் இருக்கிறம் தற்பொழுது உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது. தென்னிந்திய சஞ்சிகைகளுக்கு இணையாக இலங்கையிலிருந்து நீண்டகாலமாக ஒரு தமிழ் சஞ்சிகை வெளிவந்து கொண்டிருப்பது இலங்கை சஞ்சிகை வரலாற்றில் இதுவே முதல் முறையாகும். தற்பொழுது இலங்கை முழுவதும் இருக்கிறம் தன்னை விஸ்தரித்துள்ளது. தொடர்ந்தும் எமது இருப்பிற்காக பயணித்துக் கொண்டிருக்கும் இருக்கிறம் சஞ்சிகையின் வெற்றிப் பயணத்தில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள். புதிய வளர்ச்சியில் பரிணமித்து நிற்கும் எமது சஞ்சிகைக்கு உங்களிடமிருந்து தரமான ஆக்கங்களை எதிர் பார்க்கின்றோம்.

இருக்கிறம் சஞ்சிகை பற்றிய உங்கள் கருத்துக்களையும் விமர்சனங்களையும் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். எமது சமூகத்தைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் அமைந்த உங்கள் ஆக்கங்களை இருக்கிறம் எதிர்பார்க்கின்றது. தரமான மற்றும் ஏனைய வெளியீடுகளில் வெளிவராத உங்கள் சொந்த ஆக்கங்களை இருக்கிறம் நிச்சயம் வரவேற்கும். எல்லோருக்காகவும் இருக்கின்ற இருக்கிறம் உங்களுக்காகவும் நிச்சயமாய் இருக்கும்.

Ego Publication House (Pvt) Ltd
03, Torington Avenue, Colombo - 07
T.P :+941132150836
Fax : 011 2585190
Email : irukiram@gmail.com

# வாசகர் கருத்து!




இருக்கிறம் சஞ்சிகையில் தொடர்ந்து வெளிவருகின்ற கணவன் மனைவி கட்டுரை வாசிக்க புதிய விடயங்களை அறியக்கூடியதாக உள்ளது. எமது சமூகம் பாலியலை சாதாரணமாக கதைப்பதற்கோ சிந்திப்பதற்கோ அருவருப்பாக நினைக்கும் தருணத்தில் உங்கள் சஞ்சிகையில் வெளிவரும் கட்டுரை நாசூக்காகவும், நகைச்சுவையாகவும் வெளிவருவது வரவேற்கத்தக்கதாக உள்ளது. அத்துடன் எல்லோரும் விரும்புகிற விஷயம் அதேபோல் விரும்பாதது போல் நடிக்கின்ற விஷயமாகவும் இருக்கின்றது. இக் கட்டுரையை தொடர்ந்தும் எதிர்பார்க்கிறேன்.

கந்தசாமி திவாகரன்
கொக்குவில் மேற்கு,
யாழ்ப்பாணம்

15/09/2009ல் வெளிவந்த இருக்கிறமில் எல்லோரும் கண்டும் காணாமலும் இருந்த "தியேட்டர் பொக்ஸ்" விடயத்தை அம்பலப் படுத்தியது ஒரு சமூக விழிப்புணர்ச்சியாக இருக்கிறது. மேலும் இதே போல் கண்டும் காணாமல் இருக்கும் ஏனைய சமூகப் பிரச்சினைகளையும் எதிர்வரும் காலங்களில் அம்பலப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

க.தவமலர்
தெஹிவளை

இருக்கிறமில் வெளிவந்த கந்தசாமி பற்றிய பட விமர்சனத்தைப் பார்த்தேன். வழமையான கற்பனையும் ஆடம்பரமும் என்ற தலைப்பு தொடர்ந்து வரும் தமிழ் படங்களைப்பற்றி நிச்சயம் சிந்திக்க வைக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் மலையக மக்களுடைய வாழ்வைப்பற்றிய ஆக்கங்களையும் எதிர்பார்க்கின்றேன்.

சூ. தவயோகநாதன்
எட்டியாந்தோட்டை

பழமையை ஒதுக்குகின்ற இக்காலத்தில் இருக்கிறம் சஞ்சிகை கலைந்த பக்கங்கள் மூலமாக ஞாபகப்படுத்தி வைக்கின்றது. பழைய கலைஞர்களை நாம் நினைக்கவும், புதியவர்கள் அறியவும் செய்தமைக்கு ஆசிரிய பீடத்துக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். வாழ்த்துக்கள்! பழையவர்கள், மறைந்த கலைஞர்கள் ஒருவரையும் விடாதீர்கள்.

சுந்தரம் செந்தில்நாதன்
சுன்னாகம், யாழ்ப்பாணம்

எல்லோரும் சர்வதேச கிரிக்கட் போட்டிகளில் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் இருக்கிறம் சஞ்சிகை உள்ளூர் போட்டிகளுக்கு தனது பார்வையை திருப்பியது எமக்கு மிகுந்த சந்தோசத்தை அளிக்கின்றது. இதனால் எமது பிரதேசங்களிலும் இலைமறை காய்களாக உள்ள வீரர்களை எமது சமூகம் இனம் காண்பதற்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

எஸ்.இராஜரட்ணம்
டொரிங்டன் அவெனியு,
கொழும்பு -07

# 2070 ஆம் ஆண்டில் ஒருநாள்.

**நான்** 50 வயதை எட்டி சில நாட்களே ஆகின்றன , ஆனாலும் எனது தோற்றம் கிட்டத்தட்ட 85 வயதான வரை போல இருக்கின்றது...

நான் சிறுநீரக வருத்தத்தால் ரொம்பவே அவதிப்படுகிறேன். அதற்கு காரணம் நான் தேவையான அளவு நீரை அருந்தாமை ஆகும். இன்னும் ரொம்ப காலம் நான் உயிர்வாழ மாட்டேன் என கவலையாய் இருக்கிறது. ஆனாலும் நான் இந்த சமூகத்திலேயே ரொம்ப வயதானவன் என்கிற சந்தோஷமும் இருக்கிறது.

எனக்கு என் 5 வயது நன்றாக நினைவு இருக்கின்றது. அப்போதைய உலகம் வித்தியாசமானதும் கூட பசுமையான நாட்கள் அவை. பூங்காக்கள் நிறைய மரங்கள் இருந்தன. அழகான மலர் தோட்டங்களை எல்லா வீடுகளிலும் காணக்கூடியதாக இருந்தது. அந்த நாட்களில் நான் அரை மணித்தியாலம் குளித்திருக்கிறேன். இப்போ நாங்கள் கனிப்பொருட்கள் நிரம்பிய எண்ணை மற்றும் டவல் மூலமாகத் தானே எங்கள் தோலை சுத்தப்படுத்திக் கொள்கிறோம்.

அந்தக்காலங்களில் பெண்கள் தலையில் அழகான கூந்தல் இருந்தது, இப்போது தண்ணீர் கொண்டு சுத்தப் படுத்த முடியாததால் தலையை வழித்துக்கொண்டு மொட்டை தலை கொண்டவர்களாக அல்லவா இருக்கின்றோம். அந்த நாட்களில் என் தந்தை அவரது காரை குழாய் நீரை கொண்டு கழுவுவது வழக்கம், இதை என் மகனிடம் சொன்னால் நம்ப மறுக்கிறான், "நீரை இப்படி எல்லாம் வீணாக்குவார்களா" என என்னிடம் கேட்கிறான்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது அந்த காலத்தில் "நீரை சேமிப்போம்" என சுவர் விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், தொலைக்காட்சி விளம்பரங்கள் என ஏராளமான இடங்களில் விளம்பரப் படுத்தப்பட்டு இருந்தது. ஆனால் அப்போது தண்ணீர் என்பது அழியக் கூடிய ஒன்றாக நங்கள் நினைக்கவில்லை. இப்போது ஆறுகள், ஒடைகள், குளங்கள், வாவிகள், நிலத்தடி தண்ணீர் எல்லாமே வறண்டு போய் விட்டது அல்லது அழிக்கப் பட்டு விட்டது.

உற்பத்தித்துறை ஒப்பீட்டளவில் மிகவும் குறைந்து விட்டது, வேலை இல்லாதவர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகமாகி விட்டது, இப்போதெல்லாம் உப்பி லிருந்து நீரை பிரித்தெடுக்கும் தொழிற் சாலைகள் தான் வேலை தரும் முக்கிய நிறுவனங்களாக இருக்கின்றன, இவற்றிலும் அதிகமானோர் தமது சம்பளத்தின் ஒரு பகுதியாக குடிக்கும் நீரையே பெற்றுக் கொள்கின்றனர்.

துப்பாக்கி முனையில் தண்ணீரை பறித்து கொண்டு போவது இப்போதெல்லாம் நிரம்பவே சகஜமாகிப் போய் விட்டது, உணவு என்பது 60 வீதம் செயற்கை முறையானதாகவே இருக்கின்றது, முன்னெல்லாம் ஒரு நாளைக்கு 8 கிளாஸ் தண்ணீர் குடிப்பது ஆரோக்கியம் என கருதப்பட்டது. ஆனால் இப்போது எனக்கு 1/2 கிளாஸ் தண்ணீர் தான் வழங்கப்படுகிறது. நங்கள்



## 2070 ஆம் ஆண்டில் எழுதப்படும் ஒரு கடிதம்

இப்போதெல்லாம் பாவித்து வீசி எறியும் உடைகளையே பாவிக்கின்றோம், இது குப்பைகளை அதிகரித்து விட்டது.

குப்பை தொட்டிகள் போல் மலசலகூட கழிவுகளும் தொட்டிகளுக்கே போகும் மாதிரி தான் செய்துள்ளோம், ஏனென்றால் வேறு எந்த வகையிலும் கழிவுகளை அகற்ற நீர் போதாமை என்கின்ற காரணத்தால் ஆகும்.



இப்போதைய மக்களின் வெளிப்புற தோற்றம் ரொம்பவே விகாரமடைந்து காணப்படுகின்றது. வயது போனவரைப் போன்ற தோற்றம், தோல் தடிப்படைதல், விகாரமான தோற்றம் என்பன மிகவுமே சாதரணமான விஷயங்களாகிப் போய் விட்டன, அல்ட்ரா வயலட் கதிர்கள் நேரடியாகவே தோலை தாக்குவதால் தோல் புற்றுநோய் என்பது மிகவும் சாதாரணமாகி விட்டது. சிறுநீரக பாதிப்பு தான் இன்றைய கால கட்டத்தில் மக்களின் இறப்புக்கான முக்கியமான காரணம் ஆகும்.

தோல் கலங்களின் இறப்பால் இருபது வயதானவர்கள் எல்லாம் நாற்பது வயதானவரை போல தென்படுகின்றனர். விஞ்ஞானிகள் எல்லாரும் இதற்கு வேறு வழிமுறைகளை கண்டறிய இரவு பகல் பாராமல் போராடுகின்றனர். ஆனாலும் என்ன செய்ய? தண்ணீர் என்பது செயற்கையாக உருவாக்க முடியாத ஒரு பொருளாகவே இன்னும் இருக்கின்றது, ஒட்சிசன் கூட இப்போது ரொம்ப குறைந்துள்ளது காரணம் மரங்கள் மற்றைய தாவரங்கள் நிரம்ப குறைவடைந்ததால் ஆகும், இதன் காரணமாக அடுத்த சந்ததி புத்தி வளர்ச்சி குறைவடைய ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன.

மனிதன் இயல்பு நிலை மாற்றம் அடையத் தொடங்கி விட்டது, விகார நிலை அடையத் தொடங்கி பிறக்கும் குழந்தைகள் எல்லாம் விகாரமாகி ஏதோ ஒரு குறையுடனும், அவயவங்களில் பிரச்சினைகளுடனும் பிறக்கின்றன.

அரசாங்கத்துக்கு நாங்கள் சுவாசிப்பதற்கு வரி கட்டுகிறோம், ஒரு நாளைக்கு எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒட்சிசனின் அளவு 173ml3 ஆகும். இந்த வரியை கட்டாதவர்களை அரசாங்கம் விசேட சுவாசிக்கும் பிரிவிலிருந்து வெளியேற்றி சாதாரண காற்றை சுவாசிக்கும் இடங்களுக்கு அனுப்புகின்றது. இங்கு மனிதனுக்கு சூரிய சக்தியில் மூலம் சுவாசிக்க காற்று வழங்கப்படுகிறது. இந்த பிரதேசத்தில் உள்ள காற்று மிகவும் தரமானதாக இல்லாவிட்டலும், உயிர்வாழ போது மானதாக இருக்கும். மனிதனின் சராசரி ஆயுட்காலம் 35 வருடங்களாகும்.



இன்னும் மிக சில நாடுகளில் பசம்புல் வெளிகள், காடுகள், ஆறுகள் இருக்கின்றன. அவை ஆயுதம் தரித்த ராணுவங்களால் பாதுகாக்கப்படுகின்றன. தண்ணீர் மிகவும் விலை உயர்ந்த பொருளாக மாறி விட்டது, இப்போதைக்கு தங்கம், வைரங்களை விட தண்ணீரே மிகவும் விலை உயர்ந்த பொருள் ஆகும். நான் வாழும் பிரதேசத்தில் எங்குமே ஒரு மரத்தைத் தானும் காண முடியாது, காரணம் இங்கு பெய்யும் அமில மழை.


இதற்கெல்லாம் காரணம் நங்கள் இயற்கையை பாதுகாக்காமல் விட்டதும், அணு சக்தி பிரயோகமுமே ஆகும். சிறுவயதில் இயற்கையை பாதுகாக்கச் சொல்லி ஏராளமாக எச்சரிக்க பட்டோம், ஆனாலும் நங்கள் யாருமே அதைப் பற்றி சிந்திக்கவில்லை, என் மகன் என் காலத்தை பற்றி கேட்கும் போது பசும் புல் வெளிகள், மலர்களின் அழகு, மழை, நீச்சல், ஆறுகளிலும் குளங்களிலும் உள்ள மீன்கள் எவ்வளவு தேவையோ அவ்வளவு நீரை குடிக்கும் வசதி, மனிதர்கள் எவ்வளவு சுகதேகியாக வாழ்ந்தார்கள் என எல்லாம் கூறினேன்.

அடுத்து என்மகன் கேட்டான் "இப்போ ஏன் அப்படி தண்ணீர் இல்லை?" என, பதில் சொல்ல முடியாமல் என் தொண்டையிலுள்ள உள்ள தண்ணீர் வற்றி விட்டது, ...


காரணம் தண்ணீரை வீணாக்கி இயற்கையை அழித்து, இப்போதைய இந்த தண்ணீர் இல்லா காரணத்துக்கு மூலமான சந்ததியை சேர்ந்தவன் என்ற முறையில், பதில் சொல்ல வார்த்தை இல்லாமல் வெட்கி தலை குனிந்தேன். நாங்கள் செய்த தப்புக்கு எங்கள் பிள்ளைகள் பெரிய விலையை கொடுக்கிறார்கள். இப்போதைக்கு மனிதனின் வாழ் நாள் குறைந்ததற்கு நானும் காரணம் என்பது மட்டும் எனக்கு நிச்சயமாக தெரியும்.

இதை வாசிப்பதால் யாராவது ஒரு நிமிடம் இயற்கையை அழிப்பதில் நமக்கும் பங்கு உண்டு என நினைத்தால் என் கட்டுரைக்கும் அர்த்தம் உள்ளது என நினைக்கின்றேன்.....


'யோ வாயிலெ (யோகா)'



விண்வெளி நிறுவனத்தின் கபிள் விண் தொலைநோக்கி சமீபத்தில் வியாழன் கோளினைப் படம் பிடித்த போது அதன் வளிமண்டத்தில் வழமைக்கு மாறான ஒரு கரும்புகை போன்ற அமைப்பு அவதானிக்கப்பட்டுள்ளது. இது முதன்முதலில் ஒரு அவுஸ்திரெலிய வானியலாளரால் பூமியில் இருந்தும் ஒரு கரும்புள்ளியாக அவதானிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் கபிளே அதனை தெளிவாகப் படம்பிடித்து அனுப்பியுள்ளது. பல நூறு மீற்றர்கள் விட்டமுள்ள விண்பொருள் (விண்கல் அல்லது ஏதேனும் வால்நட்சத்திரம்) வியாழனின் மேற்பரப்பில் மோத அதன் போது எழுந்த தூசிகள் மற்றும் மீதிகள் அடங்கிய வாயுக் கோளம் வியாழனின் வளிமண்டலத்தில் ஏற்படுத்திய விளைவின் பயனாக அது தோன்றி இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.


நீங்க வெள்ளனை ஒபிஸ் வந்து நான் பார்த்ததே இல்லையே...!
சும்மா நிறுத்துங்க சேர். இரண்டு வருஷத்துக்கு முந்தி ஒரு செவ்வாய்க்கிழமை டாணெண்டு ஒன்பது மணிக்கு நான் வந்தன். நீங்க பார்த்தீங்க.


வழமையா 5 மணிக்கு ஒபிஸ்ல இருந்து வந்துடுவீங்களே! இண்டைக்கு 6 மணிக்கு வாறீங்களே நிறைய வேலையா?
அப்படியொண்டுமில்லை பியோன் எழுப்ப மறந்திட்டான்.


எங்கட மனேஜர் அமைதியா அஞ்சு நிமிஷம் கூட சீட்டில உட்காரவே மாட்டார்.
அவ்வளவு சுறுசுறுப்பா?
ஹீம். அவருக்கு மூல வியாதி.


# office கடி


எங்கட மனேஜர் வரும் போது மரம் மாதிரி நிண்டு கொண்டிருந்தது பிழையாப் போச்சு.
ஏன்?
கூப்பிட்டு, அறு அறுவெண்டு அறுத்துத் தள்ளிட்டார்


எங்கட ஒபிஸ்ல வேலை செய்யிற எல்லோரும் கை நீட்டி லஞ்சம் வாங்க மாட்டாங்க...!
அப்படியா?
ஓமோம், நீங்க தான் கை நீட்டி லஞ்சம் கொடுக்கோணும்.

# 'கமல்ஹாசன்'

## திரைத்துறையின் மறக்கமுடியாத ஆளுமை




மலர்மகன் தங்கமயில்


**இந்திய** சினிமா வரலாற்றில் அதிகம் புகழப்பட்டதும் அதற்கு அதிகமாக விமர்சிக்கப்பட்ட நடிகரும், படைப்பாளியுமென்றால் உடனடியாக அனைவரினதும் நினைவில் வருபவர் கமல்ஹாசன். அவர் திரைப் படங்களில் நடிக்கத் தொடங்கி 50 வருடங்கள் கடந்துவிட்டது. ஆனாலும் கமல்ஹாசன் என்ற பெயருக்கு உண்டான வரவேற்பு சினிமா ரசிகர்களிடம் குறையவில்லை. அதுபோலவே அவரின் மீதான விமர்சனங்களும் குறையவில்லை. இந்தக் கட்டுரையை எழுத ஆரம்பிக்கும் பொழுது நடிகர், நடன இயக்குனர், பாடகர், பாடலாசிரியர், திரைக் கதையாசிரியர், வசன கர்த்தா, இயக்குனர், தயாரிப்பாளர் என்று சினிமாவின் பல தளங்களில் பயனிக்கின்ற ஒரு படைப்பாளி குறித்து பேசவேண்டிய பயமும் அவசியமும் ஏற்படுகின்றது.




1960 ஒகஸ்ட் 12ஆம் திகதி வெளியாகிய களத்தூர் கண்ணம்மா என்ற திரைப்படத்தில் 5 வயது நிரம்பிய சிறுவன் 'அம்மாவும் நீயே, அப்பாவும் நீயே' என்ற பாடலுக்கு அழகாக நடித்து இந்திய மத்திய அரசின் சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான விருதையும் பெற்றுக் கொள்கிறது. அந்தக் குழந்தை எதிர்கால இந்தியச் சினிமாவில் பல தனிமுயற்சிகளை மேற்கொள்ளப் போகின்றது என்று யாரும் நினைத்திருக்கவில்லை. தமிழ், மலையாளம், ஹிந்தி உள்ளிட்ட இந்தியாவின் ஆறு மொழிப்படங்களில் நடித்துள்ள கமல் இதுவரை 240க்கும் அதிகமான படங்களில் நடித்துள்ளார். அதேவேளை அவர் நடித்த பல படங்கள் இடை நடுவில் கைவிடப் பட்டுமுள்ளன. கடந்த வருடம் வெளியாகிய தசாவதாரம் என்ற பெரிய தொழில்நுட்ப முயற்சிகள் கொண்ட படத்திற்கு பின்னர் 'உன்னைப்போல் ஒருவன்' கமல் நடித்து வெளியாகியுள்ளது.

நாயகன், தேவர்மகன், இந்தியன், அவ்வை சண்முகி, அன்பே சிவம் ஆகிய திரைப்படங்களை பார்த்த பின்னரே கமல்ஹாசன் என்ற நடிகரின் ஆளுமையை அறிந்து கொள்ளும் நிலை எனக்கு ஏற்பட்டது. அதற்கு என்னுடைய வயதும்









காரணமாக இருந்திருக்கலாம். மேற்குறிப்பிட்ட படங்களில் இயக்குனர்களின் திறனும் அதிகளவில் வெளிப்பட்டது என்பது உண்மையே. ஆனால் அதையும் தாண்டி கமல்ஹாசன் என்ற கலைஞனை காண முடிந்தது. இந்தப் படங்களின் வரிசையில் தெலுங்கிலிருந்து மொழிமாற்றம் செய்யப்பட்ட சலங்கை ஒலி, சிப்பிக்குள் முத்து ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். தசாவதாரம் திரைப்படத்திலும் அதன் தொடர்ச்சி தெரிந்தது.

கமலின் ஆளுமை எல்லை மீறிய படங்களாக குணா, விருமாண்டி, ஆளவந்தான், குருதிப்புனல் ஹேராம், தெனாலி ஆகியவற்றை குறிப்பிடலாம். (இந்தக் கூற்றுடன் பலர் முரண்பட்டுக்கொள்ளலாம்) தொடர்ந்தும் புதிய பாத்திரங்களையும் கதைக்களங்களையும் தேடிக்கொண்டிருக்கின்ற கலைஞன் சில தருணங்களில் அதிகளவில் அக்கறை கொள்வதால் ஏற்படும் விளைவுகளாக இவற்றை கருதலாம். அல்லது ரசிகர்களின் மனநிலையின் மீது அதீத நம்பிக்கை வைப்பதும் காரணமாகலாம். தன்னுடைய திறமையை முழுமையாக வெளிப்படுத்திக்கொள்ள சந்தர்ப்பங்கள் இன்னும் கிடைக்க வேண்டும் என்பதுடன் ரசிகர்களின் ரசிப்புத் தன்மையில் வளர்ச்சி வேண்டும் என்று செயற்படுகின்ற கலைஞன் கமல்ஹாசன். அந்த நோக்கங்களுடனேயே ஹேராமும், அன்பே சிவமும், விருமாண்டியும் கொடுக்கப்பட்டது.

நம்மவர், விருமாண்டி உள்ளிட்ட சில படங்கள் வெளிநாட்டு மொழி படங்களின் தழுவல்கள் என்ற குற்றச்சாட்டும் கமல் மீது உண்டு. (மை ரீச்சர் என்ற படத்தின் தழுவலே நம்மவர்) வெளிநாட்டு படங்களில் காணப்படும் கதை சொல்லும் உத்திகளை தன்னுடைய படங்களில் அதிகளவில் கமல் உள்வாங்கிக்கொள்வதாலும் அந்த குற்றச்சாட்டுக்களுக்கு காரணமாயிருக்கலாம். ஆனால் கமலின் படங்களில் புதிய முயற்சிகளை காணலாம்.





திரைக்கதையாசிரியர் என்ற மிகப்பெரிய வேலையை கமல் திறமையாக வெளிப்படுத்திய படங்கள் தசாவதாரம், அன்பே சிவம் உள்ளிட்டவை. அதேபோல திரைக்கதை அமைப்பில் சொதப்பிய படங்களாக ஹேராமையும், விருமாண்டியையும் குறிப்பிடலாம். இந்தப் படங்களில் பல பாத்திரங்களினூடு கதையை நகர்த்திச் செல்லுதல் என்ற யுக்தியினை கமல் பயன்படுத்தியிருந்தார். இந்த யுக்திக்குச் சொந்தக்காரர் திரைத்துறை மேதை அகிரா குரோசோவா. 'கடவுள் இல்லையென்னு எங்கங்க சொன்னேன்... கடவுள் இருந்தால் நல்லாயிருக்கும் என்னு தானே சொன்னேன்..போன்ற வசனங்களில் வசனகர்த்தா கமல் ஜொலிப்பதை காணலாம்.

இயக்குனராக கமல்ஹாசன் தன்னை நிரூபிக்காத படங்கள் இல்லை என்றே சொல்லலாம். அவர் இதுவரை சாச்சி 420, ஹேராம், விருமாண்டி ஆகிய படங்களை இயக்கியுள்ளார். 'சாச்சி 420' அவ்வை சண்முகியின் ஹிந்தி மொழித் தயாரிப்பு. அவர் இதுவரை 15க்கும் அதிகமான படங்களை தயாரித்துள்ளார். இவற்றில் தேவர் மகன், மகளீர் மட்டும், அபூர்வ சகோதரர்கள் ஆகியன குறிப்பிட்டு சொல்லக்கூடிய படங்கள். தான் நடிக்கும் படங்களில் பாடல்களைப் பாடும் கமல் தான் பங்குபற்றாத படங்களான உல்லாசம், புதுப் பேட்டை ஆகிய படங்களிலும் பாடியுள்ளார்.

4 தேசிய விருதுகள் (நாயகன், இந்தியன், மூன்றாம்பிறை, களத்தூர் கண்ணம்மா) 18 பிலிம் பேர் விருதுகள் என்று இந்திய அளவில் அதிக விருதுகளை வென்றுள்ள கமல்ஹாசன் ஆங்கில திரைப்படத்துறையினரால் வழங்கப்படும் அக்கடமி விருதுகள் (ஒஸ்கார்) பரிந்துரைக்கும் சென்றுள்ளார். உலக நாயகன், சகலகலா வல்லவன், சூப்பர் அக்டர் என்று பல பட்டங்கள் கொண்டும் கமலஹாசன்



ரசிகர்களினாலும் திரைத்துறையினராலும் அழைக்கப் படுகின்றார். அதிகளவில் விமர்சனங்களை சந்தித்து வரும் கமல்ஹாசன் அந்த விமர்சனங்களை புறந்தள்ளி விடாமல் உண்மையான மனதுடன் தன்னுள் வாங்கிக்கொள்வதே அவரின் வெற்றிக்கு முழுக்காரணம் என்று சொல்லலாம். கமல்ஹாசன் என்ற படைப்பாளி இந்திய திரைத்துறையில் என்றும் மறக்கப்பட முடியாத ஆளுமை ●



விலை உயர்ந்த டிஜிட்டல் சாதனங்களை தயாரித்து விற்பனை செய்து வரும் அப்பிள் நிறுவனம் முதல் முறையாக "எப்.எம் ரேடியோ" உடன் கூடிய புதிய ஐ-பொட் சாதனத்தை அறிமுகம் செய்துள்ளது. இதுவரை தான் தயாரித்து வெளியிட்ட எந்த டிஜிட்டல் சாதனங்களிலும் எப்.எம் ரேடியோ வசதியை தராத அப்பிள் நிறுவனம் முதல் முறையா தனது ஐ-பொட் சாதனத்தின் நானோ வரிசையில் எப்.எம் மற்றும் வீடியோ கேமராவுடன் கூடிய புதிய சாதனத்தை சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. இந்த ஐ-பொட் சாதனத்தில் உள்ள எப்.எம் ரேடியோ வில் உள்ள சிறப்பம்சம் நேரடியாக ஒலி பரப்பாகிக்கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளை நிறுத்தி விட்டு மீண்டும் விட்ட இடத்திலிருந்தே நிகழ்ச்சிகளை கேட்க முடியும்.





எம்.தயானி

# 'ஐயா'

அன்றுமொருநாள் மாலைவேளை பஸ்ஸில் சனக்கூட்டமும் அவ்வளவாக இல்லை. எனது முன் சீட்டில் இருவர் உரையாடிக் கொண்டிருந் தனர். அவர்கள் உரையாடிக் கொண்டிருந்த விடயம் ஒரு நபரைப் பற்றியதென அவர்களின் உரையாடலிலிருந்து அறிந்து கொண்டேன். அந்த நபரின் பெயரைக் கேட்டதும் மிகுந்த ஆவலுடன் அவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்க முயன்றேன்.

ஏனென்றால் அந்தப் பெயருக்கு சொந்தக் காரர் மக்களிடையே மிகுந்த மரியாதைக் குரியவர். செல்வந்தர். ஆனாலும் தர்மவான். ஆச்சாரசீலர். அடிக்கடி உள்ளூரிலும் வெளியூர் களிலும் தான தர்மங்களை வழங்குபவர். அதையெல்லாம் விட அவர் மேல் எனக்கு பற்றேற்படக் காரணம், அவர் வீட்டு வேலைக் காரன் என்ற வகையில் விசேட சலுகைகள். மரியாதைகள். சில இலாபங்கள் எனக்கு கிடைப்பதுண்டு. சுருங்கக்கூறுவ தென்றால் ஐயா தெய்வமென்றால் நான் பூசாரி. அதாவது உண்டியலில் காசு ஐயாவுக்கு. தட்சணை காசு எனக்கு. இதையெல்லாம் மனதில் வைத்து ஐயாவைப் பற்றி என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று கேட்க முயன்றேன். தகரடப்பா போலவிருந்த அந்த பஸ்ஸின் இரைச்சலில் பகீரதப் பிரயத்தனம் செய்து அவர்கள் பேச்சை ஒட்டுக்கேட்டேன். "உயர்ந்த மனிதர்.....புலாலை கையாலும் தொடாத பக்திமான்....மது. மாது எதையும் வீட்டிற்கு அனுமதிக்காத ஆசாரசீலர்.." இதுதான் அவர்களின் புகழாரப் பேச்சின் சாராம்சம்.

அவர்கள் பேச்சை கேட்ட பின்னர் ஐயா பற்றி நினைத்துப் பார்த்தேன். அவர்கள் சொன்ன தெல்லாம் உண்மைதான். ஐயா உயர்ந்த மனிதர்தான். ஹிந்தி நடிகர் அமிதாப்பச்சன், போல ஆறடி உயரமிருப்பார். புலால் உண வென்ன எதையும் கையால தொடுவது கிடையாது. கரண்டியும் முள்ளுக் கரண்டியும் வைத்துத்தான் சாப்பிடுவார். மதுவோ. மாதுவோ எல்லாமே நட்சத்திர ஹோட்டல்களில் மட்டும் தான். வீட்டிற்கு எதையும் எடுத்து வருவதில்லை. இவ்வளவு ஏன் எந்த தாசியுடன் இரவுகளில் தங்கிவிட்டு அதிகாலையில் வீடு வந்தாலும். தீட்டு போக ஸ்நானம் பண்ணாமல் வீட்டிற்குள் நுழைவதே இல்லை அது மார்கழி குளிர்கால மென்றாலும் கூடத்தான்.

ஐயாவின் சிறப்பு எனக்கு புரியுது. ஆனால் ஐயாவின் பெண்டாட்டிக்கு ஏன் இது புரிய வில்லை. வீட்டிற்கு போனதும் முதல் வேலை யாக அவங்களுக்கு இதையெல்லாம் புரிய வைக்க வேண்டும்.

எதையென்று கேட்கிறீங்களா? என்னோட ஐயா ஆசாரசீலர் என்பதைத்தான்! ●





# நீரிழிவு நோயாளர்கள் இனிப்பும் சாப்பிடலாம்!

நீரிழிவு நோயாளர்களுக்கு சீனியும் எடுக்கலாம் என்று சொன்னால் சுவீப் விழுந்ததுபோல இருக்கும். சீனி மற்றும் ஏனைய இனிப்புக்களை எடுக்கக் கூடாது என்றே இதுவரை அவர்களுக்குச் சொல்லப்பட்டுள்ளது. இன்னமும் சொல்லப்படுகிறது.

ஆனால் அறிவு பூர்வமாகச் சிந்தித்துச் செயல்பட்டால் நீரிழிவாளர்களின் உணவு முறையில் இனிப்பிற்கும் நிச்சயம் ஓரளவு இடம் உண்டு.

## புதிய கோட்பாடு

இப்பொழுது நீரிழிவாளர்களின் உணவு என்பது ஒரு சில உணவுகளை முற்றாகத் தவிர்ப்பதும் வேறு சிலவற்றை அதிகம் உண்பதும் என்ற பழைய கோட்பாட்டில் இல்லை. அதே போல உணவு அட்டவணையை கையில் வைத்து அதன்படி அளந்து சாப்பிடுவதும் தினசரி வாழ்வில் சாத்தியமில்லை.

நீரிழிவின் கட்டுப்பாட்டிற்கு முழுமையான ஆரோக்கிய உணவுத் திட்டம் தேவை. அதன் முக்கிய அம்சம் எந்த உணவானாலும் கட்டுப்பாடு மீறாமல் அளவோடு உண்பதுதான்.

## மாப்பொருளின் அளவு

உணவில் மாப்பொருளின் carobo hydrate அளவு மிக முக்கியமானதாகும். இதனை அதிகமாக சாப்பிட்டால் நீங்கள் உட்கொள்ளும் கலோரிச் சத்து அதிகமாகும். இது நீரிழிவை அதிகரிக்கும். மாப்பொருள் என்பது நீங்கள் உட்கொள்ளும் சோறு, இடியப்பம், நூடில்ஸ் போன்றவற்றில் மாத்திரமின்றி உருளைக்கிழங்கு, மரவெள்ளி போன்ற கிழங்கு வகைகளிலும் உண்டு. சீனி, சர்க்கரை போன்றவற்றிலும் உண்டு. எனவே இத்தகைய மாப்பொருள் உணவுகளை அளவோடுதான் உட்கொள்ள வேண்டும்.

ஆயினும் சொக்லட், சீனி, தேன், மற்றும் இனிப்புப் பண்டங்கள் அனைத்துமே பழவகைகள், மரக்கறிகள் மற்றும் தவிடு நீக்காத தானிய வகைகளை விட அதிகமாகவும் விரைவாகவும் இரத்த குளுக்கோஸ் அளவை அதிகரிக்கின்றன என நம்பப்பட்டது. அதில் சற்று உண்மை இல்லாமலும் இல்லை. ஆனால் அவற்றைத் தனியே உட்கொள்ளும் போதுதான் பாதிப்பு அதிகம்.

இனிப்பைத் தனியே உண்ண வேண்டாம்.


எனவே நீரிழிவு நோயாளர்கள் செய்ய வேண்டியது என்ன?

விரைவாக உறிஞ்சப்படும் இனிப்புப் பண்டங்களை உண்ணும் போது அவற்றைத் தனியாக உண்ணக் கூடாது. ஆறுதலாக உறிஞ்சப்படும் உணவுவகைகளுடன் சேர்த்து உண்ண வேண்டும். பொதுவாக நார்ப்பொருள் அதிகமுள்ளவையே படிப்படியாகச் (ஆறதலாக) சமிபாடு அடைபவை ஆகும். காய்கறிகள், பழவகைகள், தவிடு நீக்காத தானிய (அரிசி, கோதுமை, குரக்கன்,) வகைகளும் அவற்றில் தயாரிக்கும் உணவுவகைகளும் பழவகைகளும் இவற்றில் அடங்கும். சோயா, பயறு, பருப்பு, கௌபீ, போஞ்சி, பயிற்றை போன்ற அவரையின் உணவுகள் ஆறுதலாகச் சமிபாடடைவதால் அவ்வாறு இனிப்பு சாப்பிடும்போது கலந்து உண்ண ஏற்றவையாகும்.

## இனிப்பின் அளவும் முக்கியம்

இனிப்பும் சாப்பிடலாம் என்று சொன்னவுடன் ஒரு பெரிய பார் சொக்லட் ,குக்கீஸ், பல லட்டுகள் என ஒரேயடியாக அமுக்கலாம் என நினைக்க வேண்டாம். ஏனெனில் முன் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டதுபோல இவை வெறும் கலோரிக் குண்டுகள். இவற்றில் அதிகளவு கொழுப்பும் மாப்பொருளும் மட்டுமே இருக்கின்றன. விற்றமின், தாதுப்பொருள், நார்ப்பொருள் போன்றவை மிகக் குறைவே. எனவே இனிப்பு என்பது நீரிழிவாளர்களின் உணவில் ஒரு சிறு பகுதியாகவே இருக்க வேண்டும்.

இனிப்பும் ஒருவகை மாப்பொருளே. அதே போல சோறு, பாண்,



இடியப்பம், போன்ற எனையவும் மாப் பொருள் என்பதை மேலே கண்டோம். எனவே அத்தகைய மாப்பொருள் உணவுகளை வழமையான அளவில் உட்கொள்வதுடன், இனிப்பையும் மேலதிகமாக உண்டால் நீங்கள் உட் கொள்ளும் மாப்பொருளின் அளவு அதிகரித்துவிடும்.

எனவே இனிப்பு எடுக்கும்போது நீங்கள் உட்கொள்ளும் கலோரிப் பெறுமானம் அதிகரிக்காது இருப்பதை இரண்டு வழிகளில் செய்யலாம்

1. நீங்கள் உட்கொள்ளும் இனிப் பிற்கு ஏற்ப எனைய மாப்பொருள் உணவின் அளவைக் குறைக்க வேண்டும்.

2. மாப்பொருள் உணவை ஒரு நேரத்தில் முற்றாகத் தவிர்த்து அதற்கேற்ற அளவில் இனிப்பை தனியாக சேர்க்கலாம்.

ஆயினும் சேர்த்து உண்ணும்போது சமிபாடு விரைவாக நடக்காது என்ப தால் முதலாவது முறையே சிறந்தது என்பேன்.

### கலோரிச் சத்தற்ற இனிப்புகள்

நீரிழிவு நோயாளர் பாதிப்பின்றி இனிப்பு வகைகளை உண்பதற்கு மற்றொரு வழியும் காத்திருக்கிறது.. சீனி, சர்க்கரை போலவே இனிப்புச் சுவை உள்ள ஆனால் கலோரிச் சத்தற்ற செயற்கை இனிப்புகள் தாராளமாகக் கிடைக்கின்றன. இவற்றை உங்கள் உணவில் தயக்கமின்றிச் சேர்த்துக் கொள்ளலாம். Aspartame, Saccharin. Sucralose போன்றவை அத்தகைய மாற்று இனிப்புகளாகும். இவற்றை உங்கள் தேநீர் கோப்பி போன்ற பானங்களுக்கு சேர்த்து இனிப்புச் சுவை யைப் பெறலாம். அப்பம், புட்டு, கேக் போன்ற வழமையான உணவுகளைத் தயாரிக்கும் போதும் வழமையான சீனி சர்க்கரைக்குப் பதிலாக அவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

### இனிப்பு மதுவங்கள்

நீரிழிவாளருக்கான உணவுகள் என்ற லேபலுடன் டொபி சுயிங் கம் டெஸேரட் போன்ற பலவும் விற்பனை க்குக் கிடைக்கின்றன. இவற்றில் சீனி அல்லது செயற்கை இனிப்பிற்குப் பதிலாக இனிப்பு மதுவங்கள் சேர்ந்திருக்கும். "isomalt," maltitol, "mannitol," "Sorbitol" அத்துடன் "xylitol." போன்றவையே அத்தகைய இனிப்பு மதுவங்கள். இவற்றில் ஓரளவு கலோரிப் பெறுமானம் உண்டு. எனவே அளவோடுதான் உட்கொள்ள வேண் டும். அத்துடன் இவை சிலருக்கு வயிற் றோட்டத்தை ஏற்படுத்தலாம்.

நீரிழிவாளருக்கான உணவுகளை வாங்கும் போது அதில் என்ன இனிப்புக் கலந்திருக்கிறது என்பதை லேபிளைப் பார்த்து அறிந்து கொள்வது அவசியம்.

### எது ?எவ்வளவு? எதனுடன் ?

இறுதியாகச் சொல்வதானால் நீரிழி வாளர்களின் உணவுத் திட்டத்தில் எதை உண்பது? எதைத் தவிர்ப்பது? என்பது அவ்வளவு முக்கியமானது அல்ல. அதைவிட எவ்வளவு உண்கிறீர்கள் எதனுடன் சேர்த்து உண்கிறீர்கள் என்பவையே முக்கியமானது. சற்று அறிவுபூர்வமாகச் சிந்தித்து உண்டால் தவிர்க்கப்பட வேண்டியவை என்று சொல்லப்பட்ட உணவுகளையும் உண்ண முடியும்.

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்




இரவில் ஒன்பது அல்லது அதற்கு மேற்பட்ட மணி நேரம் தூங்கும் நடுத்தர மற்றும் வயதான பெண்களுக்கு, இதயக் கோளாறுகள் வருவதற்கான வாய்ப்பு மிகுதியாகவுள்ளது. தெற்கு கரோலினா பல்கலைக்கழக மருத்துவ ஆய்வாளர்கள், நடுத்தர வயது பெண்களின் தூக்கத்துக்கும், இதய கோளாறுகளுக்கும் உள்ள தொடர்பு குறித்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர். ஆய்வின் முடிவில் சராசரியாக 7 மணி நேரம் தூங்குவோருடன் ஒப்பிடுகையில், 6 மணி நேரம், அல்லது அதற்கு குறைவான நேரம், 8 மணிநேரம் மற்றும் 9 அல்லது அதற்கும் மேற்பட்ட மணிநேரம் தூங்குவோருக்கு முறையே 14 சதவிகிதம் 24 சதவிகிதம் மற்றும் 70 சதவிகிதம் அளவில் இதயக் கோளாறு வருவதற்கான அபாயம் உண்டு என்பது கண்டறியப்பட்டது. எனவே பெண்கள் 9 மற்றும் அதற்கும் அதிகமான மணிநேரங்கள் தூங்குவதைத் தவிர்த்து, சராசரியாக 7 மணி நேரம் தூங்குவதே சாலச் சிறந்தது என்று மருத்துவ ஆய்வாளர்கள் அறிவுறுத்துகின்றனர்.

வடக்கின் வசந்தம்

# குறைகளைத் தீர்க்குமா?

நேர்கண்டவர் - பஸ்லான் மொஹமட்






**நல்லூர் பிரதேச சபையின் செயலாளராக கடமையாற்றி வரும் பார்த்தசீலன் ஆரம்பத்தில் வடக்கு கிழக்கு மாகாண சபையிலும் பின்னர் மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளராகவும் கடமையாற்றினார். இருக்கிறம் சஞ்சிகைக்காக அவரை நேர்கண்டோம்**

கேள்வி - மக்கள் பிரதிநிதிகளற்ற நல்லூர் பிரதேச சபையில், மக்கள் பங்குபற்றலை நிலைநிறுத்துவதற்காக, நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை?

**பதில்** -நாம் எந்தவொரு செயற்பாட்டையும் ஆரம்பிப்பதற்கு முன்னர், கிராமசேவையாளர் பிரிவு மட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களினூடாக மக்களை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். இதனூடாக மக்களின் அபிப்பிராயத்தை பெறுவதற்கு வழியேற்படுகின்றது. ஆரம்பத்தில் மக்களின் பங்குபற்றல் குறைவாக இருந்தாலும் தற்பொழுது அதில் ஒரு அபிவிருத்திப் போக்கைக் காண்கின்றோம். எங்களது பிரதேச சபையின் முக்கியத்துவம், செயற்பாடுகள் என்பவற்றை மக்களுக்கு விளக்க வைக்கின்றோம். மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கு இதுவொரு சிறந்த வழிமுறையாகும். மேலும் பிரதேச சபைக்கும் மக்களுக்கும் இடையிலான உறவை கட்டியெழுப்புவதற்கான ஒரு நல்லதொரு சந்தர்ப்பமாகவும் காணப்படுகின்றது. இவ்வாறானதொரு நிலையில் இப்பிரதேசத்துக்கான தேவையை எம்மால் நிறைவேற்றவும் முடியும். ஆரம்பத்தில் மக்களுடைய பங்குபற்றல் மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தாலும் தற்போது நாங்கள் எதிர் பார்த்ததைவிட உயர்ந்த மட்டத்திலான மக்களின் பங்களிப்பு காணப் படுகின்றது.

**கேள்வி - இதில் பெண்களுடைய பங்குபற்றல் எவ்வாறு காணப்படுகின்றது?**

**பதில்** - மக்கள் பங்குபற்றும் நிகழ்விலும்,ஆலோசனைக் குழுக்களிலும் ஆரம்பத்தில் பெண்களுடைய பங்குபற்றல் குறைவாக காணப்பட்டாலும் தற்போது அது அதிகரித்துக் கொண்டு வருகின்றது எனலாம். குறிப்பாக ஆலோசனைக் குழுக்களில் பெண்களின் பங்குபற்றல் கூடிக்கொண்டு செல்வதை எம்மால் காணமுடிகின்றது. எனினும் பெண்களுக்கு ஒரு தயக்கம் காணப்படுகின்றது. அதாவது தற்செயலாக கட்சி அரசியல் உள்ளே நுழைந்தால் நாமும் ஏதோ அரசியலுக்குள் உள்வாங்கப்படுவோமோ என்ற அச்சம் அவர்களிடம் காணப்படுகின்றது.

**கேள்வி - மக்கள் பிரதிநிதிகளற்ற, செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களைக் கொண்ட பிரதேச சபை மக்களின் தேவைகளை கருத்தில் கொள்வதில்லை என்றவொரு குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இது பற்றிய உங்களது அபிப்பிராயம் என்ன?**

**பதில்** - உண்மையில் இதுவொரு ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் தான். ஏனெனில் மக்கள் வீதிகளை புனரமைத்துக் கேட்கின்றார்கள். ஆனால் அதற்குரிய நிதி எம்மிடமில்லை. மேலும் வீதிகளை புனரமைக்க அவசியமான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதும் சிரமமாக காணப்படுகின்றது. இங்குள்ள சில வீதிகள் 1970 களிலிருந்து இன்னும் திருத்தப்படாமல் இருப்பதும் கவலைக்குரியதாகும். எம்மிடம் காசு இருந்தாலும் தார்போன்ற மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வது கஷ்டமாக இருக்கின்றது. எவ்வாறாயினும் வடக்கின் வசந்தம் மூலம் இவைகள் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

**கேள்வி - பிரதேச சபை திட்டங்களை மேற்கொள்ளும்போது எதிர்நோக்கும் தடைகள் என்ன?**

**பதில்** - தற்போது மக்களிடமிருந்து வரும் எதிர்ப்புக்கள் குறைவாக இருக்கின்றன. ஆனால் நடைமுறை ரீதியாக ஒவ்வொரு திட்டத்துக்கும் திருகோணமலையிலிருந்து அனுமதியைப் பெறவேண்டி இருக்கின்றது. இவைகள் எமது திட்டங்களை மேற்கொள்வதில் தடைகளையும், காலதாமதங்களையும் ஏற்படுத்துகின்றன.

**கேள்வி - உங்களுடைய பிரதேசத்தின் மிக முக்கிய தேவையென நீங்கள் கருதுவது என்ன?**


**பதில்** - வீதிகளை புனரமைத்தலே மிக முக்கிய தேவையாக காணப்படுகின்றது. எமது பிரதேசம் பொருளாதார ரீதியாக நலிவுற்ற பிரதேசமாக



காணப்படுகின்றது. இதனை சீர் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு கட்டாயமாக மத்திய அரசாங்கம் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் உதவி எமக்குத் தேவைப்படுகின்றது.

**கேள்வி - உங்களுடைய பிரதேச சபையில் நல்லாட்சித் தத்துவங்களின் பயன்பாடு எவ்வாறு காணப்படுகின்றது?**

**பதில்** - எந்த வேலைத்திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் அதில் மக்களுடைய கருத்துக்களையும் உள்வாங்கியே மேற்கொள்கின்றோம். மேலும் ஆலோசனைக் குழுக்களின் அபிப்பிராயங்கள், திருத்தங்களையும் நாம் பெற்றுக்கொள்கின்றோம். குறிப்பாக சொல்வதாயின் 56 சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளையும் அவர்களின் ஆலோசனைகளையும் நாம் ஒவ்வொரு திட்டத்திலும் உள்வாங்குகின்றோம். மேலும் எமது ஆலோசனைக் குழுக்களில் துறைசார் நிபுணர்களும் இருக்கின்றார்கள். அவர்களுடைய ஆலோசனைகளைக் கொண்டே எமது திட்டங்களை நாம் மேற்கொள்கின்றோம்.



கேள்வி -உங்களது பிரதேச சபையின் வருமானம் பெறும் நிலை எவ்விதமாக காணப்படுகின்றது?

**பதில்** - பிரதேசசபைக்கு சுமார் 92 இலட்சம் ரூபா வரி மக்களிடமிருந்து வர வேண்டியிருக்கின்றது. தற்போது அதனைப்பெற்றுக் கொள்வதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கேள்வி -பிரதேச சபைக்கான அதிகாரங்கள் பற்றிய உங்களது கருத்து என்ன?

**பதில்** - இருக்கின்ற அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்தினாலேயே இந்த பிரதேசத்தை அபிவிருத்தி செய்யலாம். அரசினால் எங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கும் 5 வீதம் மாத்திரமே எம்மால் பயன்படுத்த முடிகின்றது.

கேள்வி - இவ்வாறானதொரு நிலைக்குக் காரணம் என்ன?

**பதில்** - இப்பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு என்பவற்றை பேணுவதற்கான ஒரு சிறந்த நடைமுறை இதுவரை காணப்படவில்லை. உதாரணமாக பிரதேச சபையின் அனுமதியின்றி யாரும் எந்தவொரு கட்டடத்தையும் கட்ட முடியாது. ஆனால் அவ்வாறு பல கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான உரிய கட்டமைப்பு இங்கு இருக்கவில்லை. எனினும் 2009 ஆம் ஆண்டிலிருந்து ஒரு சுமூகமான நிலை ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் இருக்கின்ற அதிகாரங்களை பயன்படுத்த முடியும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.







# நம்பிக்கை இழந்து வெகுநாளாயிற்று....!

நூலகம்

உலகமே .....!
நீ
சிரித்தபடிதான்
இருக்கிறாய்.
உடனிருந்த பூக்கள் உதிர்ந்தாலும்
சிரித்து விளையாடும்
ஏனைய மலர்களைப் போல.

வாலிப நெஞ்சங்களை
வரிசையிலே அலையவிட்டு
பெருமை கொள்ளும்
அழகியைப் போல
உங்கள் கால்களில் விழுவதைத்தான்
நீங்கள்
பெருமையாக நினைக்கிறீர்கள்.

சாபங்கள் மீதிலும் நம்பிக்கை இல்லை
இல்லாவிடில்
இவ்வளவு பேர் திட்டியும்
சுட்டெரியாமல் இருக்குமா!

சாமிகள் மீதும்
நம்பிக்கை இல்லை
வருந்தி அழைத்த போதிலே
எங்கே போய் தரித்தது...?

அரசியல் மீதிலும்
ஆசை இல்லை
செத்தவன் பேரைச் சொல்லி
வெளுத்துக் கட்டும்
அயலான் போல
எமை விற்று மந்திரிப்பதவி
எடுக்கும் இயல்
அரசியல்.

ஐநாவும் கூட ....
குறட்டை விட்டுத் தூங்கும்
ஒரு இடம்

இருந்தும்
உலகே
நீ
சந்தோசமாகத் தான்
இருக்கிறாய்.
உடனிருந்த பூக்கள் உதிர்ந்தாலும்
சிரித்து விளையாடும்
ஏனைய மலர்கள் போல

**மட்டுவில் ஞானக்குமாரன்**



# அமெரிக்க பகிரங்க டென்னிஸ்

**டென்னிஸ் தொடர்களில் அவுஸ்ரேலிய, பிரெஞ்ச், விம்பிள்டன், அமெரிக்க பகிரங்க சர்வதேச டென்னிஸ் தொடர்கள் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்தைப் பெற்றவை. இதில் அமெரிக்க பகிரங்க டென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் நடைபெற்றது. இதில் அதிர்ச்சிகளும் ஆச்சரியங்களும் அரங்கேறியிருக்கின்றன. எதிர்பார்த்த முன்னணிநட்சத்திரங்கள், எதிர்பாராத, அதிகம் அனுபவமில்லாத நட்சத்திரங்களிடம் வீழ்ந்தனர்.**

## ஆடவர் பிரிவு

கடந்த ஆண்டு இறுதிப்போட்டியில் பெடரரிடம் வீழ்ந்த முர்ரே, இம்முறை பெடரரை வீழ்த்தக் காத்திருந்தார். இருந்தாலும் முர்ரே 4 ஆம் சுற்றுடன் வேகமாகவே இந்த தொடரில் தோல்வியை சந்தித்தார்.

காயம் காரணமாக ஓய்விலிருந்த ஸ்பெயின் வீரர் ரபேல் நடாலும் முதன் முறையாக அமெரிக்க பகிரங்கப் பட்டத்தை வெல்லும் முனைப்புடன் களமிறங்கினார். அவரும் அரையிறுதிப் போட்டியோடு களம் விட்டகன்றார். இவர்களைவிட செர்பியாவின் ஜோகோவிக் அரையிறுதியுடன் வெளியேறினார். அமெரிக்காவின் அன்டி ரொடிக், பிரான்ஸ் வீரர் வில்ஃப்ரெட்சொங்கா ஆகியோரும் பெரிதாக சாதிக்கவில்லை.







ஆடவர் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்து வீரர் ரொஜர் பெடரரை அதிர்ச்சித் தோல்வியுறச் செய்து பட்டத்தை சுவீகரித்தார் ஆர்ஜென்ரின வீரர் ஜுவான் மார்ட்டின் டெல் போட்ரோ.

டெல் போட்ரோ 3-6, 7-6, 4-6, 7-6, 6-2 என்ற செட் கணக்கில் பெடரரை வீழ்த்தினார். முதன்முறையாக கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டிக்கு முன்னேறி வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார் டெல் போட்ரோ.

1977 ஆம் ஆண்டின் பின்னர் ஆர்ஜென்ரினாவிலிருந்து அமெரிக்கப் பகிரங்கப் பட்டத்தை வெல்லும் முதல் வீரர் டெல் போட்ரோ என்பது குறிப்பிடத்தக்கது. 1977 இல் ஆர்ஜென்டினா வீரர் குல்லர்மோ விலாஸ் அமெரிக்கப் பகிரங்கப் பட்டத்தை வென்றிருந்தார்.

### பெடரர் ஏமாற்றம்



இதற்கு முன்னர், தான் பங்கேற்ற அமெரிக்க பகிரங்க டென்னிஸ் போட்டிகளில்,40 தடவைகள் தொடர்ச்சியாக வெற்றி பெற்று வந்த பெடரர், 41ஆவது போட்டியில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். இதற்கு முன்னர் பெடரர் - டெல் போட்ரோ மோதிய 6 போட்டிகளில்,பெடரரே வெற்றி பெற்றிருந்தார்.

1920-25ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக 6முறை(1920-1925) அமெரிக்கப் பகிரங்கப்

பட்டத்தை பில் டில்டன்( bill tilden ) வென்றிருந்தார்.

அதைத் தொடர்ந்து கடந்த 5 ஆண்டுகளாக(2004-2008) பெடரர் அமெரிக்கப் பகிரங்கப் போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தார்.இம்முறை பெடரர் வெற்றி பெற்றிருந்தால் பில் டில்டனின் சாதனையை சமப்படுதி யிருக்கலாம்.அத்துடன் 16 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தையும் கைப் பற்றியிருக்கலாம்.

## மகளிர் பிரிவு



மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் செரீனா வில்லி யம்ஸ்,12 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று சக நாட்டு வீராங் கனை பில்லி ஜீன் கிங் சாதனையை சமன் செய்வார் என பலராலும் எதிர் பார்க்கப்பட்டது.அதுவும் நிறைவேற வில்லை. இவர் அரையிறுதியில் கிம்கிளைஸ்டர்ஸிடம் தோல்வியுடன் வெளியேறினார். இந்தப் போட்டியில் எல்லைக் கோட்டைத் தாண்டி விளை யாடியதால் அவருக்குப் புள்ளிகள் குறைக்கப்பட்டன. இதனால் ஆத்திர மடைந்த செரீனா டென்னிஸ் களத்தில் விளையாட்டு வீராங்கனையைப் போல நடந்து கொள்ளாமல் அநாகரிக மாக நடந்து கொண்டார்.இதனால் அவருக்கு அபராதமும் விதிக்கப் பட்டது. இதுவரை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்லாமல் "நம்பர்-1' இடத்திலுள்ள ரஷ்யாவின் டினாரா சபினா, அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், செர்பியாவின் ஜான்கோவிக், இவானோவிக், ரஷ்யா வின் மரியா ஷரபோவா, குஸ்னட் சோவா, எலீனா டெமன்டிவா, பிரான்சின் அமலி மொரிஸ்மோ, பெலாரசின் விக்டோரியா அஸரென்கா போன்றோர் ஏனைய வீராங்கனைகளுக்கும் ஏமாற்றமே மிஞ்சியது . மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் பெல்ஜிய வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ் 7-5, 6-3 என்ற செட் கணக்கில் டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாகியை வீழ்த் திப் பட்டத்தை வென்றார்.

திருமணத்திற்குப் பின்னர் தாய்மையடைந்த கிளைஸ்டர்ஸ் கடந்த இரண்டரை ஆண்டுகளாக சர்வ தேச டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்காமல் இருந்தார். அதன் பின் அமெரிக்கப் பகிரங்கப் தொடரில் மீண்டும் களமிறங்கி பட்டத்தைக் கைப்பற்றி தனது மீள் வருகையை உறுதி செய்துள்ளார்.

கடந்த 2 ஆண்டு குடும்ப வாழ்க்கைக்குப் பிறகு மீண்டும் சர்வ தேச டென்னிஸ் உலகுக்குத் திரும்பிய, 2005ஆம் ஆண்டு சாம்பியன் பெல்ஜி யத்தின் கிம்கிளைஸ்டர்ஸ், ஒரு குழந்தைக்குத் தாயான பின் மீண்டும் சர்வதேச டென்னிஸ் போட்டிகளுக் குத் திரும்பி பட்டத்தை சுவீகரித்து, 1980ஆம் ஆண்டு விம்பிள்டன் போட்டியில் குழந்தைக்குத் தாயான பின் பட்டம் வென்ற அவுஸ்திரலியா வின் எவானி கூலாகோங் ( Evonne goolagong)இன் சாதனையை முறியடித்தார்.



## ஆடவர் இரட்டையர் பிரிவு

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் - செக். குடியரசின் லூகாஸ் லூஹி ஜோடி அமெரிக்க பகிரங்க பட்டத்தை வென்றது. பயஸ் வெல்லும் 10ஆவது கிராண்ட்ஸ் லாம் இரட்டையர் பட்டமாகுமிது. ஆடவர் இரட்டையர் பிரிவில் 5 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள பயஸ்,லூஹியுடன் இணைந்து வெல்லும் 2ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமிது. ஏனைய 5 பட்டங்களை கலப்பு இரட்டையர் பிரிவில் பயஸ் பெற்றிருக் கிறார்.

மேலும் இந்த ஆண்டில் பயஸ் - லூஹி ஜோடி வெல்லும் 2 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். ஏற் கெனவே கடந்த ஜூனில் நடை பெற்ற பிரெஞ்ச் பகிரங்க போட்டி யில் இந்த ஜோடி இரட்டையர் பிரிவில் பட்டம் வென்றுள்ளது.




## மகளிர் இரட்டையர் பிரிவு

மகளிர் இரட்டையர் பட்டத் தை அமெரிக்க சகோதரிகளான வீனஸ் வில்லியம்ஸ், செரீனா வில்லியம்ஸ் சகோதரிகள் வெற்றி கொண்டனர். இதன் மூலம் இந்த ஆண்டில் அவுஸ் ரேலிய, பிரெஞ்ச் மற்றும் தற்போது அமெரிக்க பகிரங்க பட்டங்களை வில்லியம்ஸ் சகோதரிகள் வென்றுள்ளனர் மொத்தத்தில் இம்முறை அமெரிக்க பகிரங்க சர்வதேச டென்னிஸ் தொடரில் அதிர்ச்சிகளும் ஆச்சரியங்களும் அரங்கேறின


சீ. கே .மயூரன்

# விட்டமின் மாத்திரைகள்



## அறியப்படாத உண்மை

விட்டமின் ( Vitamins ) மாத்திரைகள் என்றவுடன், நம்மில் பலர் சத்து மாத்திரை என்ற புனிதமான சொல்லைப்போட்டு, அதனை நேரந்தவறாமல் உண்டு வருவதை நாம் காண்கிறோம். அம்மாக்கள் பிள்ளைகள் நோஞ்சானாக இருந்தால் மருத்துவரிடம் சென்று, அய்யா எனது பிள்ளை மெலிந்திருக்கின்றான், சரியாக சாப்பிடுவதில்லை ஏதாவது விட்டமின் மாத்திரை அல்லது டொனிக் எழுதித் தாருங்கள் என்று கேட்பதும் வைத்தியரும் தனக்குப் பிடித்தமான? கம்பெனியின் டொனிக் அல்லது மாத்திரையை எழுதிக் கொடுப்பதும் வாடிக்கையாகிவிட்டது.



இன்று படித்தவர்கள் தொட்டு பாமரன் வரை மயங்கிக் கிடக்கும் பொருட்களில் விட்டமின் மாத்திரைகளுக்கு தனியான ஓர் இடம் இருக்கத்தான் செய்கின்றது. உடல் ஆரோக்கியமாக இருப்பவர்கள் கூட தம்மை மேலும் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தால் இதை சாப்பிடத் தயங்குவதில்லை. இந்த மாத்திரைகளை சத்து மாத்திரைகள் என்று அறிந்து கொண்ட நாம், அதன் மறுபக்கத்தைப் பற்றியும், இது ஒரு உலக மகா மோசடி என்பது பற்றியும் அறிந்துள்ளோமா? இதற்கான விடை உங்களுக்கே தெரியும்.

நமது நாக்கை இறைவன் வெறும் சுவை உணரும் சதையாக மட்டும் படைக்கவில்லை. நாக்கில் படாமல், அதன் உமிழ் நீரில் கலக்காமல் உண்ணக் கூடிய எந்தப் பொருளும் முறையாக ஜீரணமாவதில்லை. முறையாக ஜீரணமாகாத உணவுச் சத்துக்கள் நேராக கிட்னியைப் பாதிக்கச் செய்கின்றன. இவ்வாறு முறையாக ஜீரணமாகாத உணவுப் பொருள் எவ்வளவு உயர்வானதாக இருந்தாலும் அவற்றை நம் உடல் நிராகரித்து விடுகின்றது.


நாக்கில் 9000 க்கு மேற்பட்ட சுவை உணர்வு மொட்டுக்கள் இருக்கின்றன. இவைகள் நாம் உண்ணும் உணவுகளிலிருந்து பெறப்பட்ட சத்துக்களை சுவையின் அடிப்படையில் பிரித்து சம்பந்தப்பட்ட உறுப்புக்கு அனுப்புகிறது. அதன் மூலம் அந்தந்த உறுப்புக்கள் பலமடைகின்றன. உடலும் ஆரோக்கியமாக இருக்கின்றது. இவையெல்லாம் நாம் உணவை மிகவும் நன்றாக மென்று சுவைத்து ( உமிழ் நீர்கலந்து ) நிதானமாகச் சாப்பிடும் போது தான் நடைபெறும்.

உதாரணமாக பாகற்காயை சாப்பிடுகிறோம். அதன் கசப்பு சுவை நாக்கால் அறியப்பட்டு உடன் மூளைக்கு தெரியப்படுத்தப்படுகின்றது. இந்த தகவல் மூளைக்குக் கிடைத்தவுடன் கசப்புச் சுவையுடன் கூடிய சத்து எந்த உறுப்புக்குத் தேவையோ அவைகளுக்குத் தகவல் அனுப்புகிறது.

கசப்பு சுவை தேவைப்படும் உடல் உறுப்புக்கள் இதயம், இதய மேல் உறை, சிறுகுடல் ஆகியவைகளாகும்.

எனவே இந்த தகவல் வந்ததும் இந்த உறுப்புக்கள் தயார் நிலையில் இருக்கின்றன. பாகற்காயை நாம் மென்று சுவைத்து சாப்பிட்ட அதன் சத்தை உடனடியாக அவை கிரகித்துக் கொள்கின்றன.

இது போன்றே இனிப்பு சுவையானது வயிறு மற்றும் மண்ணீரலுக்கும் - உவர்ப்பு சுவை சிறுநீரகம், சிறுநீர்ப்பைக்கும் - புளிப்பு சுவை பித்தப்பை, கல்லீரலுக்கும் - காரச் சுவை நுரையீரல், பெருங்குடலுக்கும் பயன்படுகிறது. இனிப்பு சுவை வயிற்றுக்கு சக்தியளிக்கும் என்பதால் இனிப்பைத்




தின்பதோ, உப்பு சுவை கிட்னிக்கு சக்தியளிக்கும் என்பதால் நேரடியாக உப்பைத் தின்பதோ, சரியான அணுகுமுறையல்ல.

சாதாரணமாக நாம் சாப்பிடும் ஒவ்வொரு உணவுப் பொருளிலும் பல வகை சுவைகளும் கலந்தே இருக்கின்றன. ஒரு பிடி வெறும் சோற்றை வாயில் இட்டு நன்றாக மென்று பாருங்கள். முதலில் லேசான இனிப்பு சுவை தெரியும். பிறகு சிறிது உவர்ப்பு சுவை தெரியும். நன்றாக மென்று முடித்த பிறகு சப்பென்று ஒரு சுவையும் தெரியாது இருக்கும். இது போன்றே ஒவ்வொரு உணவுப் பொருளிலும் பல வகை சுவைகள் கலந்து இருக்கின்றன. சில உணவு பொருட்களில் சில சுவை அதிகமாக இருக்கும். உதாரணமாக பாகற்காயில் கசப்பு சுவையும், பழம், தேன் ஆகியவற்றில் இனிப்பு சுவையும்.

நாம் உணவை நன்றாக நிதானமாக சுவைத்துச் சாப்பிடும்போதுதான் நாக்கால் சுவை உணரப்பட்டு மூளைக்கு தகவல் அனுப்பப்பட்டு அந்த சுவை சம்பந்தப்பட்ட உறுப்புகளுக்கு சமிக்ஞை (signal) அனுப்பப்பட்டு அவைகள் அந்த சத்தைப் பெறுகின்றன. அப்படியில்லாமல் விரைவாக சாப்பிடும் போது நாக்கின் உணர்வு மொட்டுக்களில் முழுமையாக அந்த உணவு படுவதில்லை. உமிழ்நீரிலும் கலப்பதில்லை. இதனால் நாக்கால் சுவைகளை தெளிவாகப் பிரித்து மூளைக்கு தகவல் தெரிவிக்க முடிவதில்லை. சரியான சிக்னல் கிடைக்காத காரணத்தினால் அந்த உணவின் சத்துக்கள் அனைத்து உறுப்புகளினாலும் நிராகரிக்கப்பட்டு, இறுதியில் வேறு வழியில்லாமல், கிட்னியைச் சென்று அடைகின்றன. கிட்னியில் ஓரளவுதான் இந்த சத்துக்களைச் சேமிக்க முடியும். எனவே குறிப்பிட்ட அளவினைத் தாண்டும் போது கிட்னியும் தொடர்ந்து நிராகரிக்க ஆரம்பித்துவிடுகின்றது. இதன் விளைவுதான் உடல் பெருத்துப் போவது. மேலும், உடலின் பல உறுப்புகள் பலமிழந்து பல வியாதிகள் உருவாகின்றன. அதிகமாக சாப்பிடும் அவைகளை முறையாக சாப்பிடாத காரணத்தால் உடல் பெருத்து பல நோய்கள் உருவாகின்றது.

விட்டமின் மாத்திரைகளை நாம் எப்படி சாப்பிடுகின்றோம். இப்போது யோசனை செய்து பாருங்கள்?





வாயில் போட்டு நாக்கில் கூடப் படாமல் விழுங்கி விடுகின்றோம். இந்த மாத்திரைகளை நம் உடல் உறுப்புக்கள் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. இந்த மாத்திரைகளால் கிட்னியும்மண்ணீரல் கல்லீரல் என்று பாதிக்கப்பட்டு உடல் நோய்களைப் பெற்றுக் கொள்வது தான் மிச்சம்.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழலாம். விழுங்காமல் மென்று தின்றால் அந்த சத்துக்களை உடல் கிரகித்துக் கொள்ளுமாவென்று? நாம் உடல் அமைப்பு இரசாயன கலவைகளையும், அதனால் உண்டான செயற்கைச் சுவைகளையும் ஏற்றுக் கொள்வதில்லை.

இறை நியதியுடன் சிந்திப்போமானால், படைத்த இறைவனை மடையனாக்கும் முயற்சிதான் விட்டமின் மாத்திரைகள். அந்த அளவற்ற அருளாளன் மனிதனுக்கு தேவையானதை அழகாக படைத்திருக்கின்றான். உதாரணமாக ஆரஞ்சுப் பழம்.

சிறு விதையிலிருந்து வளர்ந்து குறிப்பிட்ட காலத்தில் சுவையில்லா மண்ணிலிருந்து சுவையுள்ள ஆரஞ்சுப் பழத்தைத் தருகின்றது. அதன் தோலை உரித்து, அதன் சுளைகளை வாயில் இட்டு சுவைத்துச் சாப்பிடும் போது தான் அதன் உண்மையான சத்துக்கள் கிடைக்கின்றன. விட்டமின் சி மாத்திரைகளாக சாப்பிடும் போது அவைகள் மண்ணுக்குக் கூடப் பயன்படாமல் போகின்றன.

விட்டமின் மாத்திரைகளில் உடம்புக்குத் தேவையான அனைத்து சத்துக்களும் இருக்கின்றன என்று கூறும் பொழுது மருத்துவமனைகளில் ஏன் ரொட்டியும் பாலும் வெண்ணையையும் தருகின்றார்கள் என்பதை சற்று சிந்தித்துப் பார்ப்பது நல்லது!?

விட்டமின் மாத்திரைகள் தேவையான பலத்தைக் கொடுக்கும் என்றால், இராணுவ வீரர்கள் தங்களது முதுகில் ஏன் சாப்பாட்டு மூட்டைகளைக் கட்டிக் கொண்டு செல்ல வேண்டும்? இந்த சாப்பாட்டு மூட்டைகளுக்குப் பதிலாக எடை குறைந்த எளிதில் கொண்டு செல்லக் கூடிய இந்த சத்து மாத்திரைகளைச் சிரமமின்றி கொண்டு செல்ல முடியுமே என ஏன் நாம் சிந்திப்பதில்லை?

இந்த மாத்திரைகள் எவ்வளவு தான் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருந்தாலும், அதிக சத்துள்ளவை என்று கூறப்பட்டாலும் தினமும் ஒவ்வொரு வேளைச் சாப்பாட்டிற்குப் பதிலாக

இந்த மாத்திரைகளை உட்கொள்ள முடியுமா?

விவசாயி வானத்தையும், பூமியையும் மாறி மாறிப் பார்த்து, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டு, உணவுப் பொருட்களை விளைவிக்க வேண்டிய தேவையில்லையே!

பஞ்சத்தால் வாடும் மக்களுக்கு பிரியாணிப் பொட்டலத்தையும் கஞ்சித் தொட்டியையும் காட்டுவதற்குப் பதிலாக விட்டமின் சத்து மாத்திரைகளை வழங்கி விட்டுப் போகலாமே!

இதற்கெல்லாம் பதில்கள் எங்கும் கிடையாது. விட்டமின்களையும் தாதுப் பொருட்களையும் நாம் உண்ணும் இயற்கையான உணவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் தன்மையுடனேயே நம் உடல் உறுப்புக்கள் அமையப் பெற்றிருக்கின்றன. நம் உடலே நம் உடலுக்குத் தேவையான சில சத்துக்களைத் தானே தயாரித்துக் கொள்ளும் சக்தியையும் பெற்றிருக்கின்றது.

உதாரணத்திற்கு மாலை வெயிலில் நம் உடல் விட்டமின் டி யை தயாரித்துக் கொள்கிறது. இதே போல் கல்லீரல், தோல் போன்று மற்ற உறுப்புக்களும் தேவைக்கேற்றபடி செயல்பட்டு விட்டமின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றன.

செயற்கை முறையில் தயாரிக்கப் பட்ட விட்டமின்களை உடல் ஏற்றுக் கொள்வதில்லை. அவைகளை புறக் கணித்து வெளித்தள்ளி விடுகின்றன. இப்படி ஒரு வலுவான ஆற்றல் நம் உடலுக்கு இருக்கின்றது. செயற்கை சத்துக்களை அந்நியப் பொருட்களாகக் கருதி கழிவுகளாக நினைத்து, நமது உடல் நிராகரித்து விடுகின்றது.

நிர்ப்பந்தமாக இவைகளை உடலில் செலுத்தும் போது உடல் உறுப்புக்கள் நன்மைக்குப் பதில் தீங்கையே பெற்றுக் கொள்வதோடு அவை அதன் மூலம் பழுதடையவும் ஆரம்பிக்கின்றன.

விட்டமின் மாத்திரைகளை மட்டு மல்ல, இதே போன்ற அணுகு முறையில் தயாரிக்கப்படும் சத்து மிக்க பானங்களுக் கான கலவைப் பொடிகள் மற்றும் குழந்தை உணவுகள் என்று பெயரிட்டு விற்கப்படும் அனைத்து உணவுப் பொருட்களும் இந்த வகையைச் சார்ந்தவையே.

எனவே, சாதாரணமாக இயற்கையான உணவுகளை உண்டு இன்பமாக வாழக் கற்றுக் கொள்வோம். கற்றுக் கொடுப்போம். இதன் மூலம் மருந்தில்லா உலகம் படைத்து மனித நேயம் காப்போம்.

**சாஹிர் முஹம்மட்**



# SMS கடி

நீ சிரித்தால் அது எனக்கு "Ringing Tone"
நீ கோபப்பட்டால் அது எனக்கு "Vibration"
நீ என்னை நினைத்தால்
அது எனக்கு "Message Tone"
உன் கண்கள் கலங்கினால்
அது எனக்கு "Battery Low"
நீ என்னை மறந்தால் என் இதயம் "Switch Off"

அன்புஇருந்தால் பண்பு இருக்கும்
ஆசை இருந்தால் பாசம் இருக்கும்
நல்ல நட்பு இருந்தால் சந்தோஷம் இருக்கும்
என் Cell இருந்தா உங்களுக்கு இம்சை இருக்கும்



பொலிசுக்கு Case வேணும்
டொக்டருக்கு Nurse வேணும்
பல் விளக்க Brush வேணும்
மேல போட Dress வேணும்
S.M.S அனுப்ப நல்ல மனசு வேணும்
அதைப்படிக்க ஒரு loose வேணும்

Suger இல்லை என்டா Coffee வேஸ்ட்
Love இல்லை என்டா Life வேஸ்ட்
Moon இல்லை என்டா Sky வேஸ்ட்
மச்சான் நீ இல்லை என்டா Zoo வேஸ்ட்
பிளீஸ் கெதியா போடா!

Love பண்ண Luck வேணும்
Business பண்ண Money வேணும்
அன்பு காட்ட அம்மா வேணும்
பாசம் காட்ட Wife வேணும்
இந்த மாதிரி S.M.S அனுப்ப
நான் வேணும்!

# யாழ்ப்பாணத்தில் தனியார் ஒளிபரப்புக்கள்



உலக நாடுகளில் புதியவை எவை அறிமுகமாகின்றதோ அவற்றை உடனடியாக சோதித்து அக்குவேறு ஆணிவேறாக பிரித்துப் பார்க்க பிரியப்படுபவர்கள் யாழ்ப்பாண மக்கள். ஆரம்ப காலங்களில் இலங்கையில் ட்ரான்ஸ் சிஸ்ரர் என்று சொல்லப்பட்ட அப்போதைய பெரிய திருகு வட்டங்கள் கொண்ட ரேடியோக்கள், கிராமோ போன் ரெக்காடர்கள், தொலைக் காட்சிகள் என அனைவ முதன் முதலில் இலங்கையில் யாழ்ப் பாணத்திலேயே அதிகளவில் பயன் படுத்தப்பட்டன.

19 ஆம் நூற்றாண்டுகளில் இருந்தே யாழ்ப்பாணத்தவர்கள், வெளிநாடுகளில் வர்த்தகங்கள், தொழில்கள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். சிங்கப்பூர், மலேசியா, தாய்வான், யாவா போன்ற நாடுகளுக்கு அன்றைய பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் அரச அலுவலகர்களாக பெருமளவிலான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் அன்றே கல்வி நிலையில் ஆசியாவில் உயர்ந்து நின்றதன் காரணத்தால் வெள்ளையர்களால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த நிலையில் இலங்கைக்குள்ளேயே எனைய சமுதாயங்கள் சுழன்று கொண்டிருந்தபோது உலகஓட்டத்திற்கு ஏற்ப தம்மை தயார்படுத்த ஆரம்பித்துக்கொண்டவர்களும் யாழ்ப்பாண மக்களே. இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்னர் மேல்நிலையினை அடைந்திருந்த அந்த மக்கள், இலங்கை பெரும்பான்மை இனத்தினரின் சுதந்திரத்தின் பின்னர், அவர்களின் ஆத்திரங்களாலும், பொறாமைகளாலும் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டது வரலாறாகும். இருப்பினும் யாழ்ப்பாண மக்கள் அவர்கள் நினைத்ததுபோல சளைத்து விடவில்லை.

1979 ஆம் ஆண்டு இலங்கையில் ஒளிபரப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டு தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள் ஆரம்பமாக தொடங்கின.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

இந்த நிலையில் 1979ஆம் ஆண்டு ஐ.ரி.என். என்ற சுயாதீன ஒளிபரப்பு சேவையும், 1982ஆம் ஆண்டு இலங்கையின் தேசியத் தொலைக்காட்சியான ரூபவாஹினியும் ஆரம்பிக்கப்பட்டன. இருப்பினும் இவை இரண்டுமே அரசாங்க தொலைக் காட்சி சேவைகளாகவே நடத்தப்பட்டன. இந்த சேவைகளிலும் தமிழ் நிகழ்ச்சிகள், மிக மிக அரிதாகவே காணப்பட்டன. இப்படியானதொரு சூழ்நிலையிலேயே தமிழ் நிகழ்ச்சிகள் தமிழ்த்திரைப்படங்கள் என்பவற்றை வீட்டில் இருந்தவாறே பார்க்கவேண்டும் என்ற ஆர்வம் யாழ்ப்பாண மக்களிடம் எழுந்தது.

அந்த எண்ணங்கள் உடனடியாகவே செயற்பாடுகளாக மாற்றம் கண்டன. 1983 ஆம் ஆண்டு மற்றும்

நூலகம்



1984 ஆம் ஆண்டு காலங்களிலேயே யாழ்ப்பாணத்தில் தனியார் ஒளிபரப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு ஒளிபரப்பு சேவைகள் நடைபெறத் தொடங்கிவிட்டன

அன்றைய நிலையில் வி.எச்.எஸ் அலையமைப்பில் ஒளிபரப்பப்பட்ட இந்த ஒளிபரப்புக்கள் யாழ்ப்பாண மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றன. ஒன்று இரண்டென ஆரம்பிக்கப்பட்ட ஒளிபரப்பு சேவைகள் 15 ற்கும் மேற்பட்ட யாழ்ப்பாண தனியார் ஒளிபரப்பு நிலையங்கள் உருவாகும் வரை தொடர்ந்தன.

யாழ்ப்பாணத்தில் ஈச்சமோட்டை மற்றும் அரியாலை பகுதிகளில் வைத்து "ரீகல் வீடியோ மூவிஸ்" என்ற பெயரில் தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்தச்சேவை யாழ்ப்பாண நகரை பெரும்பாலும் மையப்படுத்தியிருந்தது. யாழ்ப்பாண நகருக்குள் தெள்ளத் தெளிவாக அதன் ஒளிபரப்புக்களை பார்க்கக்கூடியதாக அது இருந்தது. அதேபோல மானிப்பாய், நவாலி, சண்டிலிப்பாய் போன்ற பிரதேசங்களுக்கு ஒளிபரப்பினை தெளிவாக பார்க்கக்கூடியவாறு "விக்னா" என்ற சேவை ஒளிபரப்பட்டது. அதேபோல யாழ்ப்பாணம் கச்சேரியடிப் பகுதியில் இருந்து "செல்வா வீடியோ மூவிஸ்" என்ற தொலைக்காட்சி அலைவரிசையும், யாழ்ப்பாணம் ஐந்து சந்தி பகுதியில் முஸ்லிம் சகோதரர்களால் "வாஹிட்" என்ற தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவைகளும் நடத்தப்பட்டு வந்தன.

இவ்வாறாக, புலவர் வீடியோ, லவ்பேர்ட்ஸ், நல்லூர் வீடியோ, என 15 க்கும் மேற்பட்ட தனியார் ஒளிபரப்பு சேவைகள் தொடங்கப்பட்டன.

இதில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய விடயங்கள் என்ன வென்றால், இவர்கள் தமக்குள் போட்டி போட்டுக்கொள்ளாது, ஒரு செயற்குழு ஒன்றினை அமைத்து, நேரப் பிரகாரம் தமது ஒளிபரப்பு சேவைகளை வழங்கிவந்தார்கள்.

ரூபவாஹினியில் "என்ன சுந்தரி புது சட்டையா?" என்ற சண்லைட் விளம்பரம் சிரிக்கத்தக்க ஒரு விளம்பரமாக வந்தபோதே தரமான விளம்பரங்களை யாழ்ப்பாண விளம்பர அமைப்புக்கள், யாழ்ப்பாண விற்பனை நிலையங்களின் விளம்பரங்களை தரமாக அமைத்திருந்தார்கள். ரூபவாஹினியில் மாதம் ஒருமுறை ஒரு திரைப்படத்திற்கு தவமிருந்து பார்த்து இரசித்த மக்களுக்கு, புதிய புதிய திரைப்படங்களை திகட்டத் திகட்ட வழங்கினார்கள் இந்த யாழ்ப்பாண தனியார் ஒளிபரப்பு நிலையத்தவர்கள்.

விளம்பரங்கள், விசேட நிகழ்வுகள், போட்டிகள், பண்டிகை விழாக்கள், மாணவர்களின் போட்டி நிகழ்ச்சி ஒளிபரப்புக்கள், விளையாட்டுப்போட்டி ஒளிபரப்புக்கள், கல்வி நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள், விவாதங்கள், கலைநிகழ்ச்சிகளின் ஒளிபரப்புக்கள், கோவில்களின் உற்சவங்களின் நேரடி ஒளிபரப்புக்கள் என்று மெல்ல மெல்ல தரமான தனியார் ஒளிபரப்புக்களுக்கான வித்தினை 1983-84ஆம் ஆண்டுகளிலேயே போட்டுவிட்டன யாழ்ப்பாண தனியார் தமிழ் ஒளிபரப்புக்கள். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை எடுத்துக்கொண்டாலும் திரைப்படங்கள் மட்டும் என்ற வரையறைக்குள் நின்றுவிடாது, அன்று மக்களுக்கு புதிதாக இருந்த சிங்கப்பூர் ஒளியும் ஒலியும் என்ற மேடைநிகழ்ச்சிகள், முதல் முதல் இடம்பெற்ற திரைப்பட நட்சத்திரங்கள் பங்கேற்ற ஸ்ரார் கிரிக்கட் நிகழ்ச்சிகள், சிறுவர்களுக்கான கார்ட்டூன் நிகழ்வுகள், ஆழ்கடல் உலகம், வினோத உலகம் போன்ற நிகழ்வுகள் என்பவற்றையும் ஒளிபரப்பு செய்தனர். அடுத்து முக்கியமாக சுட்டிக்காட்டப்பட வேண்டிய சம்பவம் என்னவென்றால் மாணவர்களுக்கான உயர்தரப் பரீட்சை மற்றும் சாதாரண தரப் பரீட்சைகள் என்றால் தமது ஒளிபரப்புக்களை அந்த பரீட்சைகள் முடியும் வரை ஒத்தி வைத்திருந்தனர்.

வரையறுக்கப்பட்ட வளங்களை வைத்து உச்ச பயனை அடைவது



பொருளியலின் சவால் என்றாலும், யாழ்ப்பாண மக்களே இந்த விடயத்திற்கு எடுத்துக்காட்டானவர்கள். அவர்களின் பல கட்டங்களிலும் கவனித்துப்பார்த்தால் அந்த விடயம் புரியும். குறைந்த வளங்களை வைத்து நிறைந்த பயனை அடையும் அவர்களின் திட்டங்கள் பாராட்டத்தக்கவை. பெற்றோல் தட்டுப்பாடாக இருந்தபோதும் வாகனங்களை இயக்கியது, மின்சாரம் இல்லாத போதும், டைனமோவில் இருந்துவரும் ஏ.சி மின்சக்தியை டி.சி சக்தியாக ஒரு சேர்க்கிட்மூலம் மாற்றி சைக்கிளை சுற்றி ரேடியோ கேட்டது, அதேபோல வாகனங்களின் வைப்பர் மோட்டர்களை சுற்றி தொலைக்காட்சி பார்த்தது, திகைக்கவைக்கும் பல சுதேச கண்டுபிடிப்புக்கள், என அடுக்கிக் கொண்டே போகலாம்.

அந்த வகையில் இதற்கு முன்னதான காலத்தில் அதி நவீன கருவிகள் இல்லாமல் தம்மிடம் இருக்கும் ஒரு சில சிறிய கருவிகள் துணைகொண்டே இவர்கள் இந்த தொலைக்காட்சி ஒளிபரப்புக்களை மிகவும் தரமாகவும், சிறப்பாகவும் செய்துகாட்டினார்கள். கிட்டத்தட்ட 1987 வரை தொடர்ந்த இந்த யாழ்ப்பாண தனியார் ஒளிபரப்புக்கள், அதன் பின்னர் இந்தியப் படையின் ஆக்கிரமிப்பினாலும், அதன் பின்னர் இடம்பெற்ற மோதல் காலங்களில் யாழ்ப்பாணம் மின்சாரமின்றி இருந்ததனாலும் இடைநிறுத்தப்பட்டன.

இன்று இலங்கையில் தமிழ் தனியார் தொலைக்காட்சி வரலாற்றினை ஆரம்பித்தவர்கள் நாங்களே! தமிழ்வளர்ப்பவர்கள் நாங்களே! என்று சொல்லிக்கொள்பவர்கள் யாழ்ப்பாண ஒளிபரப்புக்கு என்று ஒரு வரலாறு உண்டு என்பதை புரிந்துகொண்டால் சரி.







# டீன் ஏஜ் பெண்களுக்காக!

டீன் ஏஜ் வயதிலுள்ள பெண்கள் தம்மை அழகுபடுத்துதலில் அதிக நேரங்களைச் செலவிடுவது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனால் இந்த அழகு சிகிச்சைகளில் ஆபத்தான விளைவுகள் இருக்கின்றன என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் இந்த அழகு சிகிச்சைகளில் கவனமாக இருக்க வேண்டிய சில விடயங்களை இங்கே தருகின்றோம்.

டீன் ஏஜின் ஆரம்பத்தில் இருப்பவர்கள் புருவங்களை ஷேப் செய்ய வேண்டாம். வயது கூடிய பிறகு செய்து கொள்ளலாம்.

பிளீச்சிங் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

சருமத்தின் தேவையற்ற ரோமங்களை அகற்ற ரேசர், கிரீம் உபயோகிக்க வேண்டாம்.
கூந்தலுக்கான மிகவும் ஸ்ட்ரோங்கான சிகிச்சைகளைத் தவிர்க்கலாம். ஸ்ட்ரெயிட்டிங், கலரிங் போன்றவற்றைக் கூடியவரையில் தள்ளிப் போடுவது நல்லது.

தினசரி கூந்தலுக்கு ஷாம்பு உபயோகிப்பதைத் தவிர்க்கலாம்.

அழகு, நாகரிகம் என்ற பெயரில் புருவங்களைத் துளையிட்டு நகை அணிவது, தொப்புளைத் துளையிட்டு நகை அணிவது போன்றவற்றைச் செய்ய வேண்டாம். வரிசையாகக் காது மடல்களைக் குத்திக் கொண்டு நகை அணிவது கூட ஆபத்தாக முடியலாம். நரம்புகளில் பட்டால் ஆபத்து.

நீலம் பச்சை மாதிரியான நிறங்களில் ஐ லைனர், ஐ பென்சில் உபயோகிப்பது இன்றைய டீன்ஏஜ் பெண்கள் மத்தியில் ஃபேஷன். இவற்றிலுள்ள கெமிக்கல்கள் கட்டாயம் கண் பார்வையை பாதிக்கும். சருமத்துக்கும் ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது.

டார்க் நிற, மேட் ஃபினிஷ் (ஈரப்பதமே இல்லாதது, நீண்ட நேரம் நீடிப்பது) லிப்ஸ்டிக்குகளை உபயோகிப்பதை தவிர்ப்பது நல்லது. உதடுகளை அழகாக, பளபளப்பாகக் காட்ட லிப் பாம் உபயோகிக்கலாம்.

நகங்களை நீளமாக வளர்க்காமல், குட்டையாக வெட்டி விடுவது ஆரோக்கியமானது.

உடல் நாற்றத்தைத் தவிர்க்க மிதமான வாசனையில் பேர்ஃப்யூம் உபயோகிக்கலாம். இதை கைகளின் மணிக்கட்டுப் பகுதியில் தடவிக் கொள்ளலாம்.

பெண்கள் தினமுமே பேண்ட்டி லைனர் அணியலாம். அந்தரங்க உறுப்பு சுத்தத்துக்கு இது உதவும்.

தினம் இரவில் பல் தேய்த்து முடித்ததும், மவுத் வோஷ் உபயோகிக்கலாம்.



# பெரிய மனுசி

**இஸ்லாமிய சமுதாயத்தில் "பெண் வயசுக்கு வருதல்" எனும் இயற்கை நிகழ்வை காரணம் காட்டி சமூகத்தில் நசுக்கப்படும், பெண் கல்வி, பெண் முன்னேற்றம், போன்ற செயல்களைச் சாடும் சிறுகதை இது.**

"ஆயிஷா இனி ஸ்கூலுக்கு வராதாம்" சக நண்பனின் வார்த்தைகள் என்னுள் சாட்டையடியாகப் பதிந்தன.

"ஏண்டா" பதற்றம் என்னுள்

"அது பெரிய மனுசி ஆயிடுச்சாம்" அது எப்படி நானும் அவளும்முதலாம் வகுப்பிலிருந்து ஒன்றாகப் படிக்கிறோம், நான் பெரிய மனுசனாகலை அது மட்டும் எப்படி,,,?" விடை தெரியாத கேள்விகள் என்னுள் முட்டி மோத அன்று இரவு என்றும் இல்லாத அளவு ஆயிஷாவின் நினைவு என்னைச் சுற்றிச் சுற்றி வந்தது..

ஆயிஷா என் முதல் பள்ளித் தோழி பாடசாலை.. செல்லும் வழியில் என்னுடன் பயணப்படுபவள்.. என்னை விட உயரம், தெத்துப்பல் சிரிப்பு, நல்ல அறிவாளி முதல் மதிப்பெண்ணைத் தட்டிச் செல்ல எங்களுக்குள் ஒவ்வொரு பரீட்சைக்கும் போட்டா போட்டி இருந்தாலும், நட்பில் எங்கள் நெருக்கம் கண்டு பள்ளியே வியந்து நிற்கும்.

அடுத்த நாள் பாடசாலைச் சென்ற போது நண்பன் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. அவன் சொன்னது பொய்யாக இருக்கக் கூடாதா என்று மனசு ஏங்கியது. நடந்து செல்லும் தூரத்தில் பாடசாலை என்பதாலும் அன்று மாட்டு வண்டிப்பயணம் கூட வசதியானவர்களுக்கு மட்டுமே சொந்தம் என்பதாலும் என் பாடசாலைப் பயணம் முழுவதும் நடை பயணமே எங்கள் வீட்டிலிருந்து இரண்டாவது முடுக்கை கடக்கும் போது கடலில் கலக்கவரும் நதி போல் எனக்காக காத்திருப்பாள். இன்று அந்த இடத்தில் வெறுமை முடுக்கின் வழியே அவள் வீட்டை எட்டிப்பார்த்தேன். ஆயிஷாவின் லாத்தா நின்றிருந்தார் கள்.அவரிடமே கேட்டுவிடுவது என்று அருகில் சென்றேன்.

"ரியாஸ், என்ன ஸ்கூலுக்கு கிளம்பியாச்சா.."

"ஆமாம் லாத்தா அது தான் ஆயிஷாவை கூட்டி போகலாம்னு வந்தேன்" என்றேன் தயங்கியபடி...

என் சத்தத்தைக் கேட்டு ஆயிஷாவின் உம்மாவும் வெளியே வந்தார்.

நான் சலாத்தி வழியே ஆயிஷா தெரிகிறாளா என்று ஊடுருவி பார்க்க முயன்றேன். அவள் தென்பட வில்லை.

"இனி ஆயிஷா ஸ்கூலுக்கு வராது வாப்பா.." ஆயிஷாவின் உம்மா.

"ஏன்" இனம் புரியாத ஏக்கத்துடன் நான்.

"அவ பெரிய மனுசி ஆயிட்டா.." ஆயிஷா உம்மா முற்றுப்புள்ளி வைத்தார்கள்

ஏமாற்றத்துடன் பாடசாலை நோக்கி நடந்தேன்..

அவ பெரிய மனுசி ஆயிட்டாளாம் ஸ்கூலுக்கு வரமாட்டாளாம் இது எப்படி பதிலாகும். போன வாரம் வகுப்பில் லீலா டீச்சர், பெரிய ஆளா வரோணும் நல்லா படிக்கோணும் என்று சொன்னது நினைவுக்கு வந்தது. ஆயிசா நல்லா படிச்சதினாலே பெரிய மனுசி ஆயிட்டாளா..? வகுப்பில் அவள் ஞாபகம் இருமடங்கானது.

நேற்றுவரை என் கூடவே இருந்தவள் இன்று அவள் வீடு செல்லும் போது கூட நம்மைப்பார்க்க வரலையே. குழப்பம் தொடர்ந்தது.

இரவு சாப்பிடும் போது உம்மாவிடம் கேட்டேன்.

"உம்மா நான் பெரிய மனுசனாயிட்டா என்னை ஸ்கூலுக்கு அனுப்ப மாட்டியா..?"

நீ நல்லா படிச்சா தாண்டா பெரிய மனுசனாவே டீச்சர் சொன்ன அதே வார்த்தை..



"அப்ப ஏன் ஆயிஷா பெரிய மனுசியாயிட்டான்னு ஸ்கூலுக்கு விட மாட்டேன்கிறாங்க"

"அவ பொம்பளப்புள்ளடா"

"அது என்ன பொம்புளபுள்ளைக்கு ஒண்ணு ஆம்பளை புள்ளைக்கு ஒண்ணு.."

"கெப்பர்தனமா பேசாமே போய் தூங்குடா.." அம்மா குரலில் சற்று கடுமை.

அன்று விடை தெரியாத வினாக்களுடன் உறங்கிப்போனேன்.

வருடங்கள் உருண்டோடின. நான் படித்து டொக்டராகி எங்கள் ஊரிலேயே கிளினிக் ஆரம்பித்து என் வாழ்வில் பல அத்தியாயங்களுக்குப் பின் ஆயிஷாவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

அன்று அஸர் தொழுகையை முடித்து விட்டு வீடு வந்த போது வராண்டாவில் ஒரு பொண்ணுடன் உம்மா பேசிக்கொண்டிருந்தார்கள் அவள் கையில் எட்டு வயசு மதிக்கத்தக்க ஒரு சிறுமி காய்ச்சலில் நடுங்கியபடி. நான் பெரும்பாலும் வீட்டில் வைத்து நோயாளிகளைப் பார்ப்பதில்லை. யார் இவர்கள் என்று எண்ணியபடி வந்த என்னைப்பார்த்த உம்மா.

"ரியாஸ் வாப்பா இது யாரென்று தெரியாதா?" பதிலுக்கு காத்திருக்காமல் பதிலையும் சொன்னார், "இது நம்ம ஆயிஷாடா..அது புள்ளைக்கு ரொம்ப முடியலைன்னு உன்னை பார்க்க வந்திருக்கு"

"ஆயிஷாவா" எத்தனை வருடங்களாயிற்று புன்முறுவலுடன் பார்த்தேன்.அவளிடம் முன்பிருந்த உற்சாகமில்லைஅடையாளமும் தெரியவில்லை. இருந்தாலும் அதே தெத்துப் பல் சிரிப்பு. வறுமையின் வாட்டம் அவளைச்சுற்றி தெரிந்தது.



"எப்படியிருக்கே ஆயிஷா? "என்றபடி அவ மகளை பரிசோதிக்க ஆரம்பித்தேன்.

"நல்லா இருக்கேன் டொக்டர்" வார்த்தையில் மரியாதை என்னை அந்நியப்படுத்தியது.

"நீ பார்த்துக்கிட்டிரு ரியாஸ் வராத புள்ள வீட்டிற்கு வந்திருக்கு, நான் சாயா எடுத்துக்கிட்டு வர்றேன்" என்று கூறியபடி பதிலை எதிர்பாராமல் உம்மா உள்ளே சென்றார்.

நான் ஆயிஷாவை நோக்கினேன்.

"ரெண்டு நாளா காய்ச்சல், நானும் சளிக்காச்சல் என்று மருந்து கொடுத்துட்டு விட்டுட்டேன்.. இப்ப ரொம்ப கொதிக்க ஆரம்பிச்சிடுச்சி. ஊரெல்லாம் மலேரியா, டைபாயிடுன்னு வந்து இப்ப சிக்கன் கூனியா,பன்னி காய்ச்சல் வேற பரவுதாம்.பயமா இருக்கு டொக்டர்."

"பயப்பட ஒண்ணும் இல்ல பார்த்திடலாம்.."

அலுவலகத்திற்குச் சென்று ஸ்டெதஸ்கோப்பால் சோதித்தபடி கேட்டேன்

"ஏன் ஆயிஷா உனக்கு என்னை ஞாபகம் இருக்கா.?"

"எப்படி மறக்கும் டொக்டர். சின்னப்புள்ளையிலே குண்டா இருப்பிங்க நாம சேர்ந்து தானே ஸ்கூலுக்கு போவோம். உங்களுக்கெல்லாம் ஹைஸ்கூலு, கொலிஜ் எவ்வளவோ நினைச்சி பார்க்க இருக்கும். ஆனா ஆறாவது வரை படிச்ச இந்த மக்கிற்க்கு நினைச்சிப்பார்க்க சந்தோசமான நாட்கன்னா.. அது தானே டாக்டர்"

"நான் டொக்டர் இல்ல ஆயிஷா உனக்கு எப்பவுமே நான் குண்டு ரியாஸ் தான்."

ஆச்சரியப் பார்வைப் பார்த்தாள்." பரவாயில்லையே எல்லாத்தையும் ஞாபகம் வச்சிருக்கிங்களே."

"ஒட்டக ஆயிசா கூட ஞாபகம் இருக்கு.." சிரித்தாள்...

"உன் மாப்பிள்ளை எங்கே இருக்கார்?"

சிரிப்பு மறைந்தது

உங்களுக்குத் தெரியாதா அவங்க எனக்கு வார்த்தை சொல்லிட்டாக.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"ஏன்"

"அவங்க ரொம்ப படிச்சவங்க. அவங்களுக்கு படிக்காத இந்த மக்குக்கூட ஒத்து வரலையாம்" சொல்லும் போதே கண்ணில் நீர் கோர்த்தது.

"ஆமா வாப்பா, இந்தப் புள்ளைக்கு படிக்கிற வயசுலே கட்டிக் கொடுத்துட்டாங்க. வந்தவனோ அதிமேதாவி, அது நொட்டை, இது சொத்தை ன்னு எடுத்ததுக் கெல்லாம் சண்டை. இப்ப எல்லாத்தையும் இழந்துட்டு நிற்கிறா. இவ காக்கா தான் அக்கச்சியாவை வச்சிகாப்பாத்து றான்"

உள்ளிருந்து வந்த உம்மா காபி ஆத்தியபடி பேசிய வார்த்தைகளில் காபியின் சூடு குறைந்தது. எனக்கு சூடு ஏறியது.



"சபானா எத்தனாவது படிக்கிறீங்க?"

"போர்த்.." என்றவள் சிறு இடைவெளிக்குப் பிறகு டொக்டர் அங்கிள் நான் பெருசா ஆனதும் உங்களை மாதிரி டொக்டரா ஆவேன் என்றாள்

நான் ஆயிஷாவைப் பார்த்தேன் தலை குனிவாள் என்று எதிர்பார்த்தேன். ஆச்சரியம் தலைநிமிர்ந்தாள் நீண்ட பெருமூச்சு விட்டவள் அழுத்தமாகச் சொன்னாள்.

"இப்பவெல்லாம் படிச்சா மட்டும் தான் பெரிய மனுசி ஆக முடியும்"

அவள் அழுத்த திருத்த உச்சரிப்பில் எனக்கு ஆயிரம் அர்த்தம் தெரிந்து.

சமுதாயத்தின் மீது கோபம் திரும்பியது வயசுக்கு வந்திட்டா படிப்பை நிறுத்தும் பழக்க வழக்கம் மீது வெறுப்பு அதிகமாகியது நல்லா படிக்க வேண்டிய ஒரு பெண்ணின் வாழ்வு என் கண் முன்னேயே கரை ந்து போனதை என்னால் ஜீரணிக்க இயல வில்லை.

அன்று இரவு தஹஜ்ஜத் துவாவில் சமுதாய நலனையும் சேர்த்துக் கொண்டேன்.

இரண்டு நாட்கள் கழித்து ஆயிஷா மகளுடன் கிளினிக் வந்தாள். குழந்தையின் உடல்நிலை நன்கு தேறியிருந்தது.

ஸ்டெதஸ்கோப்பை எடுத்தபடி "உங்க பேரென்ன" என்றேன்.

"சபானா"

"வெரிகுட் நாக்கை நீட்டுங்க..ஆ குட்...ரொம்ப நல்ல இம்ரூமெண்ட் இனி ஒரு கவலையும் இல்லை" என்றபடி ஆயிஷாவை பார்த்தேன்.

முகத்தில் புன்னகை

வட்டாரத்தமிழ்

முடுக்கு –சந்து, தெரு, லாத்தா – அக்கா, சலாத்தி –திரை, காக்கா – அண்ணன், வார்த்தை சொல்லுதல்– – விவாகரத்து, கெட்பர்தனம் – அதிக பிரசங்கித்தனம், அஸர் –மாலை வேளைத்தொழுகை, தஹஜ்ஜத் – நடுநிசித்தொழுகை, அக்கச்சியா – சகோதரி

சாருகேசி வலைப்பூவிலிருந்து





**சிலருக்கு செயற்கையான கிரீம் வகைகளை பயன்படுத்தி உடலை அழகாக்க பிடிக்காது. அவர்களுக்காக உணவுகள் மூலம் உடலை அழகாக்க சில உணவு குறிப்புகள்.**

# சருமத்தை அழகாக்கும் உணவுகள்

உடலின் வெளி அழகுக்கும், உள் ஆரோக்கியத்துக்கும் மிகவும் முக்கியம் கீரை. எல்லா வையான கீரையும் அதிகம் சாப்பிடலாம். குறிப்பாக வெந்தயக்கீரை, பசளைக்கீரை, முருங்கை கீரைகளில் அதிகமாக இரும்பு சத்து மற்றும் ஜிங்க் சத்து இருக்கு. இந்த கீரைகளுடன் விட்டமின் சி சத்துள்ள உணவுகளை சேர்த்து சாப்பிடும் பொழுது இன்னும் அதிகமான சத்துக்கள் கிடைக்கும். இதன் மூலம் கண்களுக்கு கருவளையம் குறையும், முகத்தில் பருக்கள் வருவது குறையும்.

**வருண்ட சருமம் உள்ளவர்கள்**

அதிக வருண்ட சருமம் உள்ளவர்கள் உணவில் கொழுப்பு நிறைந்த உணவுகள் (உடல் நலனுக்கு ஏற்ப) உணவில் சேர்த்துக்கொள்ளவும். ஒலீவ் ஒயில், எள் எண்ணெய், கடலை எண்ணெய், நெய் போன்றவைகளை உணவில் சேர்த்துக்கொள்ளவும்.

**தக்காளி** : விட்டமின் ஏ மற்றும் விட்டமின் சி சத்துக்கள் நிறைந்த பழம். விட்டமின் சி தோலுக்கு எலாஸ்டிக் தன்மை தருகிறது. சருமம் கறுப்பதும் தடுக்கும்.

**இளமையில் முதுமை** : இளமையிலே சிலருக்கு முதுமையான தோற்றம் இருக்கும் அவங்க ஒரு கைப்பிடியளவு ஸ்ரோபெரி அல்லது தினமும் 3 நெல்லிக்காய் சாப்பிடவும். தேவையான சத்துக்கள் கிடைக்கும்.

**மீன்** : மீனிலுள்ள ஒமேகா-3 என்ற பொருள் சரும செல்களை புதுபிக்கும். சருமத்தை பளபளக்கச் செய்யும். வாரத்துக்கு 3 நாள் மீன் சாப்பிடுவது நல்லது. மீன் சாப்பிடாதவர்கள் மீன் மாத்திரை சாப்பிடலாம்.

**முகப்பருக்களை தடுக்க** : சோயாபீன்ஸில் இருக்கும் ஈஸ்ட்ரோஜன் முகப்பருக்கள் வராமல் தடுக்கிறது.

**கரட்** : இதிலுள்ள பீட்டா க்ரோட்டின் சருமத்தை பொலிவுடன் வைக்கும். ஒரேஞ், ஒப்ரிகாட், பப்பாளி, பூசணி, மாம்பழம் சாப்பிட்டாலும் சருமம் பொலிவுடன் இருக்கும்.

**டல்லடிக்கும் முகம்:**

சிலருக்கு முகத்தில் பரு இல்லாமல் சுத்தமாக இருக்கும். இருந்தாலும் ஏதோ முகத்தில் டல்லாக தெரியும். அவங்க அதிகமாக தண்ணீர் குடிக்கணும். அப்பொழுது தான் சருமம் புத்துணர்ச்சி பெற்று ஈரப்பசையுடன் இருக்கும்., குறைந்தது ஒரு நாளுக்கு 9 கப் தண்ணீர்



# கமலா மாமி சொல்லுறா!!

**பாத்திமா**-வாங்க கமலா மாமி.

**கமலா**- வணக்கம் பாத்திமா

**பாத்திமா**- நீங்க எங்க ஸ்கூலுக்கு வந்தது சந்தோஷம். பிள்ளைகள் எல்லாம் உங்க வருகைக்குத்தான் காத்திட்டு இருக்காங்க. வாங்க கிளாசுக்குப் போவம்.

**பிள்ளைகள்** வணக்கம் மேடம்

**கமலா**- வணக்கம் பிள்ளையளே..

**பாத்திமா**- கமலா மேடம் பெண்கள் தொழில் கல்வியைத் தேர்ந்தெடுக்கிறதைப் பற்றி இண்டைக்கு எங்களோட பேசப்போறா. ஒரு எஞ்சினியரா வேலை செய்றவ கமலா மேடம். இந்த விடயத்துக்குப் பொருத்தமானவ எண்டு நினைக்கிறன்.

**கமலா** - சரி. விஷயத்தை ஆரம்பிப்பம். நீங்கள் எல்லாரும் எப்படிப்பட்ட உத்தியோகங்களுக்கு படிக்க போறீங்கள் எண்டு அறிய விரும்புறன். நீங்கள் சொல்லச் சொல்ல இந்த கரும்பலகையிலை உங்கட உத்தியோகங்களிண்டை பேர்களை எழுதிறன்..... எங்க.ஆசிரியர் தொழிலுக்கு எத்தினை பேர் படிக்க ஆசைப்படுறீங்கள்...? ம்ம்ம் உங்களில அரைவாசிப்பேர் ஆசரியர் தொழிலுக்குத்தான் கை உயர்த்தி இருக்கிறியள். சமூக சேவையாளரா வர விரும்புகிறவர்கள்.. ஒருவரும் இல்லையா?.. விமானம் ஓட்டுகிற பைலட்டாக..? ம்ஹூம்.. ஓவியரா, எழுத்தாளரா...? இந்தா நீங்க சொல்லுங்கோ பாப்பம்...ஏன் ஆசிரியர் தொழிலை விரும்புறீங்க?

**மாணவி 1** -பொம்பிளையளுக்குப் பொருத்தமான நல்ல தொழில் எண்டு எல்லோரும் சொல்லினம்.... அதுதான்....

**கமலா** -அதென்னண்டு ஆசிரியர் தொழில் பொம்பிளையளுக்குப் பொருத்தமான தொழில்?

**மாணவி 1** - மேடம் பிள்ளையளையும் வீட்டையும் பாத்துக் கொண்டு வேலை செய்ய வசதி. மத்தியானம் ரெண்டு மணியோட வீட்டுக்குப் போயிரலாம். வருஷத்தில மூண்டு மாசங்கள் விடுமுறை கிடைக்கும்...

**கமலா** - ஒவ்வொருவரும் தங்களுடைய ஆற்றல், விசேட திறமைகள், விருப்பங்கள் இதை வைச்சுக் கொண்டுதான் தங்கள் தொழில்துறையைத் தேர்ந்தெடுக்க வேணும். அப்பதான் எங்கடை திறமைகளின்டை உச்சத்தை அடையலாம். மனத்திருப்தியோடயும் சந்தோஷத்தோடயும் வாழலாம். உலகத்துக்கும் எங்களால அதிகூடிய பிரயோசனம் வரும். குடும்பத்தைப் பாத்துக் கொண்டு செய்ய வசதியான வேலை எண்ட காரணத்துக்காக ஒரு வேலையை தேர்ந்தெடுக்கலாமா? அது சரியா?

**பாத்திமா** - குடும்பமும் முக்கியந் தானே மேடம்?...

கமலா நிச்சயமாக..ஆனா அந்தப் பொறுப்பை ஆம்பிளையளும் எல்லாரும் சேர்ந்து எடுக்கலாமே. அப்படி எடுத்தா.. அவையள் ரெண்டு பேருமே வாழ்க்கையில தாங்கள் விரும்புற துறைகளில வேலை செய்ய வாய்ப்புக் கிடைக்குமே.

**மாணவி 1** அப்ப .நாங்கள் எங்களுக்கு விரும்பினது எதெண்டாலும் படிக்கலாமா மேடம்?

**கமலா** -அதில சந்தேகமே வேண்டாமே... உங்கடை திறமைகளைப் பிரகாசிக்க வையுங்கோ பிள்ளையளே.. இந்த நாட்டுக்கும் எங்கடை சமூகத்துக்கும் பெருமை சேருங்க. உங்கடை பங்களிப்பால எங்களின்ட மக்கள் வாழ்க்கையை உயரச் செய்யுங்க..

**பிள்ளைகள்** - சரி மேடம் . நன்றி மேடம்.



# ஆஷஸ் 2009

# ஒரு அலசல்


உலகின் மிகப் பழைமையான கிரிக்கெட் தொடரான ஆஷஸ் இம்முறை இங்கிலாந்தில் வைத்து இங்கிலாந்தினால் வெல்லப்பட்டுள்ளது.

46 நாட்கள் இங்கிலாந்து முழுவதும் சுற்றிவந்து பலம், பலவீனங்கள் மாறி மாறி இடம்பெயர்ந்து இறுதிப் போட்டியின் நான்காவது நாளிலே தான் ஆஷஸ் தொடர் வெற்றியாளர் தீரமானிக்கப்பட்டமையானது எவ்வளவு நெருக்கமாகப் போட்டிகள் அமைந்தன என்பதைக் காட்டுகிறது. தென் ஆபிரிக்காவில் வைத்து தொடரை வென்ற பெருமிதத்தோடு இங்கிலாந்து மண்ணில் ஆஸ்திரேலியா கால் பதித்தாலும் ஆஷசுக்கு முன்னதாக இடம்பெற்ற டுவென்டி 20 உலகக் கிண்ண அதிர்ச்சித் தோல்விகள் கொஞ்சம் அவர்களை மன அளவில் பாதித்தது உண்மை தான்.




பிரெட் லீயின் காயம் அனுபவமற்ற ஆரம்ப துடுப்பாட்டம், நம்பகமான சுழல் பந்துவீச்சாளர்கள் இல்லாமை என்று அவுஸ்திரேலியா அணிக்கு ஏராளமான சிக்கல்கள். இங்கிலாந்து ஓரளவு கட்டுக் கோப்பாகவே களமிறங்கியது. வேல்சின் கார்டிப்பில் இடம்பெற்ற முதலாவது போட்டியிலே மிக நெருக்கமாக வெற்றியை நோக்கி நெருங்கி வந்த அவுஸ்திரேலியாவின் வெற்றி இங்கிலாந்தின் கடைநிலை துடுப்பாட்ட வீரர்களின் விடாமுயற்சியுடன் கூடிய அர்ப்பணிப்பான துடுப்பாட்டத்தின் மூலமாக தடுக்கப்பட்டது.

பொன்டிங், கட்டிச், நோர்த், ஹடின் என்று நான்கு பேர் சதங்கள் அடிக்க, கிளார்க் அரைச் சதம் பெற ஆஸ்திரேலியா பெற்ற மாபெரும் ஓட்ட எண்ணிக்கை 674. பொன்டிங்கின் சதமும் அவுஸ்திரேலியா இளம் பந்துவீச்சாளர்களின் முயற்சியும் பெரிதாகப் பாராட்டப்பட்டது. இங்கிலாந்து தோல்வியிலிருந்து தப்பித்துக் கொள்ள இறுதிநாளன்று பயன்படுத்திய மோசமான உபாயங்கள் கடும் விமர்சனத்துக்குள்ளானது. அடிக்கடி கையுறை மாற்றுவது, துடுப்பாட்ட வீரர்கள் தண்ணீர் அடிக்கடி குடிப்பது என்று இங்கிலாந்து அணி பல தில்லு முல்லுகளை செய்திருந்தது. முதல் போட்டியில் இவ்வளவு ஆதிக்கம் செலுத்திய அவுஸ்திரேலியா இரண்டாம் போட்டியில் லோர்ட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்திடம் பணிந்துபோகும் என்று யாருமே எதிர் பார்க்கவில்லை. அதுவும் 75 ஆண்டுகளுக்குப் பிறகு ஆஸ்திரேலியா இந்த மைதானத்தில் தனது முதல் தோல்வியை சுமக்கவேண்டி வந்தது.






A.R.V. லோஷன்

பரபரப்பான செய்தியாக இந்த தொடர்நிறைவடைந்த பிறகு டெஸ்ட் கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெறப் போவதாக மெண்டிஸ் அறிவித்தார்.

இது ஒரு பக்கம் இங்கிலாந்து அணியின் கவனத்தை சிதறடிக்கும் என்று கருத்துக்கள் கிளம்பினாலும் பிளின்டோப் தன்னை இந்த டெஸ்ட் போட்டியிலேயே நிரூபித்துக் காட்டியது சிறப்பம்சம். இரண்டாம் இன்னிங்சில் 526 என்ற பெரும் இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடி போராடி 115 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா தோற்றுப் போனது. இங்கிலாந்து தலைவர் ஸ்ட்ரோசின் முதலாம் இன்னிங்ஸ் சதம், மைக்கேல் கிளார்க்கின் இரண்டாம் இன்னிங்ஸ் சதம், ஹட்டின்குக் ஆகியோரின் துடுப்பாட்டங்களோடு பிளிண்டோபின் இரண்டாம் இன்னிங்ஸில் துல்லிய பந்து வீச்சும் இந்த டெஸ்ட் போட்டியின் முக்கிய அம்சங்கள்.

மூன்றாவது டெஸ்ட் போட்டி நிறைய பரபரப்பான விஷயங்களோடு ஆரம்பித்தது. இங்கிலாந்தின் துடுப்பாட்ட பெரும்சுவர்



கெவின் பீட்டர்சன் காயம் காரணமாக விலகிக் கொள்ள இயான் பெல்லின் மீள்வருகை அணிக்கு புத்துயிரளித்தது.

ட்விட்டர் இணையத் தளத்தினூடாக தான் அணியிலிருந்து தூக்கப்பட்டதை அறிவிக்கும் வேடிக்கை அரங்கேறியது. அவருக்குப் பதிலாக அணிக்குள் கொண்டுவரப்பட்ட ஷேன் வொட்சன் இரண்டு இன்னிங்சிலும் அரை சதங்களை பெற்று கலக்கினார். விக்கெட் காப்பாளர் ஹடின் காயமுற அறிமுகமானார் புதிய அவுஸ்திரேலியா விக்கெட் காப்பாளர் கிரகம் மனூ. மழை மூன்றாவது நாள் ஆட்டத்தை முழுமையாகத் தின்றுவிட போட்டி சமநிலையில் முடிவுறும் என்பது அனைவருக்குமே தெரிந்து போனது. ஓய்வு பெரும் முடிவை அறிவித்தும் தன திறமைகள் ஓயவில்லை என பிளின்டோப் நிரூபித்தார். மீண்டும் ஒரு அரைச் சதம்.

அவுஸ்திரேலியாவின் மைக்கேல் கிளார்க் மற்றுமொரு சதம் அடித்து பிரகாசித்தார். மார்கஸ் நோர்த் இன்னொரு சதம் பெறும் வாய்ப்பை நான்கு ஓட்டங்களால் தவற விட்டார். அடுத்த இரண்டு போட்டிகளையும் வென்றால் தான் ஆஷஸ் வசமாகும் என்பதுடன் டெஸ்ட் தரப்படுத்தலில் தங்கள் முதலிடத்தை தக்கவைக்கவும் தொடர் வெற்றி முக்கியம் எனும் நிலையில் அணித்தேர்வுக் குழப்பங்களை ஆஸ்திரேலியா அணிக்குள் ஏற்படுத்தி இருந்தது.

சுழல் பந்துவீச்சாளர் ஹோரிட்சையும் நீக்கி விட்டு நான்கு வேகப் பந்துவீச்சாளருடன் களமிறங்கிய அவுஸ்திரேலியா இங்கிலாந்து அணியை உண்டு இல்லை என்றாக்கி இன்னிங்சினால் வெற்றி கொண்டு தொடரை சமநிலைக்கு கொண்டு வந்தது. முதலாம் இன்னிங்சில் பீடர் சிடிலும், இரண்டாம் இன்னிங்சில் ஜோன்சனும் ஐந்து விக்கெட் பெருதிகளைப் பெற்றனர். இங்கிலாந்தின் ப்ரோட் பிளின்டோப் விட்டுச் செல்லப் போகும் இடத்தைப் பெற்றுக் கொள்ளும் சகலதுறை முயற்சியை ஆரம்பித்தார். துடுப்பாட்டத்தில் அரைச் சதமும் பந்துவீச்சில் ஆறு விக்கெட்டுக்களும், பெற்றுக் கொடுத்தார். பொன்டிங் 78 ஓட்டங்களும், நல்ல போர்மில் இருந்த கிளார்க் 93ஓட்டங்களும் பெற மார்கஸ் நோர்த் மற்றுமொரு சதமடித்து அசத்தினார். தொடர் ஒன்றுக்கு ஒன்று என சமப்பட்ட நிலையில் எல்லோர் கவனமும் இறுதிப் போட்டியில் நிலைத்திருந்தது.

லண்டன் ஓவல் மைதானம் சரித்திரம் ஒன்றை தீர்மானிக்கும் இடமாக மாறிப்போனது. போட்டி வெற்றி, தோல்வி இன்றி முடிவுற்றால் ஆஷஸ் கிண்ணம் ஆஸ்திரேலியா வசமாகும். (கடந்த முறை வெற்றியாளர்கள் ஆஸ்திரேலியா என்பதனால்) இங்கிலாந்து எப்படியாவது வென்றே ஆகவேண்டும் என்று ஆசைப்பட்டது. மறுபக்கம் ஆஸ்திரேலியா தரப்படுத்தலில் முதலிடத்தை தக்கவைத்துக் கொள்ள போராடியது. இருந்த பத்து நாள் இடைவெளிகளும் இரு அணிகளுக்கும் பதற்றம், அழுத்தம் ஆகியவற்றை அதிகரிப்பதாகவே அமைந்தன. அணிகளின் தெரிவுகளில் இரு அணிகளுமே குழம்பியிருந்தன. தடுமாறும் துடுப்பாட்ட வீரர்களில்




மாற்றம் செய்தது இங்கிலாந்து. இவரா, அவரா என்று நிறையக் குழப்பங்களின் பின்னர் ஜோனதன் ற்றொட் என்ற புதிய வீரருக்கு அறிமுகம் வழங்கப்பட்டது. நம்பிக்கையை வீணாக்காமல் இரண்டாம் இன்னிங்சில் ற்றொட் சதம் அடித்து கலக்கினார். உடல் தகுதி கேள்விக் குறியாக இருந்த பிளிண்டோப்பை நீக்குமாறு பல குரல்கள் எழுந்தபோதும் அவர் விளையாடினார். இறுதி டெஸ்ட்டையும் இந்த தொடரையும் பிளிண்டோவுக்காக வென்றாகவேண்டும் என்று அறைகூவல் விடுத்தார் இங்கிலாந்து அணியின் தலைவர் ஸ்ட்ரோஸ். அவுஸ்திரேலியா அணி சுழல் பந்துவீச்சாளர் ஒருவரை எடுப்பதா இல்லையா என்று குழம்பி இறுதியில் முற்றுமுழுதாக வேகப் பந்துவீச்சாளரோடு களமிறங்கியது. ஆனால் இந்த தீர்மானத்துக்கு பின்னர் மிக வருத்தமடைய நேரிட்டது. இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டம் சிறப்பாக இல்லாவிட்டாலும் சராசரியாக அமைந்துவிட முதலாம் இன்னிங்சில் மோசமாக ஆடிய ஆஸ்திரேலியா நான்காவது நாளிலேயே ஓட்டங்களால் தோற்று சுருண்டு தொடரையும் இங்கிலாந்திடம் கையளித்தது. இங்கிலாந்தின் சுழல் பந்துவீச்சாளர் ஸ்வான் போட்டியில் கைப்பற்றிய எட்டு விக்கெட்டுக்கள் ஆஸ்திரேலியாவுக்கு பாடம் ஒன்று புகட்டியது. தலைவராக நின்ற ஸ்ட்ரோஸ் இரண்டு இன்னிங்சிலுமே அரைச் சதம் பெற்றார். அணியிலிருந்து தூக்கப்படும் அபாயத்திலிருந்த மைக்கேல் ஹசி இரண்டாம் இன்னிங்சில் அபார சதமடித்து போராடியும் ஆஸ்திரேலியாவைக் காப்பற்ற இயலவில்லை. இங்கிலாந்து மண்ணில் இரண்டு ஆஷஸ் தொடரினை இழந்த இரண்டாவது தலைவர் என்ற அவப் பெருமை பொன்டிங்கை வந்து சேர்ந்தது. துடுப்பில் தத்தம் அணிகளுக்கு ஓட்டங்களை மலையாகக் குவித்த மைக்கேல் கிளார்க்கும்,அன்றூ ஸ்ட்ரோசும் தொடரின் சிறப்பாட்டக்காரர்களாகத் தெரிவாயினர். தொடரில் அதிக விக்கெட்டுக்கள் பெற்றவராக மூன்று ஆஸ்திரேலியர்கள் இருந்தும் (அட்டவணை பார்க்க) அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் அதிகம் பேர் ஆஸ்திரேலியர்கள் இருக்க. தொடரில் மட்டும் ஆஸ்திரேலியா தோற்க என்ன காரணம்?



Most runs
Andrew Strauss (474)
Matt Prior (261)
Paul Collingwood (250)
Michael Clarke (448)
Ricky Ponting (385)
Marcus North (367)

Most wickets
Stuart Broad (18)
Graeme Swann (14)
James Anderson (12)
Ben Hillfenhaus (22)
Peter Siddle (20)
Mitchell Johnson (20)

ஆஸ்திரேலியா இங்கிலாந்தை விட கூடிய சதங்கள் பெற்றும் அநேகமான போட்டிகளில் முன்னிலை திகழ்ந்தும் ஏன் தோற்றுப் போனது?



தேவையான போது ஒரு அணியாக அவுஸ்திரேலியா செயற்படவில்லை. அடித்தபோது எல்லோரும் சேர்ந்து அடிப்பது, ஒருவர் கைவிடுகையில் எல்லோரும் சேர்ந்து சொதப்புவது என்று இந்த தொடர் ஆஸ்திரேலியாவுக்கு குழப்பமானது. அணித் தெரிவுகளில் முதல் மூன்று போட்டிகள் வரை இங்கிலாந்து விட்ட தவறுகள் பெரிதாகத் தொடராத போதும் இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியா விட்ட தவறு மிக பெரிதாக அவர்களை தாக்கி விட்டது. ஷேன் வோர்ன் தவறான அணிக்கு இம்முறை ஆஷஸ் போய்விட்டது என்று தெரிவித்தார். (ஒரு நாள் தொடரில் இங்கிலாந்தை ஆஸ்திரேலியா உருட்டி எடுத்த பின்னர்) இங்கிலாந்தின் இளைய வீரர்களுக்கு நம்பிக்கை தருவதாகவும் ஆஸ்திரேலியாவின் மூத்த வீரர்களுக்கு எச்சரிக்கை கொடுப்பதாகவும் ஆஷசின் முடிவு அமைந்துள்ளது. தரப்படுத்தலிலும் முதலிடத்திலிருந்து ஆஸ்திரேலியாவை உருட்டி கீழே தள்ளி விட்டது. இங்கிலாந்தின் ஸ்ட்ரோசின் அதிர்ஷ்டமா இந்த வெற்றி என்பது அடுத்த தொடரில் தெரியும்.


பொன்டிங் மீண்டும் ஒரு தடவை இங்கிலாந்துக்கு தலைவராக வரும் வாய்ப்பு இல்லா நிலையில் எவ்வளவு நல்ல தலைவராக அவர் கணிக்கப்பட்டாலும் இம்முறை ஆஷஸ் தொடரும் அவர் கிரிக்கெட் வாழ்க்கையில் ஒரு அடர்த்தியான கரும் புள்ளியே. விட்ட தவறுகளை அடுத்த தொடர்களில் எப்படி சீர் செய்து கொள்ளப் போகிறது ஆஸ்திரேலியா?

# இருப்பு

நூலகம்



## சு'மைக்'கூட்டம்




விணைத்திறன் மிக்க சேவை நிர்வாகம் மற்றும் பிரஜைகளின் ஆலோசனை பெறல் என்பவற்றினூடாக பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை என்பவற்றுடன் இணைந்து செயற்படும் ஒரு உயரிய அமைப்பே ''இலங்கை ஆசிய நிலையம்'' உள்ளூராட்சி சபைகளின் வெளிப்படையான தன்மையை மேம்படுத்தி, சிறந்த பொருளாதார வளர்ச்சியை பொதுமக்கள் அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதே ஆசிய நிலையத்தின் முக்கிய நோக்கமாகும்.

The Asia Foundation




Photo & Video

# Sri Sugandan's STUDIO

289-1/1, GALLE ROAD,
COLOMBO-6
SRI LANKA.
Tel- 077 7309638, 011 2507265
Email- srisuganthans@yahoo.com

For Video Filming & Photography
Digital Video Filming & Editing
Album Makers (Karizma)
VHS to DVD

• Jeya Offset Printers, No. 29 St`Sebastian Street, Colombo 12. Tel: 0112 478444